இதழ் 210

# மண்

ஜேர்மனி / 2021
கார்த்திகை - மார்கழி / Nov - Dec

Physics
(இயற்பியல்)



Syukuro Manabe




Klaus Hasselmann



Giorgio Parisi



Peace (சமாதானம்)
Maria Ressa / Dmitry Muratov



Medicine - (மருத்துவம்)
David Julins / Ardem Patapoutian



Literature - இலக்கியம்
Syukuro Manabe



Chemistry - இரசாயனம்
Benjamin List / David Mac Millan

Economic
பொருளாதாரம்



David Card



Joshua D Angrist



Guido W Imbens

- 2021ம் ஆண்டு நோபல் பரிசு வெற்றியாளர்கள் -









”மண்” சஞ்சிகையின் வாசகர்கரும் யேர்மனி-டியூஸ்பேர்க் நகரில் வசித்தவருமான அமரர் சின்னத்தம்பி கிருஸ்ணகுமார் அவர்களின் இரண்டாவது ஆண்டு நினைவையொட்டி அவரது மனைவி, பிள்ளைகளின் நிதிப் பங்களிப்பில் மன்னார் - பேசாலையில் அமைந்துள்ள மரியன்னை இல்ல ஆதரவற்ற சிறார்களுக்கான உணவளித்தல் நிகழ்வு 12.09.2021









# உள்ளே


- எங்கள் கருத்து
- சிறுவர்வட்டம்
- வினாவிடைப்போட்டி
- சிறுவர்போட்டிகள்
- குறளும் பொருளும்
- கவிச்சோலை
- இலக்கியச் சாரல்
- சிறுகதை, கட்டுரை
- குறுக்கெழுத்துப்போட்டி
- சுகாதாரக்குறிப்புகள்
- செய்திக்கண்ணோட்டம்
- ஆதரவற்றோர் உதவிநிதி


**முகவரி:** V. Sivarajah
Am Windhoevel 18a
47249 Duisburg
Germany

**தொலைபேசி:** 0203/8073898

015254799233

**மின்னஞ்சல்:** v.sivarajah@arcor.de

**வங்கிவிபரம்:** Mann (Erde) Verein e.V. Duisburg
Stadtsparkasse Duisburg
Kontonummer: 225 000 421
Bankleitzahl: 350 500 00
IBAN-Nr.: DE41 3505 0000 0225 0004 21
SWIFT-BIC: DUISDE33XXX

# ஆசிரியர் பக்கம்...

எமது இலங்கை நாட்டில் மாத்திரமன்றி, உலக நாடுகள் அனைத்திலுமே கொவிட் தொற்று பெருமளவு வீழ்ச்சி நிலைமைக்குச் சென்று விட்டதென்பது உண்மை. ஆனாலும் மீண்டும் மீண்டும் கொவிட் தொற்று அலைகள் உருவாகலாமென்பதே மருத்துவ விஞ்ஞானிகளின் எச்சரிக்கை ஆகும். கொவிட் வைரஸின் மாறுபட்ட திரிபுகள் காரணமாக மீண்டும் வேகமான தொற்று அதிகரிப்புகள் உருவெடுப்பதற்கு வாய்ப்புகள் உண்டென்பதே மருத்துவ நிபுணர்களின் எச்சரிக்கையாகும். எனவே எல்லாமே முடிந்து விட்டதென நம்பிக்கை கொள்வது விவேகமல்ல.

ஆனாலும் இதுவரை ஏற்பட்டுள்ளதைப் போன்ற பாரதூரமான அலை மீண்டும் உருவாகுவதற்கு பெரும்பாலும் வாய்ப்பிருப்பதாகத் தோன்றவில்லையென்பதே பொதுவான நம்பிக்கையாக உள்ளது. உலகின் பெரும்பாலான நாடுகளில் அதிக மக்களுக்கு கொவிட் தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது. தடுப்பூசி ஏற்றும் பணிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதன் காரணமாக கொவிட் தொற்றினால் மக்களுக்கு ஏற்படுகின்ற மோசமான பாதிப்புகள் மற்றும் உயிராபத்துகள் பெருமளவில் கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளன. தடுப்பூசி ஒன்றே கொரோனாவுக்கு எதிரான வலுவான ஆயுதமென்பது உலகளவில் நிரூபிக்கப்பட்டுள்ளது.

அதேசமயம் மக்கள் மத்தியில் கொவிட் தொற்றைத் தவிர்ப்பதற்கான அடிப்படை சுகாதாரப் பழக்கவழக்கங்களில் விழிப்புணர்வு பெருகியுள்ளது. உலகில் கொவிட் தொற்றில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதற்கு இதுவும் ஒரு காரணமாகும். என்னதான் புதிய திரிபுகளால் அலைகள் உருவெடுத்தாலும் அதற்கு எதிராக தடுப்பூசி கைகொடுக்கும் என்பதுதான் பொதுவான நம்பிக்கை ஆகும்.

உலகின் போக்குக்கு ஏற்ப நாமும் மாற்றமடைவது அவசியம். அதாவது கொவிட் தொற்று கட்டுப்பாடுகளை உரியபடி பேணியவாறு மீண்டும் சுமுக நிலைமைக்குச் செல்ல வேண்டியவர்களாக நாம் உள்ளோம். இல்லையேல் உலகின் மற்றைய நாடுகளுடன் சமாந்தரமாகப் பயணிக்க முடியாமல் பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலைமைக்குச் செல்ல வேண்டிய பாதிப்பு எமக்கு ஏற்படலாம். இதனை ஒவ்வொருவரும் கவனத்தில் கொண்டு செயற்பட வேண்டியது அவசியம்.

பல கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டு விட்டதென்பதற்காக அனைத்து விழிப்புணர்வுகளையும் மறந்தபடி அலட்சியமாக செயற்பட முற்படுவோமானால் மீண்டும் பாரதூரமான கட்டத்துக்குச் செல்ல வேண்டிய நிலைமை ஏற்படலாமென்பதை நினைவில் கொண்டு ஒவ்வொருவரும் பொறுப்புணர்வுடன் நடந்து கொள்வதே புத்திசாலித்தனமாகும்.

## 21.11.2021வரை கொரோனா தொற்றும் மரணங்களும்!.. உலகில் முன்னணியிலுள்ள 14 நாடுகளில்..

| Fälle | Todesfälle |
|---|---|
| 258 Mio. +387.000 | 5,15 Mio. +4.401 |

| Ort | Fälle↓ | Todesfälle |
|---|---|---|
| USA | 47,7 Mio. +31.372 | 770.000 +126 |
| Indien | 34,5 Mio. +8.488 | 466.000 +249 |
| Brasilien | 22 Mio. +5.126 | 613.000 +72 |
| Vereinigtes Königreich | 9,85 Mio. +39.458 | 144.000 +61 |
| Russland | 9,17 Mio. +35.749 | 259.000 +1.216 |
| Türkei | 8,57 Mio. +21.177 | 75.042 +195 |
| Frankreich | 7,5 Mio. +19.749 | 119.000 +15 |
| Iran | 6,08 Mio. +4.340 | 129.000 +104 |
| Deutschland | 5,4 Mio. +26.241 | 99.130 +63 |
| Argentinien | 5,32 Mio. +646 | 116.000 +3 |
| Spanien | 5,08 Mio. | 87.810 |
| Kolumbien | 5,05 Mio. +2.649 | 128.000 +39 |
| Italien | 4,93 Mio. +9.707 | 133.000 +46 |
| Indonesien | 4,25 Mio. +314 | 144.000 +11 |

## சிறுவர் வட்டம்...




## ஆத்திசூடி...

### உடையது விளம்பேல்...

உன்னிடம் மிகச்சிறந்த பொருள் ஒன்று இருக்கின்றது. அந்தப் பொருளை மற்றவர் பார்த்து மெச்ச வேண்டும், புகழ்ந்து பாராட்ட வேண்டும் என நீ விரும்புகிறாய். ஆகவே உன்னிடமுள்ள அந்தப் பொருளைப் பற்றி உயர்வாகப் பிறரிடம் கூறுகின்றாய். அதைப் போன்றதொரு பொருளை எங்கும் காணமுடியாது என்று சொல்லிப் பெருமை கொள்கிறாய்.

உன்னுடைய இந்தச் செயலைக் கண்டு அவர்கள் என்ன? நினைப்பார்கள்..உன்னை ஓர் ஆடம்பரக்காரன் என்றோ, ஆடம்பரக்காரி என்றோ நினைப்பார்கள். பெருமைக்காரன் டம்பம் அடித்துக்கொள்ளுகிறான் என்று எண்ணி அவமதிப்பார்கள். ஆகவே உன்னிடம் உள்ள பொருளின் சிறப்பைப்பற்றிப் பிறரிடம் பெருமைப்பட்டுக் கொள்ளாதே. அது பிறர் உன்னை இகழ்ச்சியாக மதிக்க ஏதுவாகும். என எடுத்துரைக்கிறார் ஔவைப்பாட்டி.

### ஊக்கமது கைவிடேல்...

நீ ஒரு காரியத்தைச் செய்ய முற்படுகின்றாய். அப்போது அக்காரியம் முடிவதற்குள் பல இடையூறுகள் ஏற்படுகின்றன. தடங்கல்கள் முளைக்கின்றன. அப்போது உன் செயலில் தளர்ச்சி ஏற்படும். ஊக்கம் குறையும். அசிரத்தை உண்டாகும். இந்த நிலைகள் ஏற்படுமானால் நீ செய்ய ஆரம்பித்த காரியம் வெற்றியடையாது.

சிலந்தி வலை பின்னும்போது பல முறை அது உருவாக்கிய நூலிழை அறுந்துபோகும். ஆனால் அது தன் செயலை நிறுத்தாது தொடர்ந்து முயன்று வலையைப் பூர்த்தி செய்யும். மகாத்மா காந்திக்கு அவர் மேற்கொண்ட காரியத்தில் எத்தனை தடங்கல்கள், தொல்லைகள் ஏற்பட்டன. அதனால் அவர் துவண்டாரா?.. இல்லை..தளராது ஊக்கத்துடன் முயன்றார். நம் பாரதத்திற்குச் சுதந்திரம் வாங்கிக் கொடுத்தார். அது போல நீங்களும் எந்தக் காரியத்தைச் செய்தாலும் ஊக்கத்தைக் கைவிடக்கூடாது என்கிறார் ஔவைப்பாட்டி.

# ஆசை...

இவ்வுலகில் வாழும் மனிதரை வேறுபடுத்தி அவர்களைச் செயற்பட வைப்பது ஆசை எனலாம். ஒரு மனிதனின் எதிர்பார்ப்புடன் கூடிய உணர்வு ஆசை ஆகும். எதிர்பார்ப்புகள் கூடக்கூட ஆசைகளும் கூடிக்கொண்டே செல்லும். எங்கள் பருவம், காலம், வாழும் சூழல் என்பவற்றிற்கு ஏற்ப இது வேறுபடும்.

மாணவ பருவத்தில் கல்விமேல் ஆசைகொண்டால்தான் அதனைத் திறம்படக் கற்க முடியும். இலகுவில் புரிந்து கொள்வதற்கு பாடங்களை விருப்புடன் கருத்தூன்றிப் படித்தல் அவசியம். இதற்கு எமது சிந்தனை, செயற்பாடு என்பன கல்வி தொடர்பானவற்றுடன் ஈடுபாடு உடையதாக இருத்தல் வேண்டும். நாம் நம் செயற்பாடுகளில் முழு மனதுடன் விரும்பிச் செய்தால்தான் நல்ல பலனை அடைய முடியும்.

விளையாட்டுவீரர் தனது விளையாட்டில் ஆசை வைக்க வேண்டும். காவலாளி தனது தொழிலில் ஆசைகொள்ள வேண்டும். இவ்வாறு எந்தத்துறையைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் அதன் மேல் ஆசை வைத்தால்தான் அந்தத்துறையில் வெற்றியடைய முடியும்.

மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை என்பவற்றில் ஆசை கொண்டவர்களின் கதைகளை நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். புராண, இதிகாசக் கதைகள், மகான்கள், சித்தர்களின் கதைகள் என்பவற்றை உதாரணமாகக் கூறலாம்.. திருவள்ளுவர் அவாஅறுத்தல் என்னும் அதிகாரத்தில் எவ்விடையங்களில் ஆசை வைக்கக்கூடாது என்பதை அழகாகக் கூறியுள்ளார்.

”சின்னச் சின்ன ஆசை..சிறகடிக்க ஆசை”..ஆசை வைப்பது தவறல்ல அது ஏன்?..எங்கு?..எப்போது?..எதற்காகத் தேவை என்பதை உணர்ந்து வைக்க வேண்டும்.. அவ்வாறு வைத்த ஆசையே சிறந்ததாக இருக்கும் என்பது நல்ல கருத்தாகும். எனவே மாணவர்களாகிய எமக்கு எதில் ஆசை கொள்ள வேண்டும் என்பதை நன்கு உணர்ந்து செயற்படுவோம்!..

**(யேர்மனி-எசன் நகர தமிழ் மொழிச்சேவை கலாச்சார மன்றம் தமிழ்ப்பாடசாலை 2020 ஆண்டுவிழாவில் மாணவர் ஒருவரால் பேச்சுப்போட்டியில் பேசிய விடையம்) இது)**

# தெனாலி ராமன் கதைகள்... (Thenali Raman Stories)



## தெனாலி ராமனும் பூனையும்..

கிருஷ்ண தேவராயரோட அரண்மனையில் ஒரு நாள் ஒரு வாக்குவாதம் வந்தது அங்கே இருக்கிற அமைச்சர்கள் எல்லாரும் இந்த உலகத்துலையே எந்த விலங்கு புத்திசாலியானது, சமத்தானது, சொன்ன சொல் கேட்க கூடியது வாதித்டாங்கள் கடைசியா பூனை தான் சிறந்த வீட்டு விலங்கு என்று முடிவு பண்ணினாங்கள்.

உடனே அரசர் நம்ம நாட்டில உள்ள பூனைங்களுக்கு எல்லாம் ஒரு போட்டி யாரோட பூனை சொன்ன சொல்கேட்டு நடக்குதோ அந்தப் பூனையோட முதலாளிக்கு ஆயிரம் பொன் காசு கொடுக்கப்படும் என அறிவிச்சார் இதைக் கேட்ட தெனாலிராமனுக்கு ஒரே குசி தானும் அந்தப் போட்டியில் கலந்துகிட்டு ஜெயிச்சா அந்த பணம் நமக்குதான்னு நினைச்சாரு..போட்டி அன்றைக்கு எல்லாரும் தங்களோட பூனைகளைக்கொண்டு வந்து போட்டியில் கலந்துகொண்டாங்கள்.போட்டிய தொடங்கியது முதலமைச்சர் எல்லாப் பூனைகளுக்கும் தட்டுல பால் வைப்போம் எந்தப் பூனை நாம சொல்றதுக்கு முன்னாடி பால் குடிக்குதோ அது தோல்வியான பூனை என்று சொன்னாரு..

அது மாதிரியே எல்லாப் பூனைக்கும் பால் கொண்டு வந்து வச்சாங்கள். ஆனா தெனாலிராமனோட பூனையைத் தவிர எல்லாப் பூனைகளும் பாலைக் குடிச்சதுங்க இதப்பாத்த அரசர் தெனாலிராமன் பூனைதான் ஜெயிச்சதுனு அறிவிச்சு பொன் முட்டையைத் தெனாலி ராமன் கிட்ட கொடுத்தாரு அரசர் தெனாலி ராமன் கிட்ட அது எப்படி உன் பூனை மட்டும் பால் குடிக்க வரவே இல்லைனு கேட்டாரு

அதுக்கு தெனாலிராமன் அரசே ஒரு நாள் பூனைக்கு நான் சூடான பாலை கொண்டு வந்து வச்சேன் அவசரப்பட்ட பூனை அந்தப் பாலை குடிச்சு வாய சுட்டுகிடுச்சு அதுல இருந்து நான் சொல்ற வரைக்கும் அது பால குடிக்காதுனு சொன்னாரு தெனாலிராமன் பழக்கப்படுத்திய விதத்த எல்லாரும் பாராட்டுனாங்க




## முல்லாவின் கதை!.. பூனை எங்கே?..

முல்லா நஸ்ருதீன் தனது நண்பர்களுக்கு விருந்தளிப்பதற்காக இறைச்சி வாங்கி, தன் மனைவியிடம் அளித்தார். சாப்பாடு தயாராகி மேஜைக்கு வந்தபோது இறைச்சியைக் காணவில்லை. முல்லாவின் மனைவி இறைச்சி முழுவதையும் சாப்பிட்டிருந்தார். முல்லா, தன் மனைவியிடம் சாப்பாட்டில் இறைச்சி எங்கே? என்று கேட்டார்.

பூனை சாப்பிட்டுவிட்டதாக முல்லாவின் மனைவி கூறினார். மூன்று பவுண்டு இறைச்சியையுமா? என்றார் நஸ்ருதீன். ”ஆமாம்” என்று சாதித்தார் அவர் மனைவி. அப்போது அங்கே தென்பட்ட பூனையைத் தூக்கி எடைபோட்டுப் பார்த்தார். பூனை மூன்று பவுண்டுகள் எடை இருந்தது.

”இது பூனையின் எடை என்றால், இறைச்சி எங்கே? ”.. என்று கேட்டார் முல்லா. ”இது வெறும் இறைச்சியின் எடைதான் என்றால் பூனை எங்கே? ”.. என்று கோபத்துடன் கேட்டார் முல்லா!..

---

## அறிந்துகொள்வோம்!..


1-அழுகையால் சிவனின் அன்பைப் பெற்றவர் - மாணிக்கவாசகர்

2-என்கடன் பணிசெய்து கிடப்பதே எனத்தொண்டாற்றியவர் - திருநாவுக்கரசர்

3-எல்லோரும் இன்புற்று வாழவேண்டும் என விரும்பியவர் - தாயுமானவர்

4-கண்ணனை நினைத்து உருகி வாரணம் ஆயிரம் பாடியவர் - ஆண்டாள்

5-யசோதையாக மாறி கண்ணனைத் தாலாட்டியவர் - பெரியாழ்வார்




**கணக்கு-1:-**

இங்கு காணப்படும் இலக்கங்களைப் பாவித்து, எண்களை வட்டத்துக்குள் நிரப்ப வேண்டும் எந்தப் பக்கத்தால் கூட்டினாலும் கூட்டுத்தொகை 26 வருவேண்டும். ஒரு முறை எழுதிய இலக்கம் மறுமுறை எழுதக்கூடாது..

**கணக்கு-2:-**

ஒவ்வொரு பெட்டிக்குள்ளும் வரவேண்டிய எண்களைக் கண்டுபிடிக்க வேண்டும். எந்தப் பக்கத்தால் கூட்டினாலும் கூட்டுத்தொகை 130 வரவேண்டும்-ஒரு முறை எழுதிய இலக்கம் மறுமுறை எழுதக்கூடாது..

முயற்சிசெய்து பாருங்கள்..முடியாவிடின் பக்கங்களைப் புரட்டுங்கள் விடை????????

| | | | | |
|---|---|---|---|---|
| 16 | | | | 30 |
| | | | 18 | |
| 31 | 15 | | 37 | |
| | 34 | | | |
| | 33 | | | |

# இரப்பரும் பென்சிலும்..



ரப்பரைப் பார்த்து பென்சில் சொல்கிறது. ஒவ்வொருமுறையும் நான் செய்யும் தவறுக்கு என்னைச் சுத்தப்படுத்தி, தூய்மையாக்கி விடுகிறாய். ”ஆனால் என்னைச் சுத்தம் செய்யும்போது நீ கரைந்துகொண்டே போகிறாயே” அது எனக்கு வருத்தமாக இருக்கிறது என்றது.

ரப்பர் சொன்னது அது எனது கடமை. நான் படைக்கப்பட்டதே அதற்குத்தான். என்னைக்கண்டு நீ வருந்த வேண்டாம். இதில் எனக்கு முழு மகிழ்ச்சியே. என்னால் உன் தவறுகள் அழிக்கப்பட்டு, நீ திருத்தங்களுடன் முன்னேறிச் சென்றால் அதுவே எனது வெற்றியாகும்.

”நான் கரைவதைப்பற்றி எனக்குக் கவலை இல்லை” என்றது அந்த ரப்பர். யாருமில்லை நம் பெற்றோர்தான். அவர்கள் ஆயுள் முடியும்வரை நம் தவறுகளை திருத்திக்கொண்டே இருப்பார்கள்...நம் மீது பொறாமைப்படாத பொறுமைசாலிகள் என்றால் அந்த இரு உள்ளங்களான பெற்றோர்கள் மட்டுமே!..

---

## தெரிந்துகொள்வோம்!..

1-நதிகள் இல்லாத தேசம் - அராபியா

2-ஆங்கிலேயர் இலங்கையைக் கைப்பற்றிய ஆண்டு - 1815

3-உலகின் எட்டாவது (8) அதிசயம் - சிகிரியா ஓவியம் (இலங்கை)

4-உலகின் மிகப்பெரிய கடல் - தென்சீனக்கடல்

5-வானவில்லில் 7 வர்ணங்கள் உள்ளன என்று கண்டுபிடித்தவர் - ஐசக் நியூட்டன்

# தமிழ் அறிவோம்!..

## இரட்டைக்கிளவி உணர்த்தும் பொருள்..

1-விறு விறு - விரைவு
2-கல கல - சிரிப்பு
3-விண் விண் - வலித்தல்
4-கம கம - நறுமணம் வீசுதல்
5-சட சட - முறிந்து விழுதல்
6-திடு திடு - விரைவான ஓட்டம்
7-பள பள - மின்னுதல்
8-சல சல - நீர் ஓடும் ஓசை
9-டாண் டாண் - மணி ஓசை
10-கட கட - வண்டிசெல்லும் ஒசை

## கூட்டத்தைக் குறிக்கும் மரபுச்சொற்கள்..

01-அறிஞர் - அவை
02-நடிகர் - குழு
03-சனம் - திரள்
04-மக்கள் - கூட்டம்
05-கல் - குவியல்
06-தென்னை - தோப்பு
07-திறப்பு - கோர்வை
08-ஆ (பசு) - நிரை
09-மான் - கூட்டம்
10-ஆசிரியர் - குழாம்
11-உடு - திரள், தொகுதி
12-பல் - வரிசை
13-மலை - தொடர்
14-நெல் - குவியல்
15-கடை - தொகுதி

## இரு சொற்கள்...

1-அம்மா - தாய், அன்னை
2-மலை - குன்று, வரை
3-அன்பு - பாசம், நேசம்
4-மதி - நிலா, சந்திரன்
5-வீடு - இல்லம், மனை
6-சிந்தை - மனம், உள்ளம்
7-பறவை - பட்சி, புள்
8-நெருப்பு - தீ, அனல்
9-புத்தகம் - ஏடு, நூல்
10-உவகை - மகிழ்ச்சி, சந்தோஷம்

## பொன் மொழிகள்..

-சிரமங்கள் படமுடியாமல்
சிகரங்களைத் தொடமுடியாது!..

-போராட்டத்தைப் பாடிய பாரதி கூட
ஒரு நாள் கூட அழுது பாடவில்லை!..

-மகிழ்ச்சி என்பது வெளியிலில்லை
ஒவ்வொருவருடைய மனதிலும்தான்
மகிழ்ச்சி இருக்கின்றது!..

# சுடுக்கோ புதிர்ப்போட்டி இலக்கம் - 28

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 8 | 3 | | | | |
| | | | | 7 | 4 | | 5 | |
| | | | | | | | | |
| | | 4 | | | 6 | | | 8 |
| 2 | | | | 8 | | | | 9 |
| | 6 | | 1 | | 2 | 4 | | |
| | | 5 | 7 | | | 9 | | 3 |
| 9 | 8 | | | | | | | 5 |
| | | 1 | | 6 | 5 | | | 4 |

# சிறுவர் குறுக்கெழுத்துப் போட்டி 121
## (கார்த்திகை-மார்கழி 2021)

| | | | |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 |

இ-வ

01-04 கிறிஸ்தவர்களின் திருநாள்.

வ-இ

07-06 உடல் உறுப்புக்களில் ஒன்று.

16-13 மாணவர்களுக்கு இந்த வளமும் நிறைய இருக்க வேண்டும்.

கீ-மே

14-06 விளையாட்டுப் பொருள் ஒன்று.

16-04 கவிச்சக்கரவத்தி என்று இவரை அழைப்பர்.

மே-கீ

01-09 நீர்வாழ் உயிரினம்

07-11 நேரப்பொழுது ஒன்று.

(விடைகள் இன்னொரு பக்கத்தில்)

### எதிர்ப்பொருட் சொற்கள்..

01-உறவு - பகை
02-மழை - வெய்யில்
03-கோலம் - அலங்கோலம்
04-வீரன் - கோழை
05-ஞாபகம் - மறதி
06-அமுதம் - நஞ்சு
07-நண்பன் - பகைவன்
08-நல்லது - தீயது
09-உறக்கம் - விழிப்பு
10-தர்மம் - அதர்மம்
11-நாடு - காடு
12-பிறப்பு - இறப்பு
13-ஆரம்பம் - முடிவு
14-மானம் - அவமானம்
15-வாட்டம் - செழிப்பு

### ஒத்தகருத்துச் சொற்கள்..


01-அசதி - அயர்ச்சி
02-அறிவு - புத்தி
03-அயல் - அருகில்
04-அபயம் - தஞ்சம்
05-ஆசிரியர் - உபாத்தியார்
06-ஆண்டவன் - இறைவன்
07-இல்லம் - வீடு
08-இடும்பை - துன்பம்
09-இல்லறம் - திருமணம்
10-ஈதல் - கொடுத்தல்
11-உறவு - சொந்தம்
12-ஊசல் - ஊஞ்சல்
13-எழில் - அழகு
14-ஏகம் - அழகு
15-ஐசுவரியம் - செல்வம்

### தொகுதிக்குரிய மரபுச்சொற்கள்..

01-திராட்சை - கலை
02-சோளம் - கதிர்
03-தென்னை - கலை
04-மா - கொத்து
05-புளி - கொத்து
06-நெல் - கதிர்
07-பனை - குலை
08-முந்திரி - குலை
09-வாழை - குலை
10-பூ - மஞ்சரி, கொத்து

### உள்ளீட்டு மரபுப் பெயர்கள்..

01-நெல் - அரிசி
02-கோதுமை - அரிசி
03-உழுந்து - பருப்பு
04-அவரை - பருப்பு
05-தினை - அரிசி
06-பலா, தோடை - களை
07-கற்றாளை - சோறு
08-பயறு - பருப்பு
09-கடலை - பருப்பு
10-மா, வாழை - சதை



| | | | | |
|---|---|---|---|---|
| 16 | 28 | 27 | 29 | 30 |
| 38 | 20 | 35 | 18 | 19 |
| 31 | 15 | 26 | 37 | 21 |
| 23 | 34 | 17 | 32 | 24 |
| 22 | 33 | 25 | 14 | 36 |

**கணக்குப் புதிர் விடைகள்**

## காய்களின் பிஞ்சுகளும் அவற்றின் பெயர்களும்...

01-பூவோடு கூடிய இளம் பிஞ்சு - பூம்பிஞ்சு
02-இளங்காய் - பிஞ்சு
03-மாம்பிஞ்சு - வடு
04-பலாப்பிஞ்சு - மூசு
05-தேங்காயின் இளம்பிஞ்சு - குரும்பை
06-பனை-நுங்கின் இளம்பிஞ்சு - குரும்பை
07-சிறு குரும்பை - முட்டுக்குரும்பை
08-முற்றாத தேங்காய் - இளநீர்
09-இளநெல் - கருக்கை
10-வாழைப்பிஞ்சு - கருக்கை
11-இளம்பாகு - நுழாய்
12-வாழை - கச்சல்
13-பூசணி - பிஞ்சு
14-கத்தரி - பிஞ்சு
15-மிளகாய் - பிஞ்சு

## வித்துக்களின் மரபுப் பெயர்கள்..

01-ஆமணக்கு - முத்து
02-பூசணி - விதை
03-பாகல் - விதை
04-வேம்பு - விதை
05-நிலக்கடலை - பருப்பு
06-தினை - அரிசி
07-நெல், சோளம் - மணி
08-கத்தரி - விதை
09-பலா, புளி - கொட்டை
10மிளகாய் - விதை

## மலேசியாவில் நடைபெற்ற தனித் தமிழியக்க மாநாட்டில் வெளியிடப்பட்ட நுட்பவியல் கலைச் சொற்கள் :

| | |
|---|---|
| புலனம் | WhatsApp |
| வலையொளி | youtube |
| படவரி | Instagram |
| அளாவி | WeChat |
| பற்றியம் | Messanger |
| கீச்சகம் | Twtter |
| தொலைவரி | Telegram |
| காயலை | skype |
| ஊடலை | Bluetooth |
| அருகலை | WiFi |
| பகிரலை | Hotspot |
| ஆலலை | Broadband |
| இயங்கலை | Online |
| முடக்கலை | Offline |
| விரலி | Thumbdrive |
| வன்தட்டு | Hard disk |
| தடங்காட்டி | GPS |
| மறைகாணி | cctv |
| எழுத்துணரி | OCR |
| ஒளிர்விமுனை | LED |
| முத்திரட்சி | 3D |
| இருதிரட்சி | 2D |
| ஒளிவீச்சி | Projector |
| அச்சுப்பொறி | printer |
| வருடி | scanner |
| திறன்பேசி | smart phone |
| செறிவட்டை | Simcard |
| மின்னூக்கி | Charger |
| எண்மின் | Digital |
| மின்வெளி | Cyber |
| திசைவி | Router |
| தம் படம் - சுயஉரு, சுயப்பு. | Selfie |
| சிறுபடம் | Thumbnail |
| போன்மி | Meme |
| திரைப் பிடிப்பு | Print Screen |
| மைவீச்சு | Inkjet |
| சீரொளி | Laser |

நல்ல முயற்சி நாமும் மனனம் செய்வோம் .

- தமிழுணர்வு கொண்டோர் இதை நண்பர்களுக்கும் பகிரலாம். இனிய தமிழில் நாளும் பேசுவோம்!..

### பத்துக் கட்டளைகள்!..

### நட!..நட!..நடந்துகொண்டிரு!..

01-நட சர்க்கரை சமப்படும்
02-நட உப்பு உடன்படும்
03-நட வாதம் விடைபெறும்
04-நட இரத்த அழுத்தம் சீர்படும்
05-நட பருமன் தடைப்படும்
06-நட இதயம் வலுப்படும்
07-நட நம்பிக்கை வெளிப்படும்
08-நட நோய்கள் ஓடிடும்
09-நட உடல் உருப்படும்
10-நட உற்சாகம் பொங்கிடும்
நடந்துகொண்டே இருங்கள் ஆயுள் நீண்டிடும்!..

# நல்நெறி பற்றி......

-வி நந்தகுமார்-

## உனது முயற்சியே உனது உயர்ச்சி...

உற்சாகம் உயர்ந்த முன்னேற்றத்திற்கு முதற்படி.
உன்னுடைய சுகமும் துக்கமும் உன்னாலே உண்டாகிறது.
உன்னையே உணரும்போது, உயர்வு உன்னை நாடி வருகிறது.
உங்களிடம் சக்தி உள்ளது, அது உங்களை வழி நடத்துகிறது.
உலகத்தில் உங்களை உயர்த்துவது, ஊக்கம் நிறைந்த உழைப்பு.
உனது கடமை தவறும்போது, உறவும் நட்பும் முறிந்து போகிறது.
உதாசீனப் படுத்தப்படும்போது, உழைப்பு உயர்வை எட்டாமல் உடைகிறது.
உயர்வான பண்பாட்டை ஊன்றிப் பற்றும்போது, உயர்வடைகிறாய்.
உன்னிடம் உள்ள உறுதி, உன்னை உயர்ந்த நிலைக்கு அழைத்துச் செல்கிறது.
உலகத்தில் உழைப்பே உயர்வையும், உறவையும், உண்டாக்கி உரம் தருகிறது.
உங்களுடைய உற்சாகத்தின் முதுகெலும்பு தினமும், உரமூட்டப்பட வேண்டும்.
உலகத்திற்கு உத்தமனை உருவாக்கும் பெற்றோர்கள் உன்னதமானவர்கள்.
உன்னால் முடியும் என்ற உறுதி உள்ளத்தில் உறையும்போது, உயர்வடைகிறாய்.
உலக மண்ணின் மாற்றங்களிற் கேற்ப மதி நுட்பம் மலர வேண்டும்.
உரிய காலத்தில் உதயமாகும் உயர்வான எண்ணங்களே, உன்னை உயர்த்தும்.
உனது கால்கள்உனக்குரிய பாதையில் நடக்கவேண்டும், என்பதைஉணர்ந்துகொள்.
உன்னுடைய கௌரவம், சிறப்பு, மதிப்பு மக்களால் தீர்மானிக்கப்பட வேண்டியவை.
உண்மையை உதாசீனம் செய்யாமல் உயர்வை உண்டாக்க வேண்டும்.
உணர்ச்சியுள்ளபேச்சு உயர்வடைகின்றது, அதுஅனைவராலும்உள்வாங்கப்படுகிறது.
உப்புச்சவர்அற்ற உருப்பெறாத விஷயங்களைப் பெரிதாக்கி,பிரச்சனைப் படாதீர்கள்.
உறவில்தெம்பை ஊட்டும்போது,வெறுப்புக்கள் விலகிவிருப்புக்கள் வேரூன்றுகின்றன.
உரிய நேரத்தில் உறையும் உன்னிடமுள்ள உபாயங்கள், உன்னை உயர்த்தும்.
உற்றாருக்கும், ஊருக்கும் உபதேசிக்க முன், முதலில் நீ அதனை உள்வாங்கு.
உள்ளத்தின்பாரம், இறக்கப்படவேண்டும், இல்லையேல்அதுஉறங்கவிடாதுஉறுத்தும்.
உன்னால் உரம்போட்டு வளர்க்கும் உட்பகைத்தீ, உன்னையும் சேர்த்து எரிக்கும்.
உச்சக்கட்டக்கோபத்தில் இருந்துஒருபோதும் உயர்வான சிந்தனைகள் வெளிவராது.
உனக்கென்றுசிந்தனையுண்டு, உயர்வான சிறப்பானசிந்தனையைச் சேர்த்துக்கொள்.
உங்கள்ஆற்றலுக்கும், திறமைக்கும், ஏற்றவாழ்க்கை உங்களுக்குநிச்சயம் உண்டு.
உன்னை நீயே உள்நோக்கித் துருவிப் பார்த்து, தெம்பைத்தேடக் கற்றுக்கொள்.
உனக்குள்ள ஆற்றல் உன்னிடம் இருந்தால் தான், உன்னை உயர்த்தும்.

# குறளும் பொருளும்...

## செங்கோன்மை:-

541. ஓர்ந்துகண் ணோடா திறைபுரிந் தியார்மாட்டுந்
தேர்ந்துசெய் வஃதே முறை.

542. வானோக்கி வாழு முலகெல்லா மன்னவன்
கோனோக்கி வாழுங் குடி.

543. அந்தணர் நூற்கு மறத்திற்கு மாதியாய்
நின்றது மன்னவன் கோல்.

544. குடிதழீஇக் கோலோச்சு மாநில மன்ன
னடிதழீஇ நிற்கு முலகு.

545. இயல்புளிக் கோலோச்சு மன்னவ னாட்ட
பெயலும் விளையுளுந் தொக்கு.

546. வேலன்று வென்றி தருவது மன்னவன்
கோலதூஉங் கோடா தெனின்.

547. இறைகாக்கும் வையக மெல்லா மவனை
முறைகாக்கும் முட்டாச் செயின்.

548. எண்பதத்தா னோரா முறைசெய்யா மன்னவன்
றண்பதத்தாற் றானே கெடும்.

549. குடிபுறங் காத்தோம்பிக் குற்றங் கடிதல்
வடுவன்று வேந்தன் றொழில்.

550. கொலையிற் கொடியாரை வேந்தொற்றுதல் பைங்கூழ்
களைகட் டதனோடு நேர்.

# குறளும் பொருளும்...

## அரசின் நீதிமுறை...

541. பிறருடைய குற்றங்களை ஆராய்ந்து, யாரிடத்திலும் தாட்சணியம் காட்டாமல் நடுநிலையுடன் ஆராய்ந்து செய்வதே நீதி முறையாகும்

542. உலகிலுள்ள உயிரினங்கள் மழையை நோக்கி வாழ்கின்றன. குடிமக்கள் மன்னனின் செங்கோலை நோக்கி வாழ்கின்றார்கள்.

543. அந்தணரின் வேத நூலுக்கும், அறத்திற்கும் அடிப்படையாக நின்று உலகைக் காப்பது அரசனின் செங்கோலாகும்.

544. குடிமக்களை அன்புடன் அரவணைத்து ஆட்சி செய்கின்ற அரசனின் அடியை உலகம் பின்பற்றும்.

545. செங்கோல் முறை தவறாது ஆட்சிசெய்கின்ற அரசனது நாட்டில் பருவ மழையும் நிறைந்த விளைவும் ஒரு சேர ஏற்படுவனவாகும்.

546. ஒருவனுக்கு வெற்றி தருவது வேல் அல்ல..மன்னனின் செங்கோல் ஆகும். அச்செங்கோலுக்கு வளையாது இருத்தல் வேண்டும்.

547. உலகை அரசன் காப்பாற்றுவான். அரசன் நீதி தவறாது ஆட்சி செய்தால், அந்த நீதியே அரசனைக் காப்பாற்றும்.

548. குடிமக்களின் பார்வைக்கு எளிதாய் இல்லாமலும், ஆராய்ந்து நீதி செலுத்தாமலும் உள்ள அரசன் தாழ்நிலை அடைந்து தானே கெடுவான்..

549. குடிமக்கள் தன்னாலும் பிறராலும் வருந்தாமல் காப்பாற்றி, அவர்களுடைய குற்றங்களுக்குத் தக்க தண்டனை கொடுப்பதே அரசனின் தொழில்.

550. கொடியவரை அரசன் கொலைக் குற்றத்தால் தண்டிப்பது தக்காரைக் காத்தற்கே. அது உழவன் காளையை நீக்கிப் பயிரைக்காத்தலுக்கு ஒப்பாகும்.

# காசிஆனந்தனின் சிந்தனைகள்...



## தளிர்ப்பு:-

இலையுதிர்காலம். மரம் மொட்டையாக நின்றது. புல் மேய்ந்த மாடுகள் மரத்தை இரக்கத்தோடு நோக்கின. "உன் இலைகள் விழுந்துகொண்டிருக்கின்றன உன்னைப் பார்த்தால் அழவேண்டும் போலிருக்கிறது"...என்று ஒரு மாடு தழுதழுத்த குரலில் கூறியது.

மரம் சொன்னது "நான் அதைப்பற்றிக் கவலைப்படவில்லை புதிய தளிர்களுக்காக அவை விழத்தான் வேண்டும்.".. நிமிர்ந்தே நின்றது மரம். அது சொன்னது..

**"விழுவதற்கெல்லாம் அழுவதற்கில்லை"**

## இயக்கம்:-

இரவு..கடலில் வந்துகொண்டிருந்த படகுகளில் ஒன்று மற்றதைப் பார்த்துக் கேட்டது..."அதோ கடற்கரையில் நின்று தன்னந்தனியாக நின்று ஒளிவீசும் கலங்கரை விளக்கத்தைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய்?"..தெரியவில்லையே என்றது இரண்டாம் படகு.

முதல் படகு சொன்னது.."கூட்டமாகப் பணியாற்றலாம் என்பதில்லை தன்னந்தனியாகக்கூட ஒருவர் தொண்டாற்றலாம் என்று நமக்கு அது கூறவில்லையா"?.. வார்த்தைகளை அது நறுக்கி வைத்தது.

**"தனி என்றிருப்பினும் பணி என்றிரு"**

# தந்தையும் மகளும்!



ஒரு தந்தையும் மகளும் ஆற்றின் பாலத்தை கடக்க முயல்கின்றனர் தந்தை சொல்கிறார், என் கையை கெட்டியமாக பிடித்துக் கொள்ளம்மா. ஆற்றில் தண்ணீர் நிறையப் போகிறது..! பத்திரம் அம்மா ” என்று. உடனே, மகள் சொல்கிறாள், அப்படியா.! நீங்க என் கையை இறுக்கமாகப் பிடியுங்கோ அப்பா” என்று...

இரண்டுக்கும் என்னம்மா வித்தியாசம்”என்று தந்தை கேட்கிறார்..!நான் உங்கள் கையை பிடித்தால், ஏதேனும் தவறு நடந்தால் கையை விட்டுப் பிரிய வாய்ப்பிருக்கிறது. நீங்கள் பிடித்தால் எந்த காரணத்திற்காகவும் என் கையை விடமாட்டீர்கள் இல்லையா..? அப்பா” என்றாள்மகள்...

**உண்மை..!அன்பு எங்கிருக்கிறதோ அளவு கடந்த நம்பிக்கையும் அங்கே..!**

---

## ஆண்டுகளின் நிறைவில் கொண்டாடப்படும் விழாக்கள்...

| | |
|---|---|
| -1ம் வருட நிறைவில் | - காகித விழா |
| -10ம் ” | - தசாப்த விழா / அலுமினிய விழா |
| -15ம் ” | - பளிங்கு விழா |
| -20ம் ” | - பீங்கான் விழா |
| -25ம் ” | - வெள்ளி விழா |
| -30ம் ” | - முத்து விழா |
| -40ம் ” | - மாணிக்க விழா |
| -50ம் ” | - பொன் விழா |
| -60ம் ” | - வைர விழா |
| -75ம் ” | - பவள விழா |
| -80ம் ” | - அமுத விழா |
| -100ம் ” | - நூற்றாண்டு விழா |

# குறுக்கெழுத்துப்போட்டி-184
## (கார்த்திகை-மார்கழி - 2021)

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | 32 | 33 | 34 | 35 |
| 36 | 37 | 38 | 39 | 40 | 41 | 42 |
| 43 | 44 | 45 | 46 | 47 | 48 | 49 |

இ-வ
01-04 கிறிஸ்தவர்களின் பெருநாள்.
10-13 இலக்கியத்தில் ஒருவர்.
24-26 கொடிய மிருகம்.
44-45 இலங்கையின் கற்பகதரு மரம்.
வ-இ
07-04 அகிம்சை போதித்த உத்தமர்.
10-08 நீர் எடுப்பற்குப் பாவிககப்படுவது (கு)
21-18 வீடு கட்டவும் பயன்படும்.
28-26 இலங்கையில் ஒரு நகரம்.
49-47 உயிரினங்களிடையே இது இருப்பதால்தான் உலகம் வாழுது.
கீ.மே
24-10 சமையல் உணவுப்பொருள் ஒன்று.
43-29 கல்வி இது போன்றது என்றும் கூறுவார்கள்.
44-16 விளையாட்டுப் பொருள் ஒன்று.
49-35 ஒற்றுமைக்குப் பெயர் போன பறவை.
மே-கீ
01-29 உடற்பயிற்சிகளில் இதுவும் ஒன்று.
07-35 அறிவை மேம்படுத்துவது இது.
20-41 வறிய மக்களில் வாழ்வு இப்படியாகத்தான் இருக்கின்றது.
24-45 சிலருக்கு இந்த வளம் அதிகமாக இருக்கும்.
32-46 இலங்கையில் இந்த நிலப்பரப்புதான் போரால் அதிகம் பாதிக்கப்பட்டது.
33-47 எப்பொழுதும் நமக்கு இது இருந்தால்தான் முன்னேற முடியும்.

(விடைகளை கண்டு பிடியுங்கள். முடியாவிடின். பக்கங்களைப் புரட்டுங்கள் விடை கிடைக்கும்)

# பழமொழியும் அதன் விளக்கங்களும்..

1-மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்காதே (இது தவறானது)
"மண் குதிரை நம்பி ஆற்றில் இறங்காதே" (இதுதான் சரியானது)
அதாவது ஆற்றுப் படுக்கைகளில் மண் குதிர்கள் (மேடாக) இருக்கும். அவற்றில் கால் வைத்தால் கால்கள் உள்ளே பதிய அந்த மண் மேடு காணாமல் போய்விடும் அந்த மண் குதிரை (குதிர் ஐ) நம்பி ஆற்றில் இறங்காதே என்பதுதான் உண்மை.

2-"உண்டி சுருங்குதல் பெண்டிர்க்கு அழகு"
உண்டி என்பது சாப்பாடு. அதைச் செய்வதற்கு நேரம் அதிகமாகும்போது பெண்கள் சமையலறையிலேயே முடங்கி விடுகிறார்கள். இதனால் இவர்கள் மற்ற விசயங்களிலிருந்து பின்னுக்குப் போய்விடுகிறார்கள். இந்த நிலை மாறுவதற்கு அவர்கள் சுவையான சமையலைக் குறுகிய நேரத்திற்குள் செய்யக் கற்றுக்கொள்ள வேண்டும். இதுவே பெண்களுக்கு அழகு என்பது பொருள்.

3-"மாமியார் உடைத்தால் மண்குடம் மருமகள் உடைத்தால் பொன்குடம்"(இது தவறு)
"மாமியார் உழைத்தால் மண்ணுக்கு உரம்..மருமகள் உழைத்தால் பொன்னுக்கு உரம்" என்பதுதான் உண்மையான பழமொழி.
அதாவது விவசாயி வீட்டில் மாமியாரும் மருமகளும் சேர்ந்து நிலத்தில் உழைத்தால் பொன்னும் பொருளும் சேரும் என்பதே பொருளாகும்.

4-"வெந்து கெட்டது முருங்கை வேகாமல் கெட்டது அகத்தி"
முருங்கைக்கீரையை அதிகம் வேக வைத்தால் அதன் சுத்துகள் நமக்குக் கிடைக்காமல் போய்விடும். அகத்திக்கீரையை அதிகம் வேகாமல் பயன்படுத்தினால் முழுமையாக அதன் சத்து கிடையாது போய்விடும்.

5-"அற்பனுக்கு வாழ்வு வந்தால் அர்த்த ராத்திரியில் கொடை புடிப்பான்"
அர்ப்பணித்து வாழ்ந்து வந்தால் அர்த்த ராத்திரியிலும் கொடை கொடுப்பான் என்பதே உண்மையான பழமொழி.

6-"ஊரான் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும்"
ஒருவனின் மனைவி கர்ப்பமாக இருக்கும்போது(என்னதான் அவன் மனைவியாக இருந்த போதிலும் அவள் இன்னொருவன் அதாவது ஊரான் பிள்ளைதானே) அவளை நன்றாகக் கவனித்துக்கொண்டால், அவளின் வயிற்றில் வளரும் தன் பிள்ளை தானாக வளரும் என்பதாகும்.

# இன்பத் தமிழ்...! (சென்ற இதழ் தொடர்ச்சி)

குண்டக்க என்றால் என்ன? மண்டக்க என்றால் என்ன?

11. கடை , கண்ணி

கடை: தனித் தனியாக உள்ள வியாபார நிலையம்.

கண்ணி : தொடர்ச்சியாக அமைந்த கடைகள் , கடை வீதிகள்.

12. கார , சாரம்

காரம் : உறைப்பு சுவையுள்ளது.

சாரம்: காரம் சார்ந்த சுவையுள்ளது.

13. காடு , கரை

காடு : மேட்டு நிலம் (முல்லை).

கரை : வயல் நிலம் .( மருதம், நன் செய் , புன்செய்).

14.காவும் , கழனியும்

கா : சோலை.

கழனி: வயல். (மருதம் ).

15. கிண்டலும் கேலியும்

கிண்டல் : ஒருவன் மறைத்த செய்தியை அவன் வாயில் இருந்து வாங்குவது.

கேலி : எள்ளி நகைப்பது.

16. குண்டக்க மண்டக்க

குண்டக்க : இடுப்புப்பகுதி,

மண்டக்க: தலைப் பகுதி,

சிறுவர்கள் கால் பக்கம், தலைப்பக்கம் எது எனத் தெரியாமல் தூக்குவது, வீட்டில் அந்தந்தப் பொருள் அங்கங்கே இருக்க வேண்டிய இடத்தில் இல்லாமல் இருப்பது.

17. கூச்சல் குழப்பம்

கூச்சல் : துன்பத்தில் சிக்கி வாடுவோர் போடும் சத்தம். (கூ - கூவுதல்)

குழப்பம்: துன்பத்தின் மத்தியில் உண்டாகும் சத்தத்தைக் கேட்டு, வந்தவர்கள் போடும் சத்தம்.

18. சத்திரம் சாவடி

சத்திரம் : இலவசமாக சோறு போடும் இடம் ( விடுதி ).

சாவடி: இலவசமாகத் தங்கும் இடம்.

19.தோட்டம் துரவு , தோப்பு துரவு

தோட்டம் : செடி, கொடி, கீரை பயிரிடப்படும் இடம்.

தோப்பு : கூட்டமாக இருக்கும் மரங்கள். துரவு: கிணறு.

20. நகை நட்டு

நகை : பெரிய அணிகலன்கள் (அட்டியல், ஒட்டியாணம்.)

நட்டு : சிறிய அணிகலன்கள்.

# நினைவுக்கோலங்கள்..

-வசந்தா ஜெகதீசன்-

உறைந்துள்ள அகிலத்தின்தடயம்
அனலாக கொதிக்கின்ற அவலத்தின்விடயம்
சுனாமியின் கொடூரம் சுடுகின்றது
சுழற்சியில் ஆண்டுகள் விரைகின்றது

நத்தாரின் வருகையில் நானிலம் சிறக்கும்
திலீபனின் நினைவோடு வீரத்தின் வேட்கை
மாவீரர் உணர்வோடு மறவரின் தியாகம்

பாலனின் பிறப்போடு பாரிற்கே உவகை
பண்பாட்டுக் கோலங்கள்
பறைசாற்றும் உணர்வை

ஏற்றமும் இறக்கமும் எதிர்வு கொள்ள
ஆண்டுகள் மாறுமே அசைந்தோடி
ஆயிரம் நிகழ்வுகள் விரைந்தோடி
அசையென மீட்டுவோம் அன்றாடம்
அகிலத்தின் வாழ்க்கை வெற்றியின்பதிவு

ஞாலத்தின் விழுதாய் நாட்டிடும் முறைமை
நம்மின மிளிர்விலே எத்தனை தகமை
உயர்வு கொள் வளமே உலகிற்கு வேராய்

வரலாற்றுத் தடயமே வாகையாய் மிளிரும்
வண்ணத்துக் கோலங்கள் வையத்தில்சாட்சி
புரட்சியின் புதுயுகம் பூக்குமே ஆட்சி!..



# மீட்பரே!...

மார்கழிக்குளிரில்
மாடடைக்குடிலில்
மனிதரை மீட்க
மனிதனாய் பிறந்தவரே
நீங்கள்
எமக்காய் சுமந்த
சிலுவையின் கனம்
காயங்கள்
உணர்ந்தும்
மனித பாவங்களின் கனம்
கடுகளவேனும்
குறையவில்லையே.
மீட்பரே!
இன்னும் மனம் திரும்பாத
மனிதர்கள் மத்தியில்
மீண்டும் உங்களின்
பிறப்போ?...

சோபியா பாஸ்கரன்.

## உலக திசைகளை அறி!...

நிமிரும் இனவெறி அழி
மனித நிறம் சிறந்தது அறி
எல்லா மதம் உயர்ந்தது தெளி
எல்லா மொழிகளும் இனியது விழி!

உலகப் பயணம்
உன் சிந்தனையை வானம் போல் விரிவாக்கும்..
மென்மையான உன் தூரதேசக் கனவுகள் மேன்மையாகும்..!
பயணம் எதிரிகளை விட
நண்பர்களை அறிமுகப்படுத்தும்
அச்சம் முறித்து ஆண்மையோடு சுற்றுகையில்
இனிய உலகம் இன்ப கீதம் பாடும்!

வணக்கம்
அறியாதவரை அறிமுகப்படுத்தும்
புன்னகை பூவையரையும்
பரவசப்படுத்தும்
மாற்று இனத்தவரை நேசிக்கத்
தூண்டும்!

எல்லைகள்
பண்பாடு பாரம்பரியம் மொழிகளுக்கு அப்பால்
மனிதர்கள் வாழ்கிறார்கள்..
பயணம்
பிற மனிதரோடு
புன்னகை பகிர செய்கிறது!

**சத்யா பிரான்சிஸ்**

## "மனதில் உறுதி வேண்டும் வாக்கினிலே நேர்மை வேண்டும்' மகாகவி பாரதியார்)

எங்கே தொலைந்ததுஎன் நேர்மை?
நான் கட்டிக்காத்த மன உறுதி
எந்தப் பாலைவனத்தில் புதைந்தது?
எனது நேர்மையைச் சமூகம்
சல்லடையாகச் சலித்து
பந்தயக் குதிரையாக விரட்டியது..
நீதிக்காக நான் போர்க்கொடி
தூக்கியபோது

கைவிலங்கு பரிசளிப்பு..!பூவுலகம்
அலாவுதீன் அற்புத விளக்கை விட
மிகப்பெரிய அற்புதங்களால் நிறைந்தது..
உலகின் அற்புத சுழற்சியை இயக்கிய
என்னை அறிவியல் வரவேற்றது..
என் நேர்மையைச் சிறைபடுத்த
வஞ்சக வலை விரிக்கப்பட்டது..
என் தூய்மையை மாசுபடுத்த
திசையெங்கும் வதந்தி பரப்பப்பட்டது..

பூவுலகம்
அழகியதுதான்
தீய மனிதர்கள் மட்டும்
அழுகியப் பழங்களாக
ஆண்டவனால் நிராகரிப்பு..!
பாரதி கவிதைகள்
தீக்கனலை என் நெஞ்சில் மூட்டியது..
தீப்பிழம்பாய் நான் எழுந்தபோது
அரசியல் அநீதி அனுப்பியது
தீயணைப்பு வண்டி..!

**சத்யா பிரான்சிஸ்**



## நெய்விளக்கேற்றிடுவோம்!

வலிசுமந்து வாழ்வமைத்த பாதையல்லவா
வழிபார்த்துத் தேடுகின்ற வஞ்சியல்லவா
மொழிதேசம் சுமந்திட்ட இதயமல்லவா
முகவுரைகள் பதியமிட்ட முகங்களல்லவா

புலியாகச் சுழன்றிட்ட பாவையல்லவா
புயலாகப் பிறந்திட்ட பூவையல்லவா
புறநானூற்று வீரத்தின் சாட்சியல்லவா
புதுப்பரணி கண்ட புரட்சியல்லவா..

விதையாகி வீழ்ந்திட்ட விருட்சமல்லவா
விடியல்தேடிப் புறப்பட்ட வேதமல்லவா
வலிகொண்ட வரலாற்றுப் பாடமல்லவா
வரிகளில் அடங்காத தியாகமல்லவா..

ஒருமித்த கனவுகளின் இல்லங்களில்
ஒளியேற்றி நிற்கின்ற காலமல்லவா
ஒளிர்வாகிக் காத்திருக்கு கார்த்திகையும்
ஒன்றாகி ஏற்றிடுவோம் நெய்விளக்கு..

**-கீதா பரமானந்தன்-**

## வீசு தென்றல் நீ யெனக்கு!.
## விரியுமலர் நானுனக்கு!.

பெண்ணே நீ சூடிய மல்லிகை
கண்ணிலே கவர்ந்து கமழுது கனவிலே.
விண்மீன்கள் வேகமாய் துள்ளுகிறதே.
எண்ணிலே கணக்கிலடங்கா எண்ணங்கள்
எனையே அமிழ்த்துகிறது உனையெண்ணி.

வாய்க்காலில் நான் குளிக்க
வயற் பரப்பில் நீ நடக்கேக்க,
முயலொன்று துள்ளிக்குதிக்க
பாய்ந்தது நீருக்குள்ளே.

விரிந்த தாமரை விழித்தது சூரியனை
புரிந்த ஞாயிறோன் புன்னகை புரிந்தான்.
வரிந்து கட்டிக்கொண்டவள் சூரியகாந்தி
பரிந்துகேட்டாள் பாசமதை மென்மையாக.

பொய்கையிலே பூக்கள் விரிய
புது வாசம் மூக்கில் நுழைய,
கந்தர்வ லோகம் செல்ல
கங்கை விடு தூதனதோ.

மங்கை யுனை நானடைய
மகத்துவமாய் மாண்புடனே,
கங்கை கொண்டு வந்த தூதை
கவ்வியே பிடித்துவிட்டேன்.

வீசும் தென்றல் வந்து என்னை
விரிய வைத்த செயல் என்னே.
பெண்னே வீசு தென்றல் நீ யெனக்கு
பெண்னே விரியுமலர் நானுனக்கு.

**கெங்கா ஸ்ரான்லி**

# இதுதானே வாழ்க்கைச் சக்கரம்!..

-கவி மீனா-

வாழ்ந்தது போல் நீ நடித்தாய்
வாழ்வதாக நானும் நடித்தேன்
உலகமேடையிலே நீயும் நானும் நடிகரே
எச்சில் சோற்றை உண்பவனும்
அடுத்தவன் இலையில் எடுப்பவனும்
எல்லாமே பசிக்குத்தான்
சிலர் வாழ்வு உடல் பசிக்குதான்...

ஆட்டுக்கல்லு அம்மிக்கல்லு என
பூட்டி வைத்தவரும்
போகும் போது ஒரு கூழாம் கல்லை
கூட எடுத்துச் செல்லவில்லை
காணி வீடு என பொத்திப் பொத்தி
பார்த்த நிலம் இன்று
யார் யாரோ வந்து போகும்
சந்தை மடம் ஆனது...

ஊருக்கு உலை வைப்போர் வீட்டில்
இன்று உலை வைக்கவில்லை
இது கொரோனா தந்த தண்டனையா
இல்லை கடவுள்கொடுத்த தண்டனையா?
யார் அறிவார் உலகில்?...

எவர் வருவார் எவர் போவார்
என்பதும் தெரியாது
சுயநலமான வாழ்க்கையிலே
யாரும் உண்மை அன்பும் இல்லை
நன்றி உணர்வும் இல்லை
யார்தான் ஒட்டி இருந்தாலும்
பாடையிலே போகையிலே
யாரும் கூட வருவதுமில்லை...

காதென்ன தோடேன்ன கழுத்து நிறைய
நகையென்ன கை குலுங்க
வளையல் என்ன
பட்டென்ன பொட்டென்ன
பவிசாய் வாழ்ந்தென்ன
பேய் பிடித்தால் மூலையிலே
இருளோடு ஒதுங்கிடுவர்
தீயில் இட்டால் எல்லாமே
தீஞ்சுதானே போய் விடும்...

காற்றை உள்ளிழுத்து நீரைப் பருகி
நிலத்தில் நடந்து ஆகாயத்தைப்பார்த்து
கடைசியிலே தீயோடு போகுது
இந்த ஐம்பூதங்களின் சேர்கையே
இந்த உடலை தந்தது அந்த
ஐம் பூதங்களினாலே உயிரும் வாழுது
அந்த ஐம் பூதங்களுக்குள்ளே
உடலும் சாயுது...

சுத்திச் சுத்தி பூமி வருகுது
அதில் சுத்திச் சுழன்று உறவும் பெருகுது
வந்து போகும் உறவும் கூட
நடக்கும் பயணியும்
பாதை மாறிப் போகுது
பயணங்களும் மாறுது
மனித நேயம் ஒன்று மட்டும்
மாறாது இருந்து விட்டால்
மானிட வாழ்க்கையும் மாசாகப் போகும்
இதுதானே வாழ்க்கை சக்கரம்
அதுவே ஓம் என்னும் தத்துவம்!..

# சுனாமிப் பேரலைகள்!..

இரா . சம்பந்தன்

கடல் குடித்த தென்னாடு
கன்னித் தமிழின் தாய்நாடு
லெமூரியாக் கண்டம்
காணாமல் போனதன்று !
கடற்கோளின் முற்றுகையால் . . .

கடற்கோள்கள் கண்விழித்து
காசினியின் பரப்புகளை
கைப்பற்றிச் செல்வது
புதியதல்ல இந்தப் பூமிக்கு !

2004 ம் ஆண்டின் பிற்பகுதி
மார்கழித் திங்கள் 26 ம் நாள் ,
மாங்கனித் தீவையும் ,
மருங்கிருந்த சில நாடுகளையும் ,
சுனாமிப் பேரலைகள் அடித்துத்
துவைத்துக் கந்தலாக்கின !

வானளாவிய அலைக்கரங்களினால்
தேனுலாவிய தேசங்களின்
வனப்பையும் வளங்களையும் ,
ஊனுலாவிய உயிர்களையும் ,
வாரியெடுத்தது வாரி !

பின்னோக்கிச் சுருங்கிய கடல்
முன்னோக்கிப் பாய்ந்து
கண்ணிமைக்கும் வினாடிக்குள்
கரையோரப் பகுதிகளைக்
கபளிகரம் செய்தது !

தரையின் பகுதிகளைத்
தண்ணீர் தின்பதென்ன !
கரைமீறியே வந்து மக்களுக்குக்
கண்ணீரைத் தருவதென்ன !

வள்ளல் குணங்கொண்ட
வற்றாப் பெருங்கடல்
அள்ளக் குறையாச் செல்வங்களை
அன்றாடம் அளித்திருக்கும் .

முரல்கின்ற சங்குகளும்
மின்னுகின்ற முத்துக்களும்
கடல்தரும் செல்வங்களே . . . .

அலைமேவும் கடல்மீது
வலைவீசும் மீனவர்க்கு
அள்ளித்தரும் மீன்களை . . . .

வெள்ளியலை வீசியே
உள்ளங்களைக் கொள்ளை கொள்ளும்
தள்ளி நின்று பார்க்கையிலே
தாவிவந்து கால் நனைக்கும் . . . .

மேகங்கள் உறிஞ்சும் உப்புநீர்
கடலின் நற்கொடையே !
நற்கொடை யளிக்கும் கடலே
மக்களை நலிவுறச் செய்யலாமா ?

நாளும் நானிலத்தை
நலமுடன் தாலாட்டும் கடல்
ஆக்கிரமிப்பாளர் உட்புகுந்து
அழிவுகளைத் தருவதுபோல்
அழிவுகளைத் தருவதென்ன !

# எங்க ஊரு பண்ணையாரு!..

பொன் குலேந்திரன் (கனடா)

எங்க ஊரு பண்ணையாரு,
எசமான் என்ற மிடுக்குடன் வருகிறாரு.
பிரம்மச்சாரி பண்ணையாரு ,பட்டு வேட்டியோடு ,
பசும் பச்சை வயல் வரம்பில் நடந்து வருகிறாரு .
எங்க ஊரு வயல்கள் எல்லாம் ,
எங்க பண்ணையாரின் சொத்துங்கோ.
நம்ம வேலு பயல் குடை பிடிக்க,
நாலு பக்கம் பார்த்தபடி பண்ணையாரு வருகிறாரு.
அவர் கால்கள் இரண்டிலும் புது செருப்புங்கோ ,
அவர் காதுகள் இரண்டிலும் தங்க கடுக்கனுங்கோ.
தலை வாரி அவர் தலைக்கு பின்னால் ஒரு குடும்பியுங்கோ
அவர் கழுத்தில் பத்துப் பவுண் தங்க சங்கிலியுங்கோ..

பெண்களைப் பார்த்து பல்லைக் காட்டி அவர் சிரித்தால்,
பளீச் என்று தங்கப் பல்லு. மின்னுதுங்க .
அகன்ற அவர் நெற்றியில் சந்தனப்பொட்டுங்கோ,
அவர் விரல்களில் மூன்று மோதிரமுங்கோ.
குனிந்து நாற்று நடும் பெண்களைப் பார்த்து,
குமட்டுச் சிரிப்புடன் அவர் நடக்குராங்கோ .
குனித்து நாற்று நடும் பெண்களின் பின் அழகைப் பார்த்து,
குறும்புச் சிரிப்பு பண்ணையார் சிரித்தாருங்கோ..

எங்கேயடி தங்கம் உன் கைக் குழந்தை ,
ஏணையில் தூங்கிறான் சாமி அதோ அந்த மரத்தில் .
நாற்று நடும் குனிந்த தங்கம்,
நிமிர்த்து நின்று பதில் சொன்னாள்.
என் வீட்டுக்கு பக்கம் நீ குழந்தை யோடு வந்தால்,
எட்டு படி அரிசி நான் உனக்கு தருவன்.
அய்யோ எசமான் அய்யோ எசமான் என்,
அத்தானை அனுபுறன் எட்டு படி அரிசி வாங்க.
அவளின் பதிலில் திருப்தி இல்லாமல்
அடுத்து ஒருவளை அவரின் கண்கள் தேடின
எங்கேயடி வள்ளி உன் புருசனை
எங்கேயடி கன காலமாய் அவனை காணம்.

அய்யோ எசாமான் அவர் குடிச்சுப் போட்டு
அசையாமல் வீட்டில் படுத்து இருகிக்கிறாரு
அப்ப நீ என் வீட்டு பக்கம் வரலாமே
ஆறு படி அரசி வந்து நீ வாங்கி போகலாமே
அனுப்புகிறேன் எஜமான் அனுப்புகிறேன்,
அவர் தம்பியை பின்னேரம் அனுப்புகிறேன் அரிசி வாங்க.
அவள் சொன்ன பதில் திருப்தி இல்லாமல்
அடுத்தவள் வடிவை பார்த்து பண்ணையார் கேட்டார்.
என்னடி வடிவு உன் புருஷனை கன காலம் காணோம் ,
எங்கடி அவன் எந்த ஊருக்குப் போட்டான் ?
பட்டணம் போயிட்டான் சினிமாவில் நடித்து,
பத்துக் காசு சம்பாதிச்சு கொண்டு வர வடிவு சொன்னாள்.
வீட்டுப் பக்கம் அப்ப நீ என் வரலாமே,
வந்து நீ பத்துப் படி அரசி வாங்கி போகலாமே .
எசமான் அனுப்புகிறேன் எசமான் நிச்சயம் அனுப்புகிறன்,
என் தம்பியை வீட்டை போய் அனுப்புகிறன் .
அவள் சொன்ன பதிலால் அவர்
அதிருப்தியில் மேலும் வரம்பில் விரக்தியில் நடந்தார்
அங்கும் இங்கும் தேடி அவர் கண்கள்,
அழகி அஞ்சுகத்தை தேடி அலைந்தது .
பாலனைக் கண்டதும் அவனிடம் கேட்டார்,
பாலா பாலா எங்கேடா உன் அக்கா அஞ்சும்?
அஞ்சுகம் அக்கா மூண்டு மாசம் முழுகாமல் இருக்கா ,
அதனாலை தலை சுத்திலை வீட்டிலை படுத்து இருக்கா.
அக்காவின் அஞ்சு படி அரிசி நான் வாங்க,
அவசியம் நான் வாறன் நீங்கள் ஒமேண்டால்.
நீ வர வேண்டாம் நீ வரவேண்டாம் ,
நீ உன் வயல் வேலைய தொடர்ந்து நீ பார்.
அங்கும் இங்கும் பண்ணையார் கண்கள்
அகிலாவை தேடியது அவர் பார்வை
வயல் வரம்பின் அவர் வைத்த கால்கள்
வழுக்கி பண்ணையார் சேற்றில் தொப் என்று விழுந்தார் .
வழுக்கி முகம் குப்பற பண்ணையார் சேற்றில் விழுந்திட்டார்
வாங்கடி வாங்கடி எல்லோரும் ஓடிப் போய் அவரைத் தூக்குவம்
எல்லாப் பெண்களும் அவரைப் போய் தூக்கினர்
எதிர்பாராத விதத்தில் பெண்களின் ஸ்பரிசம் அவருக்கு கிடைத்தது!..

# அட்டைப் படக்கவிதை மண் சஞ்சிகை இதழ் -209




நெஞ்சமெலாம் நிறைந்திட்ட நியாயத்தின் தலைவியாகி
நிகருக்கு ஒப்பீடில்லாத மனிதநேயத்தின் திருஉருவமாகி
எங்கெங்கு சென்றாலும் மிக எளிமையின் ஒருவடிவமாகி
ஏற்றத்தின் உச்சியிலும் இறுமாப்பிலாது இலங்கும் நாயகி

தஞ்சமளிக்கும் தேசங்களில் தாராளம் காட்டுகின்ற தனம்
தானம் தர்மமென்றே தரணிக்கேவழங்கிடும் தாயின் குணம்
வஞ்சகம் சூதின்றியே வாஞ்சையளித்துதவும் நல்லமனம்
வரலாற்றில் எவருமடங்கிடாதபடி வாகைசூடிய மலர்வனம்

சங்கமிக்கும் தலைமைகளுள் சரியாகவே எடுக்கும் முடிபும்
சான்றோரும் வாழ்த்துகின்ற சத்தியத்தின் மொத்த வடிவும்
அங்கேலா மேக்கல் என்றால் அரசியலரணாயான துணிவும்
ஆளுமையும் நேர்மையும் அணிகளாய்ப் பூண்டாய் தினமும்

நான்காண்டுத் தேர்தலில் நான்குமுறை தலைமைத்துவம்
நாடுபோற்றும் அதிபர்க்குள்ளே நலம்பயக்கும் தனித்துவம்
வாஞ்சையோடு வழங்குவதில் வாரியிறைக்கும் சமத்துவம்
வருங்காலம் உனைவாழ்த்தி வரைந்திடுமே புதுச்சரித்திரம்.

**-அம்பலவன்புவனேந்திரன்..**

# கடலின் கரையும் கண்ணீர்த் திரையும்



விரைகின்ற காலவெள்ளமின்னும் வெந்நீரை வார்ப்பதுமேன்
விரக்தியுடன் வேதனையையும் விரவியிங்கு கிடப்பதுமேன்
கரைந்திடாத நினைவுகளும் கன்றிப்போன வடுக்களுமாய்
காணுகின்ற வேளையெல்லாம் கண்ணீரைப் பிழிவதுமேன்.?

தரையினிலே வாழ்வோரின் தாபரிப்பைப் பறித்ததுமேன்
தயவு தாட்சண்யமின்றி தலைகளையே முறித்ததுமேன்
இரைதேடியே எழுந்துவந்து எம்மண்ணின் உயிர்குடித்து
இறுமாப்புடன் கடந்த உனக்கு ஈவிரக்கம் இல்லாததுமேன்..?



வரைகளைத் தொட்டஅலை வஞ்சனையைச் செய்ததுமேன்
வண்ணத்துப் பூச்சிகளை வதைக்கவைத்து கொன்றதுமேன்
நுரைகளில் கால்நனைத்து நெய்தல்மண்ணில் வாழ்ந்தவரின்
நீள்வாழ்வைப் பறித்தெடுத்திட்ட நீசச்செயல் ஆழிக்குஏன்..?

நிரையாய் நின்றமனைகளை நீலக்கடல்வந்து தின்னமேன்
நிறைவாகவாழ்ந்த சனத்தை நீள்அலைகள் கொன்றதுமேன்
விரைவாகவந்து நள்ளிரவில் வேல்கொண்டு தாக்கியதுபோல்
வேண்டுதல் செய்தோரையும் விழுங்கியேப்பம் விட்டதுமேன்?



வரைகின்ற வரிகள் எமக்கு வடிகால்களாய் ஆகிடாதோ
வானமன்று அழுதசோகமும் வற்றித்தான் போய்விடாதோ
கரைதாண்டிய பேயலைகள் இனிக்கட்டுக்குள் நின்றிடாதோ
காலமும் எமக்கெனவொரு கருணையினைக் காட்டிடாதோ.?

திரைகடலைத் தண்டித்திடவொரு தீர்ப்பொன்றும் வாராதோ
தீவுகள் மூழ்கிடாதவண்ணம் திட்டுகளாய் உயர்ந்திடாதோ
நரைக்காத வேதனைகள் மெல்ல நலிந்துதான் போகாதோ
நாட்களை நகர்த்திடுதற்கு மனதில் நல்லுறுதிபெருகாதோ..?

**-அம்பலவன்புவனேந்திரன்..**

## நான் ஒரு கறுப்புச் சட்டைக்காரன்!..

பிறப்பதற்கும் பெயர் இடுவதற்கும் அன்றே வாய்ப் பூட்டு
நடப்பதற்கும் வீதி கடப்பதற்கும் என்னை நோக்கி மிரட்டு
படிப்பதற்கும் தண்ணீர் எடுப்பதற்கும் என் மீது தீட்டு
உண்பதற்கும் உடுப்பதற்கும் முரட்டுக் குத்து
குளிப்பதற்கும் குதிப்பதற்கும் இல்லை இன்னும் அனுமதிச் சீட்டு
-போகட்டும் உயிரற்றவைகளே இதற்காய்
சுதந்திர பிரகடனம் செய்வதில்லை எனக்கு மட்டும் வேணும்
ஒரு கறுப்புத்துணித் துண்டு!..

மாடு எருமை குளிக்கத் தடையில்லை
வண்டுக்கும் பொன்வண்டு என்றுபெயர்
மலங்களில் தங்கிவிட்டு கோவில் கருவறையில்
தொட்டு விளையாடுகின்றது ஈக்கள்
என் கை பட்ட கோவில் எழுந்து நிற்கின்றது
நான் உண்டாக்கிய பருத்தி நூல் ஐயரின் தோழில் ஆடுகின்றது
எனக்கு மட்டும் வேண்டும் - ஒரு கறுப்புத் துண்டு!..

கறையான்கள் படித்துக் கிழிக்கின்றன புத்தகங்களை
நான் செய்த மரக்கறிகளும் பழங்களும்
என் கைபட்டுக் சகங்கவில்லை என் முதுகு வியர்வைபட்ட
நெல் இவர்களுக்கு நெருஞ்சியாகவில்லை!..

பிறகென்ன..இறைவன் என்னை மட்டும் மனுநீதி சொல்லி
மறுதலிக்க யாருக்கு உரிமை உண்டு
இந்த இறைவன் படைப்பு என்னை மட்டும்
எழுதிக் கிழிக்க என்ன தப்பு அப்பியது
அதைத் துடைக்கக் கறுப்புத் துண்டு ஒன்று
கட்டாயம் வேண்டும் -ஆம் நான் ஒரு
கறுப்புச் சட்டைக் காரன்!..

-ப.பசுபதிராசா-

## சுனாமியின் சுவடுகள்...

ஆயிரம் ஆயிரம் மகத்தான உயிர்கள் பலியாகி
ஆண்டுகள் பலகண்டு ஆழப்பதிந்த நினைவுகள்
ஆறாது துயர் அனைவரினதும் நெஞ்சங்களில்
ஆத்மாக்களின் நினைவாய் இதயங்கள் இரங்குகின்றன!....

கத்தும் கடலலை தந்திட்ட கோரக் கொடுமைகள்
சொத்துக்களை இழந்து சொந்தங்களை இழந்து
முத்தான மண்ணிலே முகவரியும் தொலைந்தது
பித்துப் பிடித்தது போல் வாழும் உறவுகள் அங்கே!...

சுமைகளும் சோகங்களும் பலவழிகளில் சுமந்தாலும்
அமையவில்லை இன்னும்தான் அமைதி வாழ்வு
தமை நாடி உதவிக்கரங்கள் உயரும் எனவும்
இமை மூடாது ஏங்கிநிற்கும் ஊர் உறவுகள் ஆயிரம்!..

கடந்தே காலங்களும் கரைந்து ஓடிடவே
திடமான வாழ்வினுக்கோர் தீர்வும் இல்லை
இடம் பெயர்வு இன்னல்கள் இன்றும் நிலையாகி
சுட்ட வடுவாய் சுனாமியின் சுவடுகள் எங்கும்!...

**-இராஜேஸ்வரி சிவராசா-**

## சுனாமியின் வடு மாறவில்லை!..

காலங்கள் கரைந்து கவலைகள் தீரவில்லை
ஓலங்கள் அழுகையும் ஓய்ந்ததாய் இன்றுமில்லை
பச்சிளம் பாலகர்க்கு பச்சதாபம் காட்டுவாரில்லை
மிஞ்சிய உறவுகளின் மனநலம் பேணுவாரில்லை!
புவனமெங்கும் சண்டை பூமியிலே அமைதியில்லை
கவனமது அரசுகட்கு கர்ம சிந்தனையில்லை
தேடிக்கொடுத்தவையோ தேசமெங்கும் சேரவில்லை
கேடிகளின் காலம்தான் கலியுகம் மாறவில்லை!
பாரினில் பசிபட்டினி பலர் பார்வையோ அங்கில்லை
ஊரின் நிலமை சொல்ல ஊடகத்துக்கு உரிமையில்லை
சுற்றமும் திருந்தவில்லை சுகாதாரமும் பேணுவாரில்லை
குற்ற உணர்வுமில்லை குடிகளைக் காப்போருமில்லை!
தயவுகாட்ட எம் இனத்தை தாங்கிடும் நாடுமில்லை
உயர்வுநோக்கி சூழல்பேண உழைப்பாரும் எவருமில்லை
வெற்றுப் பேச்சு அன்றி வேதனைகள் தீரவில்லை
சுற்றிய ஆண்டுகளில் சுனாமியின் வடு மாறவில்லை!

**கலைவாணி ஏகானந்தராசா.**

# நாட்டு நடப்பு - 5

-கவிமீனா-

கொரோனா வந்ததும் வந்திச்சுது அது போறா பாடாய் தெரியலை என்னமோ சீனாக்காரன் செய்தது எல்லாம் கெதியிலை உடையும் என்பாங்கள் ஆனால் சீனாக்காரன் செய்து விட்டது என்று சொன்ன கொரோனா அழியாமல் பெருகிக் கொண்டு அல்லே போகுது பாருங்க!

ஆயுதம் இன்றி அணுகுண்டு இன்றி நாலம் உலக மகாயுத்தம் நடக்குது இதில் யார் போவார் யார் இருப்பார் என்பது யாருக்குத்தான் தெரியும்?

வேலை வெட்டி இல்லாமலே வீட்டுக்குள்ளே முடங்குவோரும் சோறு தண்ணியில்லாமே பசியில் வாடுவோருமாய் நாட்டுக்கு நாடு பஞ்சம்

சினிமாவும் விழுந்தது வியாபாரமும் படுத்தது விவசாயமும் முடங்குது விலைவாசியும் ஏறிப்போச்சுது போற போக்கைப் பார்த்தால் வாய்க்கரிசி கூடக் கிடைக்காமல் போகலாம் காசு இருப்பவருக்கும் வாங்க அரிசி இல்லை என்றால் காசையா சாப்பிட முடியும்?

இது மட்டுமா வேலைக்குப் போக முடியாது சனம் வீட்டுக்குள்ளே முடங்கியதால் வீட்டுக்குள்ளே ஆணும் பெண்ணும் ஆளை ஆளு குத்தம் சொல்லி ஓயாத சண்டை சில வீட்டில் இந்த நிலைமையிலும் சனத் தொகை பெருகுது வளவு இருந்தால் தோட்டத்தையாச்சும் செய்யலாம் வெளி நாடு வந்தவருக்குத் தோட்டம் ஏது துரவுதான் ஏது?

வீட்டிலை பெண்களுக்கு வேலைக்கு ஓய்வில்லை வெட்டியாக ஆண்கள் ரெலிபோனில் அரட்டை இதிலை ரெலிபோன் யாருக்கு என்று அதிலும் சச்சரவு

காதுக்குள்ளை சொருகிவிட்டு கைதொலை பேசியிலை 24 மணி நேரமும் ஊர்வம்பு அரட்டை என கதைச்சுக்கொண்டு வேலை செய்யும் பெண்களுமுண்டு சிலரு சின்னதிரை ஊர்வம்பு என பொழுது போக்கினதும் உண்டு. இப்ப வீட்டிலை கணவன்மார் வோச் டோக் போலே நிற்பதாலே சில பெண்களுக்கு ஒன்றும் செய்ய முடியாமல் திரு திரு என்று முழிக்கிறாங்க பாருங்க!

வளவு இருந்தால் தோட்டத்தையாச்சும் செய்யலாம் வெளி நாடு வந்தவருக்கு தோட்டம் ஏது துரவுதான் ஏது?

அதிகமான தமிழருக்கு நாலு சுவருக்குள் வாழ்க்கை அதிலும் குளிர் வந்துவிட்டால் சிலர் ஜன்னலை கூட திறந்து விட்டு நல்ல காற்றை உள்ளை விடாத வீடு அங்கு சுவாத்தியம்தான் ஏது?

ஊரிலை காடு கடற்கரை வரப்பு என நடந்தவர்கள் கூட வெளிநாடு வந்து கூண்டுக்குள்ளே வாழ்க்கை!

கூண்டுக் கிளியை திறந்து விட்டால் அது பறந்து போகுது ஆனால் வெளிநாடு வந்து கூண்டுக்குள்ளே வாழுகின்ற மனிதர்களைத் திறந்து விட்டாலும் பறக்க முடியாது காரணம் வாழ்க்கை மட்டுமல்ல காலும் முடங்கிப் போனது இதுதாங்க உண்மை!

கொரோனா வந்ததாலே சுவாசிக்க காற்றும் இல்லை முகமூடி போட்டதாலே மூச்சும் முட்டுது முக மூடிக்குள்ளே நிற்பது நண்பனா எதிரியா என்பதும் தெரியாமே காலங்களும் ஓடுது

இரண்டு ஊசி போட்டாச்சு நின்மதியாய் இருக்கலாம் என பார்த்தால் மூன்றாம் ஊசியும் போடச் சொல்லி வருமாமே சில வேளை ஒவ்வொரு வருடமும் போட்டாலும் போடலாம்..

ஏதோ இருக்கும் வரை குத்த ச்சொன்னா குத்தத்தானே வேணும் இறந்து விட்டால் மனிதனும் ஆளை ஆளு குற்றம் சொல்லி குத்தமாட்டாங்க ஊசியும் குத்த மாட்டங்க பாருங்க!

இதை விட பெரிய பிரச்சனை என்னவென்றால் கன பேரு வீட்டிலை இந்த கொரோனாவாலும் பசி பஞ்சம் அடக்கு முறையாலும் பயத்தாலும்



ஆளை ஆள் பார்த்துப் பார்த்து அலுப்பு தட்டிப் போனதாலே மனநிலையும் பாதிச்சு மனநோயாளி ஆகி போனவங்க பல பேரு பாருங்க!

சில ஆண்கள் ஓடிஓடி அடுத்த பெண்களைப் பார்த்து சிரித்து நடுவிலை நின்று கும்மாளம் போட்டு தானும் சுப்பர்மான் என்று ஜம்பம் காட்டினவங்க இப்ப இவர்களுக்கு மேடை இல்லை மைக்கும் இல்லை கொண்டாட்டமும் இல்லை..

முடங்கிப் போன வாழ்க்கையில் தான் செய்த தவறுகளை உணர்ந்து பார்க்க முடியாட்டி மனிதனாக பிறந்தும் பயனேதும் இல்லையே!
கொரோனா சிலருக்குப் படிப்பினை யாகவும் சிலருக்கு தண்டனையாகவும் அமைந்ததுதான் உண்மை!

---

**கமலநாதன் என்னும் அற்புத மனிதர் காலமானார்!..**

"மண்" சஞ்சிகையின் நீண்டகால வாசகரும் யாழ் அரியாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும்யேர்மனி சோலிங்கன் நகரை வதிவிடமாகக் கொண்டவரும் எனது நீண்டகால நண்பரும் பிரபல பொதுச் சேவை யாளருமான கமலநாதன் அவர்கள் 13.10.2021 அன்று காலமான செய்தி கதிகலங்க வைத்தது."மண்" சஞ்சிகை ஆரம்பித்த 1990ம் ஆண்டு தொடக்கம் அவர் இறப்பை எய்திய காலம்தொட்டு எம்மோடு அன்பாகவும் பண்பாகவும் பழகி இணைந்து செயற்பட்டார். அன்னாருக்கு இறுதி அஞ்சலிகள்!..

# அவைகளும் உயிர்கள்தானே!.

நமது நாட்டில் பல இடங்களில் தெரு ஓரங்களில் பல நாய்களையும் குட்டிகளையும் காணக்கூடியதாக உள்ளன. காரணம் பெண் நாய்களை பலர் விரும்புவதில்லை அவ்வாறு கைவிடப்படும் குட்டிகள் இங்கே நிலவும் அகோர வெய்யிலில் நீர் உணவு இல்லாமல் அவதி உறுகின்றன.

திருகோணமலையில் நான் தங்கி இருந்த ஹோட்டலுக்கு முன் இருந்த ஒரு ஒழுங்கையில் ஒரு பெண்மணி மோட்டார் பைக்கிளில் வந்துகொண்டிருந்தார் என்ன ஆச்சிரியம் அவர் வண்டியினை சுற்றி தெருவில் நின்ற நாய்கள் எல்லாம் வாலை ஆட்டியபடி அவரை சூழ்ந்து கொள்கின்றன.

அவர் தான் கொண்டு வந்த பையில் இருந்து உணவு வகைகளை பங்கிட்டு கொடுக்கிறார்.அருகில் நின்ற ஒருவரிடம் விசாரித்தேன் அவர் சொன்னார் அந்த மனுசிக்கு விசர் ஒவ்வொருநாளும் வந்து கைவிடப்பட்ட தெரு நாய்களுக்கு சாப்பாடு கொண்டு வந்து கொடுக்கிறார் என்றார்.

ஆயிரம் கோவில்களில் அபிஷேகம் செய்வதற்கு சமம் கைவிடப்படட மிருகங்களுக்கு உணவு கொடுப்பது அதனால் தானே நாங்கள் தமிழர்கள் வாசலில் மாக்கோலம் அரிசியால் போடுகிறோம் எறும்பு உண்பதற்காக, விரத நாளில் காகத்தை அழைத்துச் சோறு கொடுக்கிறோம். ஒரு தடைவை ஒரு நாய்க்கு ஒரு துண்டு ரொட்டியைக் கொடுத்துப் பாருங்கள் உங்களை காணும்போதெல்லாம் வாலை ஆட்டும். மனிதர்களுக்கு 100 நாள் கொடுத்துவிட்டு ஒரு நாள் கொடுக்காது போனாலும் முகத்தைத் திருப்பிக் கொண்டுதான் போவார்கள்.

நீங்களும் கைவிடப்பட்ட நாய்களுக்கு முடிந்தால் எதாவது கொடுத்துப் பாருங்கள் சீவன் உள்ளவரை நன்றி கொள்ளும். பாவம் அவைகளும் உயிர்கள் தானே!.

நட்புடன்!..

**மட்டுவில் ஞானகுமாரன்**





# படித்ததில் பிடித்தது!..

**தகவல் சுதர்சன் - லண்டன்**

இப்போது கொஞ்சம் உண்மையான சீரியசான நகைச்சுவை...!!!
நீங்கள் எதை வேண்டுமானாலும் சாப்பிடுங்கள்...!!! ஏனென்றால்....

1. டிரெட்மில்லை கண்டுபிடித்தவர் 54 வயதில் இறந்தார்
2. ஜிம்னாஸ்டிக்ஸ் கண்டுபிடிப்பாளர் 57 வயதில் இறந்தார்
3. உலக உடற்கட்டமைப்பு சாம்பியன் 41 வயதில் இறந்தார்
4. உலகின் சிறந்த கால்பந்து வீரர் மரடோனா தனது 60 வது வயதில் காலமானார் ஆனால் ஆனால்..
5. KFC கண்டுபிடிப்பாளர் 94 வயதில் இறந்தார்
6. Nutella பிராண்ட் கண்டுபிடிப்பாளர் 88 வயதில் இறந்தார்
7. சிகரெட் தயாரிப்பாளர் வின்ஸ்டன் 102 வயதில் இறந்தார்
8. அபின் கண்டுபிடிப்பாளர் 116 வயதில் பூகம்பத்தில் இறந்தார்
9. ஹென்னெஸியின் உலகப் புகழ்பெற்ற பிராந்தி பிராண்டை கண்டுபிடித்தவர் 98 வயதில் இறந்தார்
10. MDH மசாலா கொண்ட மனிதர் 97 ஆண்டுகள் வாழ்ந்ததால் அதிக மசாலாப் பொருள்களையும் உண்ணுங்கள்.

பிறகு உடற்பயிற்சி ஆயுளை நீட்டிக்கும் என்ற முடிவுக்கு இந்த மருத்துவர்கள் எப்படி வந்தனர்???
முயல் எப்பொழுதும் மேலேயும் கீழேயும் குதிக்கிறது, ஆனால் அது 2 வருடங்கள் மட்டுமே உயிர் வாழ்கிறது.... மற்றும் உடற்பயிற்சி செய்யாத ஆமை 400 வருடங்கள் உயிர் பிழைக்கிறது...!!!

எனவே, கொஞ்சம் ஓய்வெடுங்கள்..., அமைதியாக இருங்கள்..., குளிர்ச்சியாக இருங்கள்..., சாப்பிடுங்கள்..., மற்றும் உங்கள் வாழ்க்கையை முழுமையாக அனுபவிக்கவும்..!!!

---

## சாதி!..

பாதி உயிர் பிரியும் போதும்
சாதியினைத் தேடுகின்றார்
நீதி இன்றி..நியாயம் இன்றி
நீ உலகில் வாடுகின்றாய்!..

## தாய்!..

ஒரு சேலையுடன் காலத்தை ஓட்டும் தாய்
முதலாளி மாரின் கோவில் யானைக்கு
விலை உயர்ந்த அழகான பட்டாடை கொடுத்து
புண்ணியம் தேடும் பெற்று வளர்த்த மகன்!..

**-ரவி - யேர்மனி-**

# பாரதியார்..

( கெங்கா ஸ்ரான்லி )



எட்டைய புரத்து ஜமீன் குடும்பத்தில் சின்னசாமி அய்யர்,லட்சுமி அம்மாள் இருவருக்கும் பிறந்தவர் சுப்பிரமணியன்.அவருடைய செல்லப்பெயர் சுப்பையா. சுப்பையாவின் 5 வது வயதில் தாயார் இறந்து விட்டார்.தந்தை இரண்டாவது திருமணம் செய்கின்றார்.சுப்பையா அருட்கவி பொழிவதில் வல்லவனாகின்றான்.

சுப்பையாவிற்கு 11 வயதில் எட்டையபுர சமஸ்தானப் புலவர்கள் பெருஞ் சபையில் சோதித்து வியந்து "பாரதி" என்ற பட்டம் கொடுத்தனர்.இவர் திருநெல்வேலி இந்து பாடசாலையில் 5 ம் வகுப்பு படித்தார். தமிழ் பண்டிதர்களுடன் சொற் போர் பண்ணுவார். அடிக்கடி தகராறு வரும் ஆனாலும் விட்டுக்கொடுக்கமாட்டார். புலமையில் சிறந்தவர்.

இவருடைய 14 வயதில் பாரதிக்கும் 7 வயதே ஆன செல்லமாவைத் திருமணம் செய்து வைத்தனர். அதன் பிறகு தந்தையின் மரணம்.பெருந்துயரைக் கொடுத்தது. இருந்தும் அவருடைய அத்தை குப்பம்மாளுடன் வாழ்ந்து வந்தார். அப்போது தான் காசி இந்து கலாசாலையில் சமஸ்கிருதம், ஹிந்தி மொழி பயின்றார். அதன் பிறகே அவர் நீண்ட மீசையும் தலைப்பாகையும் அணியப் பழகிக்கொண்டார்.

பாரதியார் சாதி மதம் பார்ப்பதில்லை. சாதி என்றால் ஆண் ஜாதி,பெண் ஜாதி என்னும் இரு ஜாதி என்றார். ஒரு நாள் கீழ் ஜாதிக் காரரை வீட்டுக்குள் கூப்பிட்டபோது அவருடைய் மாமா பேசியவுடன் தனது பூநூலைக் கழட்டி எறிந்தார்.இப்படிப் புது நோக்கு சிந்தனை உடையவர்.நாட்டிற்காக விடுதலை வேண்டி போராடியவர்.

பெண்களுக்கு விடுதலை வேண்டும். அவர்கள் அடும்பங்கரையில் அகப்பை பிடிப்பது மட்டுமல்ல.அவர்கள் படிக்கவேண்டும்.புதுமை பெண்களாக வேண்டும்.நாட்டை ஆளவேண்டும் என்று கூறியவர்.வீட்டில் வறுமை தாண்டவமாடினாலும் கொள்கையில் தளராது நின்றவர். ஒரு சமயம் வீட்டிலோ கஷ்டம்.பாரதியை மன்னர் அழைத்திருந்தார். பாரதி போய் வரும்போது பணத்துடன் வந்தால் பசி போக்க உணவுப்பொருள் வாங்கலாம் என நினைத்திருக்க வந்தவர் புத்தகங்களுடன் வந்ததாக எழுதப்பட்டிருந்தது.

பாரதியார் பெரும்பாலும் தேச விடுதலைக்கும்,பெண் விடுதலைக்கும் குரல் கொடுத்தார்.ஆனால் தனது வீட்டைக் கவனிக்க மறந்தனரோ. அருமைக் கவி,அழகான சிந்தனை.முண்டாசுக் கவிஞன் சுதேச மித்திரன் பத்திரிகையில் உதவி ஆசிரியராகக் கடமை புரிந்தார்.

பாரதியாரின் "சுதேச கீதங்கள்" என்ற தலைப்பில் மூன்று பாடல்கள் கொண்ட நாலுபக்க பிரசுரம் நிறைய வெளியிட்டு இலவசமாக விநியோகித்தார் கிருஷ்ணசாமி அய்யர். காரணம் பாரதியின் சுதேச கீதங்கள் அய்யரை மிகவும் கவர்ந்ததினால். கீதையை மொழிபெயர்த்தார்.கண்ணன் பாட்டு,குயில் பாட்டு,பாஞ்சாலி சபதம்,இப்படி அநேக பாடல்கள் எழுதியுள்ளார். இன்றைய சிறுபிள்ளைகூட முண்டாசு கவிஞன் பாரதி என்றால் விளங்கிக்கொள்ளும்.

அரசுக்கெதிராக சில கண்டனங்களை தெரிவித்து கைது செய்யப்பட்டார்.ஆனாலும் நிற்கவில்லை தொடர்ந்தார்.பாரதியார் வாழும் போது யாரும் கண்டு கொள்ளவில்லை.ஆனால் இன்று அவரது பாடல்கள், வசனங்கள் எல்லோருக்கும் வழிகாட்டுவது போலுள்ளது. பாரதி நினைத்திருந்தால் ஒரு சமயம் குபேரனாக வாழ்ந்திருக்கலாம். அவர் எளிமையாக வாழ்ந்தமையால் தான் இன்றும் உலகே அவரைக் கொண்டாடுகிறது.

கோவிலிலே யானையின் காலால் மிதிபட்டு 1921ம் ஆண்டு புரட்டாதி மாதம் 12ம் திகதி இரவு தனது 39 ஆவது வயதில் இயற்கை எய்தினார்.இந்த ஆண்டு அவரது 100 வது ஆண்டு. இந்த நேரத்தில் தமிழர் வாழுமிடமெல்லாம் 100 வது ஆண்டு பாரதி விழா கொண்டாடுகிறார்கள் தமிழ் மக்கள்.

பாரதியாரின் பாடலிலே சில வரிகள்:-

தற்கால மாந்தரை பற்றிய பாடல்:

"நெஞ்சு பொறுக்குதில்லையே இந்த நிலை கெட்ட மனிதரை நினைத்துவிட்டால் அஞ்சி அஞ்சி சாவார்-இவர் அஞ்சாத பொருளில்லை அவனியிலே". எவ்வளவு அருமையான கருத்து. அடுத்த பாடல்-"எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி இருந்ததும் இந்நாடே-அதன் முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து முடிந்ததும் இந்நாடே" என்று மூதாதையர் வாழ்ந்த சீரும் அவர் சிந்தனையும். அவர்களது ஆற்றலும் அவரது மனதின் வெளிப்பாடாக இருந்தது.

இப்படி ஒவ்வொரு கவிதையும், பாடலும் உள்ளத்தை உருக்குவதாகவும்,சிந்திக்கத் தக்கதாகவும் இருக்கின்றன. எனவே தேமதுரத் தமிழ் ஓசை உலகெலாம் ஒலிக்க வேண்டும் என்ற பாரதியின் கனவு நனவாகி உலகெலாம் ஒலிக்கின்றதே மகிழ்ச்சி தானே!..

# நான்தான்!... மதவடி மயிலன்!...



நான்தான் மதவடியான் மீண்டும் வந்திருக்கிறன்...வணக்கம்!... வணக்கம்!... எல்லாரும் சுகம் என்று நினைக்க..கோதாரிப்போன கொரோனா வந்து லட்சக்கணக்கானவர்களை தின்று விழுங்கி வருவதை எண்ணி என்னைப் போல நீங்களும் ஆறாத்துயரில்தான் இருப்பீர்கள். முதற்கண் அனைத்து உயிர்களுக்கும் அஞ்சலி.. மாதம்மாதம் அஞ்சலி செய்யவேண்டிக்கிடக்குது பாருங்கோஅதுசரி சினிமா படம் போல 1, 2, 3,4 வெளியீடு மாதிரியல்லோ கொரோனாவும் 1, 2, 3,4எனத்தொடருது. இதைக் கட்டுப்படுத்துவதும் எங்கட கையில்தான் இருக்குது பாருங்கோ!.

இல்லை?.. இல்லை!.. நாங்கள் சுகாதார வழிமுறைகளைக் கடைப்பிடிக்க மாட்டோம்?..கொண்டாட்டங்கள் வைப்போம்?..கோவில் திருவிழாக்கள் நடத்துவம்?.. கண்டபடி எல்லா இடமும் பாதுகாப்பு இல்லாமல் திரிவம் என்று நடந்தால் எப்படி இந்தக் கிருமித்தொற்றிலிருந்து விடுபடமுடியும். எல்லாரும் கொஞ்சம் யோசியுங்கோ.. தவறினால் கண் மூடவேண்டியதுதான்... நீங்கள் கண்மூடுவதுடன் மற்றவர்களின் கதையையும் முடிக்கப் போகிறீர்கள் என்பதைக் கொஞ்சம் கவனியுங்கோ ராசாக்கள்!.. ராசாத்திகள்!..

இனி குளிரும் வந்து தன்ர விளையாட்டைக் காட்டப்போகுது பாருங்கோ..இந்த குட்டிக் கிருமிகளின் திருவிளையாடலால். கிழமையில ஒரு நாள் எல்லாப் பொருட்களையும் கடைகளில் வேண்டிக்கொண்டுவந்து குளிர்ப்பெட்டிகள் எல்லாத்தையும் நிறைத்துப்போட்டு ஒவ்வொரு நாளும் ஒவ்வொன்றாக இழுத்தெடுத்து பொரித்து, அவித்துத் தின்று உடம்பும் பத்துக்கிலோவுக்கு மேல கூடி இருக்க, நிமிர, நடக்கமுடியாத நிலைதான். இது கனபேருக்குக் கண்டியளோ. ஆனால் ஒருவரும் வெளியில சொல்ல மாட்டினம் பாருங்கோ..

இனி இந்தக் கோடை விடுமுறைக்கு ஊருக்குப்போகப் பலர் திட்டம்போட்டிருக்க.. இந்த நாசமாய்போன கொரோனா ஒழியிதில்லை என்று பல ஆயிரம்பேருக்குக் கவலை பெருகிவிட்டுது பாருங்கோ.. ஊருக்குப்போய் கண்டதெல்லாத்தையும் ஆசையோடு வேண்டி உண்ணலாம்,

ஊரெல்லாம் சுற்றித்திரியலாம், கோயில் குளம் எல்லாம் பார்க்கலாம், கடற்கரையில தண்ணியடித்து, விளையாடிப் படுத்துறங்கிப் பொழுதைப் போக்கலாம், பலவிதமாகப் போட்டோ எடுத்துப் பேஸ்புக்கில் போட்டு லைக் வாங்கலாம் என்றெல்லாம் ஆசை.. எல்லா ஆசையும் நாசமாகிப்போச்சுது என்று கவலை.. அடுத்த கோடை விடுமுறையும் என்னவாகும்?.. இனி என்ன செய்ய..பழையபடி செற்றியில கிடந்து ஒரு நாளைக்குப் பத்துப் பதினைந்து நாடகமும் பிக் பொஸ்சும் பார்க்கவேண்டியதுதான் பாருங்கோ!..

கொரோனே தொடரப்போகுது போலத்தான் கிடக்குது. இனி இந்த நோயுடன் பழக்கப்பட்டு ஒன்றித்துப் பாதுகாப்பாக வாழவேண்டிய கட்டாயம்தான் ஒன்றும் செய்யமுடியாது. ஊரோடு உலகத்தோட ஒத்து ஓடவேண்டும். இல்லையேல் மண்டையைப் போடவேண்டியதுதான் பாருங்கோ..

சரி...சரி.. இனி ஒருசில விசயங்களை அலசலாம் என்று இந்த மயிலன் எண்ணுகிறான். நம்ம சொந்த நாட்டில எத்தனையோ அவலங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தாலும் பல சமூகச்சீரழிவுகளுக்குப் பஞ்சமில்லை பாருங்கோ!.. இதற்குப் புலம் பெயர்ந்து வாழும் நம் தமிழர்களும் பெரும் பொறுப்பாக இருக்கிறார்கள்..இதற்கு ஒரு சில சம்பவங்களை உங்களோடு பகிர்ந்து கொள்ளலாம்..

வெளிநாட்டில மாப்பிள்ளை இலங்கையில பெண் திருமணம் எல்லாம் பேசி முடிக்க இந்தக் கொரோனாவால் மாப்பிள்ளை ஊருக்குப்போக முடியாமல் கடந்த ஒருவருடமாக ரெலிபோனிலதான் குடும்பம் நடத்தினார். பொம்பிளை நல்ல கெட்டிக்காரி பாருங்கோ.. வருங்கால மாப்பிள்ளையிடம் அது இது என்று சொல்லி நாடகம்போட்டு, நடித்து 15 - 20 பவுண் நகைகளையும் சேர்த்துப் போட்டாள். கிழமைக்கு ஒரு புது உடுப்பு, அது இது என ஆடம்பரப்பொருட்கள் எல்லாம் வேண்டுவதற்கு மாப்பிள்ளைதான் மாதா மாதம் பெருந்தொகை பணம் அனுப்புவாராம்.

தன்ர வருங்கால இளவரசி நடந்து திரியக்கூடாது என்று லண்டன் மாப்பிள்ளை 25 லட்சத்துக்கு ஸ்கூட்டரும் ஒன்று வேண்டிக் கொடுத்துவிட, புள்ளை ஊர்..ஊராகச் சுற்றித்திரிவதுதான் வேலையாகிப் போனாள். மாப்பிள்ளைத் தம்பி இரவு பகலாக, பனி, குளிர், என நித்திரை இல்லாமல் இரண்டு மூன்று வேலை செய்து உழைத்த பணம்தான். அவளோ எல்லா வசதியும் கூடிவிட்டதால் லண்டன் மாப்பிள்ளையைவிட அழகான, வடிவான, வேலை இல்லாத ஒருவனை சிநேகிதனாக்கிக்கொண்டு அவள் வீட்டுக்காரர் மற்றும் உறவுகளுக்குத் தெரியமால் தனிக்குடித்தனம் போய்விட்டாள். லண்டன் மாப்பிள்ளை அதோகதிதான், காசு, பவுண் நகைகள், ஸ்கூட்டர் எல்லாவற்றையும் இழந்து அனாதையாய் அகதியாய் வெளிநாட்டில வாழ்வாய் போய்விட்டது. ஏமார்ந்த சோணகிரியாய்..

அடுத்த ஒரு குடும்பப்பெண் செய்த காரியத்தைப் பாருங்கோ..பெரும் ஆடம்பரம், எடுப்பில வெளிநாட்டில வாழ்க்கை. ஊரிலுள்ள தன்ர தந்தைக்கு உணவுச்செலவுக்கும் மது குடிப்பதற்கு தனியாகவும் மாதம் ஒரு லட்சம் பல வருடமாக அனுப்புவதாக ஊர் எல்லாம் பிதற்றித்திரிந்தா.. தகப்பன் வெளிநாட்டுக்காசு வருகிறது என்று தினமும் முழுவெறியாட்டமாம். இது பழக்கமாகி பின் வருத்தம்கூடி மண்டையைப் போட்டுவிட்டார். நீங்கள் ஒருக்கா யோசித்துப் பாருங்கோ இந்தப் படுபாவி குடிக்க என்று காசு அனுப்பாவிட்டால் அந்தாள் மண்டையைப் போட்டிராது. இன்னும் பத்து பதினைந்து வருடங்கள் வாழ்ந்திருப்பார். அப்ப இவளைக் கொலைகாரி என்றுதானே சொல்ல வேண்டும்.

இன்னுமொரு சம்பவம். உடன்பிறப்புக்கள் தம்பி ஊரில.அண்ணன் சுவிஸ் நாட்டில.. பெடியனும் உழைத்து ஓடாய் தேய்ந்து காசு.. காசாக அனுப்பி தனது காணியில தனக்கொரு வீடுகட்டச்சொல்ல.. தம்பியோ அன்பை மழையாகப் பொழிந்து அண்ணனிடம் காசைப் பல வருடங்களாகக் கறந்து தன்ர காணியில தனக்கு அழகான ஆடம்பரமான வீட்டைக்கட்டி முடித்துவிட்டான். அண்ணனோ புது விட்டுக் கனவுகளோடு ஊருக்குப் பறந்தோடிப் போய் வீட்டைத் தேடினால் வீட்டைக்காணவில்லை. எப்படி இருக்கிறது துரோகத்தனம். காசு பணம் சொத்துக்கு அண்ணன் என்னடா!..தம்பி என்னடா!..பெத்த தாய் தந்தையரிடம்கூட கொள்ளையடிக்கும் கூட்டம் பெருகிவருவதுதான் உண்மை பாருங்கோ!..

இப்படி வெளிநாடுகளிலும் தாய் நாட்டிலும் எத்தனை அலங்கோலங்கள் தினம்..தினம் அரங்கெறிக்கொண்டிருக்கின்றன. இப்படி ஆயிரம் சம்பவங்கள் இந்த மயிலனின் காதுகளில் விழுந்துகொண்டே கிடக்கின்றன பாருங்கோ.. காசு பணம், பொருள், சொத்து என அலையும் நிலை வெகுவாக அதிகரித்ததால் அனைத்துச் சீர்கெடுகளும் பல்கிப் பெருகிக் கொண்டே இருக்கின்றன. பாலியல், போதைவஸ்த்து, வாள்வெட்டு குற்றச்செயல்கள் தாய்நாட்டில் நாளுக்குநாள் பெருகுவதற்கு புலம்பெயர் வாழ் உறவுகளே முக்கிய காரணம் என்று இந்த மயிலன் அடித்துச் சொல்லுவான்...

நீங்கள் அனுப்புப் அளவுக்கு அதிகமான பணத்தால் முழுச்சமுதாயமே சீர்கெட்டு வருகின்றது என்பதை எப்ப உணரப்போறியள். நீங்கள் பரிதாபப்பட்டு அனுப்பும் பணத்திற்குக் கணக்கு கேட்கிறீர்களா?.. கிணத்துத்தண்ணியை அள்ளி வெறுந்தரைக்கு ஊற்றுவதுபோலத்தான் நிலைமை இருக்குது பாருங்கோ... தயவுசெய்து நீங்கள் அனுப்புப் பணத்தை தேவையறிந்து அளவோடு அனுப்புங்கோ.. தேவைக்கு மிஞ்சி அனுப்புவதால் இன்னும்..இன்னும் அவலங்கள் பெருகப்போகுது பாருங்கோ..ஆற்றில போட்டாலும் அளந்து போடுங்கோ!..அப்ப வரட்டே..மீண்டும் வருவான் இந்த மயிலன்!..

## சிறுவர் குறுக்கெழுத்துப்போட்டி முடிவு

| | | | |
|---|---|---|---|
| ந | த் | தா | ர் |
| ண் | து | கா | ப |
| டு | ந் | லை | ம் |
| னை | ப | ற் | க |

## குறுக்கெழுத்துப்போட்டி முடிவு

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ந | த் | தா | ர் | த | த் | பு |
| ட | ம் | கு | ம | ண | ன் | த் |
| த் | ம் | டு | ம் | ர | க | த |
| த | ர | க | ர | டி | ண் | க |
| ல் | ப | ற் | வ | தே | ணீ | ம் |
| ட | ம் | ப | ன் | ட | ர் | க |
| க | ப | னை | னி | ல் | த | கா |

## சுடோக்கோ போட்டி முடிவு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 4 | 2 | 8 | 3 | 1 | 7 | 9 | 6 |
| 1 | 9 | 8 | 6 | 7 | 4 | 3 | 5 | 2 |
| 6 | 3 | 7 | 5 | 2 | 9 | 8 | 4 | 1 |
| 7 | 1 | 4 | 3 | 9 | 6 | 5 | 2 | 8 |
| 2 | 5 | 3 | 4 | 8 | 7 | 6 | 1 | 9 |
| 8 | 6 | 9 | 1 | 5 | 2 | 4 | 3 | 7 |
| 4 | 2 | 5 | 7 | 1 | 8 | 9 | 6 | 3 |
| 9 | 8 | 6 | 2 | 4 | 3 | 1 | 7 | 5 |
| 3 | 7 | 1 | 9 | 6 | 5 | 2 | 8 | 4 |

# எலுமிச்சை...



தினமும் எலுமிச்சை நீரை குடித்து வந்தால் நம் உடலுக்கு எவ்வளவு நன்மை கிடைக்கும் என்று தெரியுமா?

எல்லா காலங்களிலும் மலிவாகக் கிடைக்கும் மருத்துவ குணம் நிறைந்த ஒரே கனி எலுமிச்சை பழமாகும். தலைமுடி பிரச்சனை,சரும பிரச்சனை போன்ற உடலின் பல்வேறு ஆரோக்கிய குறைபாடுகளுக்கு பெரிதும் பயன்படுவது எலுமிச்சையின் தனிச்சிறப்பாகும். எலுமிச்சையில் உள்ள சிட்ரிக் அமிலம் பல்வேறு நோய்களுக்கு மருந்தாக பயன்படுகிறது.எலுமிச்சையில் வைட்டமின் சி, வைட்டமின் பி, ரிபோ.ஃ. ப்ளேவின், கால்சியம், பாஸ்பரஸ், மெக்னீஷியம், புரோட்டீன்கள், கார்போஹைட்ரேட் என உடலுக்குத் தேவையான பல்வேறு மூலக்கூறுகள் உள்ளன.

**அஜீரண கோளாறு நீங்க..**

தினமும் காலை எலுமிச்சை நீரில் உப்பு கலந்து பருகுவதால் நாவில் உள்ள எச்சில் சுரப்பிகள் தூண்டிவிடப்படும். இதனால் அஜீரண கோளாறுகள் போன்ற பிரச்சனைகள் வராமல் தடுக்கிறது.

**உடல் எடை குறைய..**

எலுமிச்சைச் சாறை சேர்த்துக கொள்ளவதன் மூலம் உடல் எடை குறையும். எலுமிச்சையில் இருக்கக்கூடிய சத்துகள், நம் உடலில் சேருகின்ற டாக்சின்களை வெளியேற்றும். இது அதிகப்படியாக சேர்ந்தால் நம் உடல் மிகவும் சோர்வுற்று காணப்படும்.

**செரிமானம்..**

தினமும் இரவு தூங்குவதற்கு முன்னால் எலுமிச்சை கலந்த நீரைக் குடிப்பதினால் உங்களின் செரிமானத்தை இது தூண்டுகிறது. வாய்த் துர்நாற்றம் இருப்பவர்கள் தொடர்ந்து எலுமிச்சை நீர் குடித்து வந்தால் துர்நாற்றம் நீங்கும்.

**சிறுநீரக கற்களை தடுக்க..**


எலுமிச்சை நீர் சிறுநீரக கற்களை தடுக்கும். சிறுநீர் கற்களை தடுக்க செய்யும். சிறிய கற்களை உடைக்கக்கூடும் அல்லது வெளியேற்றவோ உதவும். ஏனெனில் எலுமிச்சையில் இருக்கும் சிட்ரேட் சிறுநீரை குறைந்த அமிலமாக்கி வெளியேற்றுகிறது.

**இதய நோய்..**

தினமும் எலுமிச்சை நீரை குடித்து வந்தால் இதய நோய் அபாயத்தை குறைக்கலாம். எலுமிச்சை ரத்த அழுத்தத்தை குறைக்க செய்யும்.

# கிரீன் ரீயும் துளசியும்..





க்ரீன் டீ அதிக அளவிலான ஆன்டி-ஆக்சிடண்ட்டுகள் நிறைந்த ஆரோக்கியமான பானம் என்பது நம் எல்லோருக்குமே தெரிந்தது தான்.அதேபோல மருத்துவ குணங்கள் நிரம்பிய மூலிகைகளில் ஒன்று தான் துளசியும். இந்த துளசியை டீயுடன் சேர்த்து குடித்தால் உடலுக்கு பல ஆரோக்கிய நன்மைகளை வாரி வழங்குகின்றது. அந்தவகையில் க்ரீன் டீயுடன் துளசி சேர்த்து குடிப்பதனால் கிடைக்கும் நன்மைகள் என்ன என்பதை பார்ப்போம்.

துளசியுடன் க்ரீன் டீ சேர்த்து குடிப்பதனால் ஆஸ்துமா, நீண்ட நாள் மார்புச்சளி, ஆகிய பிரச்சினைகள் குறையும். அதோடு சுவாசப் பாதையில் ஏற்படும் வைரஸ், பாக்டீரியாக்கள் மற்றும் பூஞ்சைகளால் ஏற்படும் தொற்றுக்களையும் அழிக்கும் வல்லமை கொண்டது. துளசியில் மிக அதிக அளவில் மக்னீசியம் நிறைந்திருக்கிறது. க்ரீன் டீயில் ஆன்டி-ஆக்சிடண்ட் நிறைந்திருக்கிறது. இவை இரண்டையும் சேர்க்கும்போது உடலில் ரத்த ஓட்டம் சீராகிறது. ரத்த நாளங்கள் புத்துணர்ச்சி அடைகின்றன.

க்ரீன் டீயில் தினமும் பிரஷ்ஷான துளசி இலைகளையோ அல்லது நிழலில் உலர்த்திப் பொடி செய்ததையோ உங்களுடைய க்ரீன் டீயுடன் சேர்த்து குடித்து வந்தால் கண் பார்வை தெளிவாகும். கிட்டப்பார்வை, தூரப்பார்வை பிரச்சினைகள் கூட சரியாகும். க்ரீன் டீயுடன் துளசி சேர்த்து குடிக்கும்போது, கார்டிசோல் ஹார்மோன் சுரப்பு கட்டுப்படுத்தப்படுகிறது. இதனால் மனஅழுத்தம், மனச்சோர்வு போன்ற பிரச்சினைகளும் குறைகிறது. க்ரீன் டீயில் புற்றுநோயை எதிர்த்துப் போராடும் குணம் அதிகம். அதனுடன் துளசியை சேர்த்து சாப்பிடும்போது அவற்றில் உள்ள ஆன்டி-ஆக்சிடண்டுகள் இணைந்து ஆண்டி-கார்ஜோஜெனிக் தன்மையை உடலில் அதிகரிக்கச் செய்து புற்றுநோய் செல்களின் வளர்ச்சியைத் தடுத்து, அவற்றை அழிக்கும் தன்மை கொண்டதாக இருக்கிறது.

# நீண்டகாலம் வாழ ஆசையா? அப்போ இந்த உணவுகளை தேர்ந்தெடுங்கள்!...



நீண்டகாலம் வாழவேண்டும் எனில் அதற்கு நம் மன நலமும், உடல் நலமும் மிக முக்கியம் ஆகும். நம் ஆயுட்காலத்தை நீட்டிக்க உதவும் ஏராளமான சத்தான உணவுகள் உள்ளன.

அவற்றில் சத்தான, ஆரோக்கியம் நிறைந்த உணவை உட்கொள்வது நீண்ட ஆயுளோடு வாழ உதவும் என பல ஆய்வுகளில் நிருபிக்கப்பட்ட உணவுகள் சிலவற்றினை நாம் அறிந்துகொள்ளலாம். அவையாவன,

**ஓட்ஸ்:**

பலருக்குப் பிடித்த சுலபமான காலை உணவுகளுள் ஒன்று ஓட்ஸ். ஓட்மீல் உணவு நீண்ட ஆயுளுடன் நெருக்கமாக இணைக்கப்பட்டது. ஆறு வாரங்களுக்கு ஓட்ஸ் சாப்பிடுவதன் மூலம் இதை ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். அதன்படி ஒரு நாளைக்கு 100 கிராம் ஓட்ஸ் சாப்பிடுபவர்களுக்கு எல்டிஎல் கெட்ட கொழுப்பு மற்றும் உடல் எடை குறைந்தது கண்டறியப்பட்டுள்ளது.

**ப்ளூபெரீஸ்:**

நீண்ட ஆயுளுக்கு ஓட்மீலில் சில ப்ளூபெரிகளைச் சேர்த்து சாப்பிடுங்கள். அமெரிக்காவின் தேசிய அறிவியல் அகாடமி ஆன்டிஆக்ஸிடன்ட்கள் நிறைந்த உணவுகள் நீண்ட ஆயுளுக்கு எவ்வாறு உதவும் என்பதை ஆய்வு செய்தது. ப்ளூபெரி ஆன்டிஆக்ஸிடன்ட்கள் அதிகம் நிறைந்த பழங்களுள் ஒன்றாகும்.

ஜர்னல் ஆ.ீ.ப் அக்ரிகல்ச்சர் அண்ட் ஃ.புட் கெமிஸ்ட்ரி ஆய்வின் படி, இந்த ஆரோக்கியமான பழத்தை அடிக்கடி சாப்பிடுவது வாழ்க்கையின் ஆயுட்காலத்தை அதிகரிக்கும் என கூறப்பட்டுள்ளது.

**கீரைகள்:**

சில கீரை வகைகள் ஊட்டச்சத்து அடர்த்தியான உணவுகளில் ஒன்றாக கருதப்படுகிறது. ஊட்டச்சத்து குறித்த ஆய்வில், கீரைகள் எப்படி சிறந்த ஊட்டச்சத்து அடர்த்தியான உணவுகளில் ஒன்றாகும் என்பது குறித்து மருத்துவர்கள் குறிப்பிடுகிறார்கள். அத்துடன் ஊட்டச்சத்துக்கள் அடர்த்தியான உணவுகள் நாள்பட்ட நோயின் அபாயத்தில் இருந்து நம்மை பெருமளவில் காக்கும் என்கின்றனர்.

**முழு தானியங்கள்:**

சமீபத்திய ஆய்வு ஒன்றில், முழு தானியங்களை உட்கொள்வது எவ்வாறு நீண்ட ஆயுளுக்கு வழிவகுக்கும் என்பதை கூறியுள்ளது.

அந்த ஆய்வில், அமெரிக்கர்களுக்கான தற்போதைய உணவு வழிகாட்டுதல்களின்படி, ஒரு நாளைக்கு குறைந்தது மூன்று இரண்டு வேளை முழு தானியங்களைச் சாப்பிடுவது இன்னும் ஆரோக்கியமான அளவு என அவர்கள் கண்டறிந்துள்ளனர்.

# காலிமுகச் சிறுவன்!.. (சிறுகதை)

**பொன் குலேந்திரன் - கனடா**

முன்னுரை

சென்னையில் மெரினா கடற்கரையைப் போல் கொழும்பில் காலிமுகத் திடலும் உண்டு, ஆனால் மெரினா போன்று பெரிய மணல் நிறைந்த் கடற்கரை அல்ல அதோடு சுமார் அரை கி மீ நீளமே உள்ளது . காலிக்கு போகும் பெரும் பாதை அருகே ,இருப்பதால் அந்தப் பெயர் ஒல்லாந்தர் காலத்தில் ,இருந்து வந்தது ,,இப்பொது அங்கு ,இருக்கும் காலி முக ஹோட்டேல், ஒல்லாந்தர் ஆட்சின் பொது அதிகாரிகள் வாழ்ந்த மாளிகை . 1859 ஆம் அண்டு பிரிட்டிஷ் கவர்னர் சேர் ஹென்றி வோர்ட் என்பவர் அந்த மண் திடலை விருத்தி செய்தார் அங்கு குடும்பங்கள் ஓய்வு நாட்களில் பொழுதை போக்க போவர் .

அன்று எனக்கு விடுமுறை வீட்டில் சும்மா ,இருக்காமல் வெள்ளவத்தையில் இருந்து பஸ் எடுத்து காலி முக திடலில் உலாவி வருவோம் என்று சென்றேன் இந்தச் சம்பவம் நடந்தது 1970 ஆம் ஆண்டில் , அந்தக் காலத்தில் லண்டனில் ஒடிய பழைய டபுள் டேக்கர் பஸ்கள் கொழும்பில் ஒடின . அதை CTB என்ற சிலோன் போக்கு வரத்து சபை இயக்கியது .அதை நகைச் சுவையாக சொல்வார்கள் பண்டாவை நம்ப முடியாது என்று. அப்போது திருமதி சிறிமாவோ பணடாரநாயக்கா பிரதம மந்திரியாக இருந்த காலம் . டபுள் டேக்கர் பஸ்சில் நான் எப்போதும் மேல் தட்டில் பயணிப்பதுண்டு . அது விடுப்பு பார்க்க வசதியானது சுமார் எட்டு கி மீ பயணம் , அனால் பஸ் பம்பலபிட்டி கொள்ளுபிட்டி ஆகிய ஊர்களில் உலா பல பஸ்தரிக்கும் இடங்களில் நின்று ஆடி அசைந்து சுமார் ஒரு மணிததியாலப் பயணத்தின் பின் காலி முகத் திடலை போய் சேரும் .

காலிமுகத் திடல் வந்ததும் பஸ்கொண்டக்டர் கோல் பேஸ் பயிண்ட பயிண்ட (கோல் பேஸ்,இறங்கு , இறங்கு) என்றான் சிங்களத்தில், நான் சிலரோடு இறங்கினேன் நான் இறங்கியது காலி முக ஹோட்டல் பஸ் தரிப்பு இடம், அங்கிருந்து நூறு மீட்டர் தூரத்தில் காலி முகத்திடல் ,இருந்தது . என் அதிர்ஷ்டம் அன்று அரசியல் கட்சியின் கூட்டம் ,இருக்கவில்லை அதனால் சனம் குறைவு. சில சிறுவர்கள் பட்டம் விட்டுக் கொண்டு இருந்தனர் , வேறு ஒரு சிலர் குதிரைச் சவாரி செய்தனர். .தள்ளு வண்டிகளில் சுவையான உணவு விற்பனை ஆகிக் கொண்டு இருந்தன. ஒரு காலத்தில் பச்சைப்பசேல் என்று இருந்த அந்த திடல் ,இப்போது அதன் நிறம் மாறிக்கொண்டே வருகிறது. சற்று தூரம் நடந்தேன் . இந்த திடலில் காலையில் பிரபல வணிகர்களும் ,நாட்டின் முக்கிய புள்ளிகளும் காரில் வந்து பாரக் செய்து விட்டு காலையில் தேக அப்பியாசத்துக்கு நடந்துசெல்வர் .

அப்போது பிஸ்னசும் பேசுவார்கள் மார்ச் 22, 1952 அன்று, இலங்கையின் முதல் பிரதம மந்திரி டி எஸ் சேனாநாயக்கா கால் ∴பேஸ் கிரீன் என்ற காலி முகத்திடலில் குதிரைச்சவாரி செய்யும் போது அவருக்கு திடீர் என்று ஏற்பட்ட பக்கவாதத்தால் குதிரையில் ,இருந்து விழுந்து உயிரிழந்தது என் நினைவுக்கு வந்தது அப்போது எனக்கு வயது 13 . அது நடந்தது சுமார் ,இருபது ஆண்டுகளுக்கு முன் .கோல் ∴பேஸ் கிரீன் ,இன்று ,இருப்பதை விட மிகப் பெரிய பகுதியில் முதலில் நீடிக்கப்பட்டது. இது வடக்கே பெய்ரா ஏரி, கொழும்பு கோட்டையின் அரண் மற்றும் நகரத்தின் கல்லறை (1803 இல் நிறுவப்பட்டது), மேற்கில் ,இந்து சமுத்திரம், தெற்கே காலி ∴பேஸ் ஹோட்டல் (1864 இல் நிறுவப்பட்டது,) தளத்தின் அசல் கட்டிடம் ஒரு டச்சு வில்லா என்றாலும்) மற்றும் கிழக்கில் செயின்ட் பீட்டர்ஸ் சர்ச் (1821 இல் புனிதப்படுத்தப்பட்டது). காலேஸ் ∴பேஸ் கிரீன் ஆரம்பத்தில் டச்சுக்காரர்களால் போர்த்துகீசியர்களுக்கு எதிரான தந்திரோபாயக் கோட்டைத் தொடங்குவதற்கான ஒரு பேஸ்வழிமுறையாக அமைக்கப்பட்டது.

காலே ∴பேஸ் என்ற பெயர் எவ்வாறு உருவானது என்பது, கோட்டைகளுக்கான அசல் டச்சு பெயரிலிருந்து வந்தது, அதில் கொழும்பு க்கோட்டைக்கு நுழைவாயில் கால் கேட் என்று அழைக்கப்பட்டது, ஏனெனில் அது காலி மற்றும் தெற்கு நோக்கி உள்ளது முன்னால், அது உண்மையில் காலி நோக்கி எதிர்கொண்ட கோட்டைக்கு முன்னால் என்று பொருள். மற்றொரு பதிப்பு என்னவென்றால், அந்தப் பகுதியின் பாறைக் கரையோரத்தின் அசல் பெயரான சிதைவு, கல் பொக்கா, கல் சிங்கள பாறைக்கு சிங்கம் மற்றும் கல் கேட் உண்மையில் பாறை வாயில் என்று பொருள். ,இந்தப் பெயர் வந்த ஆராச்சி போதும்.

நான் நடந்து களைத்துப் போய் ஒரு மர வாங்கில் அமர்ந்தேன் .சில நிமிடங்களில் செவ்விளனி விற்பவன் ஒருவன் வந்து சுவையயான செவ்விளனி ஒன்றை வெட்டி தந்தான். அதை குடித்த படியே வானத்தை பார்த்தேன். அங்கு முகில்கள் பல வடிவங்களில் அசைவதை கண்டேன் பறவைகள் முக்கோண வடிவில் பறந்து செல்வதைக் கண்டேன் எனக்கு கண்ணதாசனின் பாடல் "ஓடும் மேகங்களே ஒருசொல் கேளீரோ" "ஆடும் மனதினிலே ஆறுதல் தாரீரோ ஆடும் மனதினிலே ஆறுதல் தாரீரோ"..... "மற்றது அதோ அந்த பறவை போல வாழ வேண்டும் இதோ இந்த அலைகள் போல ஆடவேண்டும் ஒரே வானிலே ஒரே மண்ணிலே ஒரே கீதம் உரிமை கீதம் பாடுவோம்" ஆகிய ,இரு பாடல்களும் சற்று நேரம் என்னுடைய சிந்தனையில் வந்து போயிற்று . செவ்விளனியை குடித்து முடிந்ததும் பக்கத்தில் இருந்த குப்பைத் தொட்டிக்குள் போட்டேன் சுண்டல் விற்றபடி ஒரு சிறுவன் என்னை நோக்கி வந்தான், அவன் தலையிலும் கையிலும் சுமைகள் இருந்தன. ஆஹா பிழைப்புக்காக படிக்கும் வயதில் இந்தச் சுமையைத் தாங்கும் நிலமை இவனுக்கு வந்து விட்டதே என்று சிந்தித்தேன். என்ன செய்வது அது அவன் தலைவிதி

என்னிடம் வந்த அவன் சேர் சுடச்சுட சுண்டல் இருக்கு வேண்டுமா?.. என்று கேட்டான்
அவனை மேலும் கீழும் பார்த்தேன் உனக்கு வயது எவ்வளவு என்று கேட்டேன்..
ஏன் நீ படிக்கப் போகாமல் சுண்டல் விற்கிறாய்? என்று அவனைகேட்டேன்
என்ன செய்ய சேர் எனது அப்பா போலீசால் சுடப்பட்டு இறந்து போனார் அம்மா விதவையாகி போனாள் அவள் சில வீடுகளில் சமயல் வேலை செய்து காசு சம்பாதிக்கிறாள் நான் சுண்டலும் கச்சான் கடலை, மிட்டாய் ,வடை விற்று நாலு காசு வீட்டுக்கு சம்பாதிக்கிறன் இப்படிப் போகிறது எங்களுடைய காலம்..
எங்கே உன் வீடு ?
வெள்ளவத்தையில் உள்ள விகார லேனில் இருக்கும் வாய்க்கால் ஓரத்தில் உள்ள ஒரு குடிசையில்
அது சிங்கள காடையர்கள் வாழும் இடமாச்சே..
அது உங்களுக்கு எப்படித் தெரியும் சேர்..
என் வீடு உன் வீட்டிலிருந்து வெகு தூரத்தில் இல்லை...
எங்கே சேர் உங்கடை வீடு?..
ராமகிருஷ்ணன் வீதியில்..
எனக்கு அந்த வீதியைத் தெரியும் அங்கு ஒரு வீட்டுக்கு என்அம்மா சமையல் செய்து கொடுக்கப் போவாள்..
அந்த வீதியில் இராமகிருஷ்ண மிஷனும், ஹாலும் சின்ன பாக்கும் இருக்கிறது. நான் சொன்னேன் .
என் அப்பா உங்கள் வீட்டுக்கு தன் கூட்டாளிளுடன் விஹரராவில் பொசனுக்கு சாப்பாடு தானம் கொடுக்க காசு கேட்டு வந்திருப்பானே . அவனுக்கு முறுக்கு மீசை இருக்கும் நெற்றியில் ஒரு தளும்பு..
நான் வசிக்கும் வீதியில் சில தமிழர் வீடுகளுக்கு சென்று சில சிங்களவர்கள் பணம் கேட்பதாக கேள்விப் பட்டேன் ஆனால் என் வீட்டில் உள்ள எனது மாமனார் ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டர் இதற்கு பயந்து அவர்கள் என் வீட்டுக்கு பணம் கேட்டு வரவில்லை அது சரி உன்னனுடைய அப்பாவை பற்றி சொன்னாயே அவர் பெயர் என்ன? அவர் பெயர் சந்திரசேன..
அசல் சிங்களப் பெயர் போல் இருக்கிறது..
ஆமாம் அவர் பாணதுறையை பிறப்பிடமாக கொண்டவர் . அவருடைய அப்பா குணசேனா ஒரு சிங்கள அரசியல்வாதியின் அடியாள். இரு அரசியல் கொலைகள் செய்தவர். ஒரு தடவை எழு வருஷம் ஜெயிலுக்கு சென்று வந்தவர் என்று என் அம்மா சொன்னாள் . பாணதுறையில் உள்ள தமிழ் கடைகளில் தனது மூன்று கூட்டாளிகளுடன் சேர்ந்து என் அப்பா கப்பம் வாங்கினான்..
அப்படியா நான் கேள்விப்பட்டேன் கொழும்பில் நடந்த கலவரங்களுக்கு பாணத்துறை பகுதியிலிருந்து காடையர்கள் வந்ததாக அதில் உன் அப்பாவும் ஒருவனா?..
சரியாக சொன்னீர்கள் என்னப்பா 58 இல் நடந்த இனக்கலவரத்தில் அங்குள்ள

கோவில் ஒன்றுக்குள் குண்டார்கள் கும்பல் புகுந்து தீவைக்க முயன்றது. அவர்கள் வெறிகொண்டு விகாரமாக இருந்தனர் மற்றும் தீயை அணைக்க தவறிவிட்டனர். ஆனால் அவர்களுக்கு மிகவும் கொடூரமான யோசனை ஒன்று வந்தது. அவர்கள் கோவிலில் இருந்து ஒரு ஐயரை வெளியே இழுத்து வந்து அவரை கொதிக்கும் தாரில் எரித்தனர்..

அதை செய்தது உன் அப்பாவா?

ஆமாம் சார் அவர் தான் அந்த குண்டர் கூட்டத்துக்கு தலைவன் அதை நான் சொல்ல வெட்கப்படுகிறேன் நான் அப்போ பிறக்கவில்லை ஆனால் என் அம்மா அதை சொல்லி கவலைப்பட்டாள்..

இப்போ விளங்குகிறது எந்த சூழலில் நீ வளர்ந்தாய் என்று..

என்ன சேர் செய்வது .அது என் தலைவிதி நான் அவருக்கு மகனாகப் பிறந்தது என்றான் அந்த சிறுவன்..

உன் அம்மா பெயர் என்ன? என்று நான் கேட்டேன்அவள் பெயர் வள்ளியம்மா:

அவள் மலைபிரதேசத்தில் உள்ள தேயிலைத் தோட்டத்து பெண்ணா? என்று கேட்டேன்

ஆமாம் சேர் சரியாகத்தான் சொன்னீர்கள் அவளொரு தோட்டக் கூலி மகள் அவள் அங்கு வேலை செய்ய முடியாத காரணத்தினால் கொழும்புக்கு வந்தவள் இங்கு அவளைக் கூட்டிவந்த தரகர் சந்திரசேனா என்ற சிங்களவனை அறிமுகப்படுத்தி அவளுக்கு உத்தியோகம் எடுத்து தருவான் என்று சொன்னான் ஆனால் நடந்தது வேறு அவன் என் அம்மாவை வைப்பாட்டியாக வைத்திருந்தான் அவன் தான் என் அப்பா சந்திரசேனா..

அது சரி உன் அம்மா எப்படி உன் அப்பாவின் செயல்களை பொறுத்து கொண்டாள்?

அதை ஏன் கேட்கிறீர்கள். தினமும் அவர் குடித்துவிட்டு வந்து என் அம்மாவை அடிப்பார் ஒருமுறை நான் தடுக்கப் போய் என் கன்னத்தில் அடித்தார் அவர் கையில் இருந்த மோதிரம் என் முகத்தில் பட்டு இந்த வடு தோன்றிவிட்டது பார்த்தீர்களா என்று காட்டினான்.

அட பாவி அப்படி ஒரு கொடூர மனுசனாஉன் தந்தை என்று கேட்டேன் ,

ஆமாம் சார்..

அப்போ உன் அம்மா ஒரு தமிழச்சி என்றபடியால் எப்படி வள்ளியம்மா என்ற பெயரை வைத்திருக்க விட்டார் என்று நான் அவனைக் கேட்டேன்.

அது ஒரு கதைசேர் அவளுடையபெயரை சுது மெனிக்கே என்று என் அப்பா மாற்றிவிட்டார்..

அப்போ உன்னுடைய அம்மா வெள்ளை நிறமுள்ளவளா? என்று கேட்டேன்

ஆமாம் சார் அதனால் தான் அவளை விரும்பி என் அப்பா அவளை வைத்திருந்தார் என்னுடைய நிறத்தை பாருங்கள் எனக்கும் அந்த வெள்ளை நிறத் தோல் வந்துவி ட்டது..

**(அடுத்த இதழில் தொடர்ந்து... முடிவுறும்)**

## ஐரோப்பிய தமிழ்ப்பெண்ணின் சாதனை!..
## நோர்வே பாராளுமன்றத்துக்குச் செல்லும் ஹம்சாயினி....



ஜேர்மனி "மண்" சஞ்சிகையால் 2019ல வாழ்த்தப்பட்டவர்!..

யாழ்ப்பாணம்-கைதடியைப் பிறப்பிடமாகக் கொண்ட ஹம்சாயினி குணரத்தினம் நோர்வே நாடாளுமன்றிற்கு 14.09.2021) தெரிவாகியுள்ளார். மூன்று வயதில் தனது பெற்றோருடன் நோர்வேக்கு அகதியாக வந்த கம்ஸி, தமிழ் இளையோர் அமைப்பில் இணைந்து அரசியலுக்கு வந்தவர். தொழிற்கட்சியின் ஒஸ்லோ இளைஞரணியில் இணைந்த அவர் அதன் தலைவியாகவும் பதவி வகித்தவர். 19 வயதில் (2007) ஒஸ்லோ மாநகரசபையின் பிரதிநிதியாகப் பெரும் ஆதரவுடன் தெரிவான அவர், 2015முதல் ஒஸ்லோ மாநகரசபையின் துணை முதல்வராகப் பதவி வகிக்கிறார்.

கடந்த 2015ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 21ம் திகதி ஹம்சாயினி குணரத்தினம் ஒஸ்லோவின் பிரதி மேயராக தெரிவுசெய்யப்பட்டிருந்தார். 2019ம் ஆண்டில் மீளவும் அந்தப் பதவிக்கு தெரிவாகியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. தமிழர்களுக்கு இது ஒரு விதத்தில் முக்கியமாகிறது. முதன்முறையாக ஐரோப்பிய நாடு ஒன்றில் வாழும் தமிழர் ஒருவர் நாடாளுமன்றப் பிரதிநிதியாகிறார். பாராட்டுக்களும் வாழ்த்துகளும்!..

நோர்வேயின் மிகப்பெரிய கட்சியான தொழிற்கட்சியின் சார்பில் தலைநகர் ஒஸ்லோவில் நிறுத்திய வேட்பாளர்களில், பிரதமர் பதவிக்கான வேட்பாளர் யூனாஸ் கார் ஸ்டூரவுக்கு அடுத்த இடத்தில் கம்சியை நிறுத்தியதன் மூலம் அவரது நாடாளுமன்றப் பதவியை உறுதி செய்திருக்கிறது. முழுநேர அரசியல்வாதியாக நோர்வேத் தமிழரிடையே இருந்து உருவாகியவர் கம்ஸி மாத்திரமே எனலாம். "மண்" சஞ்சிகையின் சார்பில் வாழ்த்தி மகிழ்கின்றோம்!..

# Nobel Prize -2021 நோபல் பரிசுகள்....




சுவீடன் நாட்டவரான நோபல் என்பவரின் நினைவாக ஆண்டுதோறும் வழங்கப்படும் இந்தப் பரிசு வழங்கும் திட்டம் 1901ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு தற்போது 119 வருடங்கள் நிறைவுகண்டுள்ளன. இந்த ஆண்டு வழங்கப்பட்ட நோபல் பரிசுகளைப் பெறுபவர்களின் விபரம்...

1. பௌதீகம் (இயற்பியல்) Physics

| | | | |
|---|---|---|---|
| - Syukuro Manabe | - USA /Japan | - 90 வயது | - ஆண் |
| - Klaus Hasselmann | - Germany | - 89 வயது | - ஆண் |
| - Giorgio Parisi | - Italy | - 73 வயது | - ஆண் |

2. இரசாயனம் (வேதியல்) Chemistry

| | | | |
|---|---|---|---|
| - Benjamin List | - Germany | - 53 வயது | - ஆண் |
| - David Mac Millan | - England | - 53 வயது | - ஆண் |

3. மருத்துவம் ∴ உடற்கூற்றியல் Physiology or Medicine

| | | | |
|---|---|---|---|
| - David Julins | - USA | - 65 வயது | - ஆண் |
| - Ardem Patapoutian | - USA/Libanon | - 54 வயது | - ஆண் |

4. இலக்கியம் Literature

| | | | |
|---|---|---|---|
| - Abdul Razig | - Tanzania | - 73 வயது | - ஆண் |

5. பொருளாதாரம் Economic

| | | | |
|---|---|---|---|
| - David Card | - USA/Canada | - 65 வயது | - ஆண் |
| - Joshua D Angrist | - USA | - 61 வயது | - ஆண் |
| - Guido W Imbens | - Netherland | - 58 வயது | - ஆண் |

6-சமாதானம் Peace Prize -

| | | | |
|---|---|---|---|
| - Maria Ressa | - Philippines | - 58 வயது | - பெண் |
| - Dmitry Muratov | - Russia | - 59 வயது | - ஆண் |

# கிறிஸ்த்து பிறப்பு!..

-ஜெயா நடேசன்-



கிறிஸ்த்து பிறப்பு விழா கடவுளின் திருமகன் யேசு இந்தஉலகிற்கு ஒரு குழந்தையாக வந்த விழா. வானதூதர் இடையருக்கு நற்செய்தி அறிவித்த போது இன்று ஆண்டவராகிய மெசியா என்னும் மீட்பர் உங்களுக்காக தாவீதின் ஊரில் பெத்தலேமில் பிறந்திருக்கிறார். குழந்தையைத் துணிகளில் சுற்றித் தீவணத்தொட்டியில் கிடத்தியிருப்பதை காண்பீர்கள் என்றனர்.

குழந்தை வடிவில் கடவுளின் திருமகனார் வரக்காரணம் குழந்தையும் தெய்வமும் ஒன்று என்பதாலா?..இறையாட்சி குழந்தைகளுக்கே உரியது என்பதாலா?.. பலவீனமான மனித இயல்பை ஏற்க இருந்த இறைமகனாருக்குக் குழந்தை மனித பலவீனத்தின் மொத்த வடிவம் என்பதாலா?.. எது எப்படி இருப்பினும் கடவுளின் மகன் குழந்தை வடிவாய்ப் பிறந்த காரணத்தால் குழந்தைகள் பெருமை அடைகின்றனர்.

அவர்களது மனிதமாண்பு ஏற்றம் பெறுகின்றது. குழந்தைகளுக்கு எதிரான வன்முறைகள் களையப்படவேண்டும் என்று செய்த உரத்த குரலில் பறை சாற்றப்படுகின்றது. நம்இல்லங்களில் பிறக்கும்குழந்தைகளில் பெத்தலேமில் பிறந்த யேசு குழந்தையைக் காணவேண்டும் என்னும் அழைப்பு நம் செவிகளில் ஒலிக்கிறது. யேசு பிறந்தபோது ஏரோது சில குழந்தைகளைக் கொன்றான். இன்று நவீன ஏரோதுகள் பல குழந்தைகளைப் பாலியல்வன்முறை, பள்ளிக்குச் செல்ல வேண்டிய குழந்தைகள் ஏழைக் குழந்தைகளாகப் பிச்சை எடுக்கவும், சமையல் அறைகளில் கூலி வேலைகள், அடிமைத்தொழில் செய்யவும் அவர்களைக் கசக்கிப் பிழிந்து வருவதும், பிள்ளைகளை விற்றுப் பணம் சம்பாதிப்பதிலும் ஈடுபடுகின்றனர்.

மிகுதி 67ம் பக்கம்---

# மட்டுவில் தந்த இலக்கியப் படைப்பாளி நந்தினி சேவியர் காலமானார்.

க.அருந்தவராசா - சுவீஸ்லாந்து-

ஈழத்து இலக்கிய கர்த்தா நந்தினி சேவியர் 16.09.2021அன்று இறைவனடி சேர்ந்தார். அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திப்பதோடு குடும்பத்தினர்க்கு ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்து கொள்கிறோம்.

சேவியர் என்ற இயற்பெயர் கொண்ட நந்தினி சேவியர் (பி. மே 25, 1949) ஈழத்துப் படைப்பாளிகளில் ஒருவர். 1967 இல் இருந்து எழுதிவருகிறார். கவிதை, சிறுகதை, நாவல், பத்தி, விமர்சனக்கட்டுரை ஆகிய துறைகளில் தமது ஆளுமையைச் செலுத்தி வருகிறார்.சேவியர் யாழ்ப்பாணம் தென்மராட்சி மட்டுவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவர். திருகோணமலையில் வசித்தவர். கலை இலக்கியத்தில் தொடர்ச்சியாக ஈடுபட்டு வந்தவர்ர்.

பாடசாலைக்கல்வியை மட்டுவில் கல்வயல் சைவப்பிரகாச வித்தியாசாலை, மட்டுவில் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை,சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி, வதிரி திருஇருதயக் கல்லூரி ஆகியவற்றில் கற்றார். பின்னர் யாழ் தொழில்நுட்பக் கல்லூரியிலும் பயின்றார்.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (சீனச்சார்பு) வாலிப சங்க இயக்கத்தில் இணைந்து செயற்பட்டவர். இலக்கியச் செயற்பாடுகளுடன் சமூகச்செயற்பாடுகளிலும் முன்நின்று உழைத்தவர்.சிறுகதைத்துறையிலேயே நன்கு அறியப்பட்டவர். நந்தினி சேவியர் என்ற பெயரிலேயே அதிகமும் எழுதிவருகிறார். இவருடைய பத்தி எழுத்துக்கள் மற்றும் கட்டுரைகள் சில வ.தேவசகாயம், தாவீது கிறிஸ்ரோ ஆகிய பெயர்களிலும் வெளிவந்துள்ளன.

நாவல்கள் குறுநாவல்கள் கட்டுரைகள், பத்தி எழுத்துக்கள் ஆகியவற்றை எழுதியிருந்தாலும் அவை இன்னமும் நூல்வடிவம் பெறவில்லை. இவரின் சிறுகதைகள் மாத்திரமே இரண்டு தொகுதிகளாக வெளிவந்துள்ளன.



இவருடைய படைப்புக்கள் தாயகம், மல்லிகை, வாகை, அலை, புதுசு, இதயம், ஒளி,சிந்தாமணி, வீரகேசரி, தொழிலாளி, சுதந்திரன், ஈழமுரசு, ஈழநாடு ஆகிய சஞ்சிகைகளிலும் பத்திரிகைகளிலும் வெளிவந்துள்ளன. இலங்கை வடமாகாண கல்வி அமைச்சு கலை இலக்கியச் செயற்பாடுகளுக்கு இவர் செய்த பங்களிப்பு முக்கியமானது.

"மேகங்கள்", "கடற்கரையில் தென்னை மரங்கள் நிற்கின்றன" ஆகிய நாவல்களையும் "ஒரு வயதுபோன மனிதரின் வாரிசுகள்" என்ற குறுநாவலையும் எழுதியுள்ளார். ஆனால் அவை இன்னமும் பிரசுர வடிவம் பெறவில்லை.2012 ஆம் ஆண்டிலிருந்து "தரம் 10 தமிழ்மொழியும் இலக்கியமும்" என்ற பாடநூலில் "நந்தினிசேவியர் சிறுகதைகள்" என்ற முருகையனின் கட்டுரை சேர்க்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் செப்ரெம்பர் 2000 இல் காலச்சுவடும் சரிநிகரும் இணைந்து நடாத்திய தமிழினி 2000 மாநாட்டில் கலந்து கொண்டு "இருபதாம் நூ ற்றாண்டில் ஈழத்துத் தமிழ் மார்க்சிய இலக்கியம்" என்ற கட்டுரையை சமர்ப்பித்து உரை நிகழ்த்தினார்.வெளிவந்த நூல்கள்தொகுதிகள்..

"அயல் கிராமத்தைச் சேர்ந்தவர்கள்" (சிறுதைத் தொகுப்பு) பதிப்பு 1993, வெளியீடு - தேசிய கலை இலக்கியப் பேரவை "நெல்லிமரப் பள்ளிக்கூடம்" (சிறுகதைத் தொகுப்பு) பதிப்பு 2011, வெளியீடு கொடகே. நந்தினி சேவியர் படைப்புகள், 2014 டிசம்பர், விடியல் பதிப்பகம், சென்னை.ஈழநாடு பத்திரிகையின் 10வது ஆண்டு நிறைவையொட்டி அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட நாவல் போட்டியில் "மேகங்கள்" என்ற நாவல் இரண்டாம் பரிசு பெற்றது.

பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச்சங்கம் 50 வது ஆண்டு நிறைவையொட்டி நடத்திய நாவல் போட்டியில் "ஒரு வயதுபோன மனிதரின் வாரிசுகள்" என்ற குறுநாவல் தங்கப் பதக்கத்தை முதற்பரிசாகப் பெற்றது. 1993 இல் வெளிவந்த சிறந்த சிறுகதைத்தொகுப்புக்கான முதற்பரிசை விபவி சுதந்திர இலக்கிய அமைப்பு "அயல் கிராமத்தைச் சேர்ந்தவர்கள்" என்ற நூலுக்கு வழங்கியது.உள்ளூராட்சித் திணைக்களம் நடத்திய "தமிழின்பக் கண்காட்சி" யில் "அயல்கிராமத்தைச் சேர்ந்தவர்கள்" நூலுக்கு முதற்பரிசு வழங்கியது.

இவரது இலக்கியப் பங்களிப்புக்காக 2011 இல் கிழக்கு மாகாண முதலமைச்சர் விருது கிடைத்தது. 2015 கொடகே வாழ்நாள் சாதனையாளர் விருது வடமாகாண சிறந்த நூல் பரிசு, 2012 - நெல்லிமரப்பள்ளிக்கூடம் (சிறுகதைத் தொகுதி) சாகித்திய மண்டலப் பரிசு, 2012 - நெல்லிமரப் பள்ளிக்கூடம் (சிறுகதைத் தொகுதி) கிழக்குமாகாண சிறந்த நூல் பரிசு (பல்துறை) - நந்தினி சேவியர் படைப்புகள் கலாபூஷணம் விருது - 2013 பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்ச் சங்கம் 2014-2015 ஆம் ஆண்டுக்கான "சங்கச் சான்றோர் விருது" வழங்கிக் கௌரவித்தது.

# யேர்மனி தமிழ்ப் பெண் எழுத்தாளர்கள்!..

(தொகுப்பு:-சாந்தினி துரையரங்கன்)

## யேர்மன் தமிழ்ப் பெண் எழுத்தாளர்கள் தொடர்ச்சி - 5



### திருமதி லோகாஞ்சனா அருந்தவநாதன்

1.பிறப்பு :

பெயர் : திருமதி. லோகாஞ்சனா - அருந்தவநாதன்.

காலம் : 04.04.1965.

ஊர் : மூளாய்.

பெற்றோர் : திரு.திருமதி. கர்ணசாமி - உமாதேவி.

2.கல்வி : பாடசாலை :

யா.பொன்னாலை வரதராசப் பெருமாள் வித்தியாலயம். (1-5)

யா.சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி. (6-12)

பல்கலைக்கழகம் : பேராதனைப் பல்கலைக் கழகம் - (வெளிநிலை முதற்தேர்வு.)

கலைகள்: தட்டச்சு,வர்ணக்கலை,தையற்கலை.....

3.பணி: ஈழத்தில் :தமிழ்,சமூகவியல் ஆசிரியை.

(யா.மூளாய் . அ.மி.த.கலவன் பாடசாலை.)

(மூளாய் சைவப் பிரகாச வித்தியாலயம்.)

புலத்தில் : தமிழ் ஆசிரியை,கவிதாயினி .(தமிழாலயம் )

4.வாழ்க்கைக்குறிப்பு:

குடும்பம் : வாழ் இடம் : ஓபகௌசன்,செர்மனி.

கணவர் : இளையதம்பி - அருந்தவநாதன்.

(வீதி கட்டுமானப் பணியாளர்,செர்மனி.)

பிள்ளைகள் : லக்மி - அருந்தவநாதன்.(பல்கலைக் கழகம்)

லவன் - அருந்தவநாதன்.(பல்கலைக் கழகம்)

5.எழுத்துத் துறை சார்ந்த படைப்புகள் : (புலத்தில்)
"ஏலையா" சஞ்சிகை - யேர்மனி.

வானொலி : அனைத்துலக் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தமிழ்.
(ஐபிசி தமிழ்,இலண்டன்)
பெண்ணியம்,மண்ணியம் சார்ந்த ஆக்கங்கள்,
கவிதை,இசையும் கதையும், கவிதையும் கானமும்.
ஐரோப்பியத் தமிழ் வானொலி (ஹம்,யேர்மனி )
கவிதையும் கானமும்.

6.சமூக,சமய,கல்வி போன்ற பொதுப்பணி : (ஈழத்தில்)

சமூகம் :

மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம் - செயளாளர்.
(ஆசிரியர் சங்கம்)
மூளாய் மாதர் சங்கம் - செயலாளர்.
மூளாய் இளைஞர் கழகம் - அங்கத்தவர்.
(நூல் நிலையக் கவனிப்பாளர் )
மூளாய் ஐக்கிய நாணய சங்கம் -அங்கத்தவர்.
செஞ்சிலுவைச் சங்கம் - அங்கத்தவர்.
அரிமா சங்கம் - அங்கத்தவர்.
கலை மஞ்சரி - நோர்வே.

சமயம் :

மூளாய் சைவ சமய வழிபாட்டுச் சபை.
பொன்னாலை வரதராசப் பெருமாள்
ஆலய தேவஸ்தான பரிபாலனசபை.

கல்வி :

இலவசக் கல்வி போதனை, நாடகம்,
விவாத அரங்கம், கலை விழாக்கள் நடத்திக்
கல்வி வளர்சிக்கு உதவுதல்.
தமிழாலயம் : (புலத்தில்)
கவியரங்கம், வில்லுப்பாட்டு,
தமிழ்த்திறன் வளர்ச்சிக்கான ஆக்கங்கள் .
விளையாட்டுத்துறை ஏனையவை.....
தமிழ் மக்களுக்கான தனிப்பட்ட ஆக்கங்கள்.

# யேர்மன் தமிழ்ப் பெண் எழுத்தாளர்கள் தொடர்ச்சி - 5






## திருமதி ராணி சம்பந்தர் - முன்ஸ்ரர் - யேர்மனி

பெயர் - திருமதி ராணி சம்பந்தர்
பிறந்த இடம் - யாழ் உரும்பராய்
தந்தை, தாய் பெயர் - சுப்ரமணியம், அன்னலஷ்சுமி

கல்வி கற்ற பாடசாலைகள்- (ஆரம்பகல்வி) உரும்பராய் சைவத் தமிழ் வித்தியாசாலை.
வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம்.
(உயர்நிலை) யாழ் இந்துமகளிர் கல்லூரி,
உரும்பராய் இந்து கல்லூரி
கணவன் - சுப்ரமணியம் திருஞானசம்பந்தர்
பிள்ளை - (மகன்) யூலியன்

எழுத்துத்துறை - கவிதை, கட்டுரைகள், கதைகள்
எழுதிய புத்தகம் - நீங்காத நினைவுகள்-2015 (கவிதைத் தொகுப்பு )

ஈழத்தில் பாடசாலை கல்வி காலத்தில் இருந்து கவிதை எழுதும் பழக்கம் ஏற்பட்டாலும் யேர்மனி வந்த பின்னரே எழுதும் ஆற்றல் வீச்சுப் பெற்றது என்கின்றார். இளமைக்காலத்தில் விளையாட்டுத்துறைகளில் ஈடுபட்டு சிறப்பு பரிசுகளும் பெற்றுள்ளார்.

சிங்கப்பூர் சென்று அங்கு இரண்டு வருடம் தையல் வேலை செய்த அனுவம் உடையவர். தற்போதும் நிறைய கைவேலைகள் செய்யும் பழக்கம் கொண்டவர்.

தனது ஓய்வு நேரங்களில் மனதில் தோன்றுவதை அப்படியே எழுதும் பழக்கம் உடையவர். இதனால் நாலாயிரத்திற்கு மேற்பட்ட கவிதைகள் எழுதி அவற்றில் சிலவற்றைத் தொகுத்து " நீங்காத நினைவு " (2015)என்ற புத்தகமாக ஐந்து வருடங்களின் முன்பு வெளியிட்டுள்ளார்.

தொடர்ந்து லண்டன் பாமுகத் தொலைக்காட்சியில் கவிதை, இலக்கியம் எழுதி வருகின்றார்.

புலம்பெயர்ந்து வாழ்ந்தாலும் தமிழ்மேல் கொண்ட பற்றினால் யேர்மனி- முன்ஸ்ரர் தமிழாலயத்தில் ஐந்து வருடங்களாக தமிழ் கற்பிக்கும் ஆசிரியராகவும் கடமைபுரிந்துள்ளார்.

தற்போது லண்டன் தமிழ் வானொலியில் தனது பல படைப்புக்களை ஆர்வத்துடன் வெளிக்கொணர்ந்து வருகின்றார்.

இவர் மேலும் பற்பல படைப்புக்களை செய்து வாழ மனதார வாழ்த்தி மகிழ்கின்றோம்.

---

### கவிஞர்.-


பார்க்க முடியாததை, கேட்க முடியாததை, சொல்லில் வடிக்க முடியாத உணர்வை யார்?..தனது கவிதை மூலம் பார்க்க வைக்கிறாரோ, கேட்க வைக்கிறாரோ அல்லது உணர வைக்கிறாரோ அவர் கவிஞர்.

### மகாகவிஞர்:-

யாருடைய கவிதையிலேயே எதிர்பார்க்க முடியாத கர்ப்பனை வளம் (Unexpected imagination) நிறைந்து கிடக்கிறதோ, அவர்தான் மகா கவி. அக்கவியைத் தொடத் தொட, உரைக்க உரைக்கப் புதிது புதிதாக அர்த்தங்கள் அதற்குள் வெளிப்படும் என்றால் அவரே மகாகவி.

# தமிழ் இளைஞனின் முன்மாதிரி!..

-கொங்கா ஸ்ரான்லி-



புலம்பெயர் நாடுகளில் வாழும் தமிழ் இளைஞர்கள் பல சாதனைகளைச் செய்துகொண்டிருக்கிறார்கள் என்பது சிறப்பாகும். இவற்றைவிட மனித நேயப் பணிகளையும் செய்யத் தவறுவதிலலை. நம் தாயகத்தில் நடைபெற்று முடிந்த போர் அனர்த்தங்கள், மழை, வெள்ளம், புயல் போன்ற இயற்கை அழிவுகளுக்கும் அவ்வப்போது உதவிவருகிறார்கள் என்பது பாராட்டுக்குரிய விடையமாகும்.

இன்னும் ஒருபடி மேலாக சர்வதேச அமைப்புக்களுடனும் தொடர்புகளை ஏற்படுத்தி எயிட்ஸ், போர், மற்றும் இயற்கை அழிவுகளான சுனாமி, மழைவெள்ளம், கடும்வறட்சி, பசி, பட்டினி போன்றவற்றிற்கும் தம்மாலான உதவிகளை வழங்கிவருகிறார்கள்.

புலம் பெயர்ந்தாலும் நமது முன்னோரின் வழிகாட்டலால் வளர்க்கப்பட்ட இன்றைய இளைய சமுதாயம் பல நற்பணிகளைச் செய்துவருவது கவனிக்கதக்க விடையமாகும். சிலர் தாம் வந்த பாதையை மறந்து, இன, மொழி, மத, கலை, கலாச்சார, பண்பாடுகளை இழந்து வாழ்ந்தாலும் பலர் இவைகளைக் கடைப்பிடிக்கும் பலம் எமக்குண்டு.பண்பாடும் நமக்குண்டு என வாழ்ந்து வருவது நல்லதோர் விடையமாகவே பார்க்க வேண்டும்

அந்த வகையில் இங்கு பிறந்து வளர்ந்தவர்தான கபிலன் சிவநேசன். இவர் தமிழ் ஆர்வலர். இங்கு 12 ம் வகுப்புவரை தமிழ்க் கற்றவர். அத்துடன் பல்கலைக் கழகத்தில் கட்டிட கலைஞர் பட்டம் பெற்று தொழில் செய்கிறார்.

யோ்மனியில் கடந்த ஆடி மாதம் 16ம்திகதி வட மேற்குப் பிராந்தியத்தில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு உயிரழிவும் வீடுகள், சொத்துக்கள் அழிந்து அவலப்பட்ட சமபவத்தை எல்லோரும் நன்கு அறிந்ததே.அதனால் கூடுதலாகப் ஆர்வைலேர்(Ahrweiler),ஏர்.ீ.ப்சட்(Erftstadt) நகரங்கள் பாதிக்கப்பட்டன.

இச்சம்பவததில்தான் கபிலன் சிவநேசன் ஆர்வைலெர் நகர மக்களுக்கு உதவி செய்வதற்கு சென்றிருக்கிறார். பரவலாக நிறைய இளையோர்,பெரியோர்,சாரணர் இயக்கம், தீயணைப்புபடை எல்லோரும் இணைந்து உதவிகளைச் செய்தனர். அங்குஅதிகமான வீடுகள் ,வீதிகள் எல்லாம் பாதிக்கப்பட்டிருந்தது.எல்லோரும் உலகத் தொலைகாட்சிகளில் பார்த்திருப்பீர்கள்.

இச் சம்பவங்களைக் கண்ணுற்ற கபிலன் நித்திரை இழந்து தவித்தாலும் மனம் சோர்வடையாமல் அந்தமக்களுக்கு ஏதாவது செய்துவிடவேண்டுமெனத் துடித்தெழுந்தார். அவர் தீயணைப்பு படையில் ஒரு அங்கத்தவராக இருப்பதால். அவர் தன்னுடைய நகர சஞ்சிகைக்கு தகவல் கொடுத்திருந்தார்.ஆர்வைலெர் மக்களுக்கு உதவிசெய்ய விருப்பம் உள்ளவர்கள் தொடர்பு கொள்ளும்படி கோரியிருந்தார். அதற்கு பதிலும் கிடைத்தது. எல்லோரும் உதவி செய்ய முன் வந்தனர்.

ஒரு பென்ஸ் கம்பெனி ஒரு பெரிய லாரி கொடுத்துதவியது. அத்துடன் அதற்கு ஓட்டுனரும் கொடுத்துதவி செய்தார்கள்.கபிலனுடன் அவருடைய நண்பாகளும் சேர்ந்து செயல்பட்டனர். சிலர் பணம் உதவிகளும் செய்தார்கள்.கட்டிட விற்பனையாளர்கள் வீடு கட்டுவதற்கு தேவையான பொருட்களைக் கொடுத்து உதவினர்.பெற்றோல் வங்கி அந்த லாரிக்கு தேவையான பெற்றோலை கொடுத்துதவினர்.





இப்படி நிறைய பொருட்கள் சேர்ந்தது.அவற்றை லாரியில் ஏற்றிச் சென்று ஆர்வையலரில் உள்ள வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கொடுத்துதவினர். கிடைத்த பணத்தில் மக்களுக்கு தேவையான பல பொருட்களை வேணடிக் கொடுத்துதவினார்கள்.

எல்லோரும் உதவி செய்கிறார்கள் தான். ஆனல் ஒரு தமிழ்ப் பிள்ளை இப்படி ஒரு முயற்சி எடுத்து பேப்பரில் போட்டு இவ்வளவு பொருட்களை சேகரித்து மக்களுக்கு உதவியது பெரிய செயல் என்று சொல்லவேண்டும்.யேர்மன் மக்களே வியந்து பாராட்டினார்கள் என்றால் தமிழரின் மனித நேயம் மனிதப் பண்பு நிறைந்திருக்கின்றது எனச் சொல்லலாம்.எனவே எங்களுடைய அடுத்த தலைமுறை தமிழரின் முகவரியை இங்கு தடம் பதிக்கும் என்பதில் ஐயமில்லை.

இங்கே ஆர்வைலர் நகர மக்களுககு உதவி செய்ய ஒவ்வொரு சனிக்கிழமையும் 2,500 பேர் வருவார்களாம், ஞாயிற்றுக்கிழமை 1,500 பேர் தான் நிற்பார்களாம். ஆனல் இன்னும் மக்கள் சென்று உதவிய வண்ணம் இருக்கிறார்கள். கபிலனிடம் இன்னும் பணம் சேர்ந்திருக்கிறது. இன்னும் உபகரணங்கள் தேவையாக இருப்பதால் வாங்கி கொடுப்பதாகவும். மார்கழி மாதக் குளிருக்கு முன்பதாக அவர்கள் வீட்டு வேலைகள் முடித்து அங்கு அவர்கள் மீண்டும் வசிக்க வேண்டும் என்று துரிதமாக செயல்படுவதாகக் கூறினார்.

ஆகவே அவர் தன்னுடைய உதவிகளை மேலும் முன்னெடுக்கவேண்டும், கடவுள் அவருக்கு அனைத்து நலனையும் கொடுக்கவேண்டும் என் வாழ்த்துகிறோம். கபிலனின் மனித நேயப் பணிக்கு அவரைப் பாராட்டி வாழ்த்துவோம்.தாயகத்துக்கும் புலம்பெயர் தேசங்களிலும் தமிழ் இளையோரின் மனித நேயப் பணிகள் சிறக்கும் என நம்புவோம்!.

# சிரிப்பு!...சிரிப்பு!...கொஞ்சம் சிரியுங்கோ!..

ஆசிரியர்:- நம்ம நாட்டில தேனும் பாலும் பெருகி ஓடினால் எப்படி?.. இருக்கும்..
மாணவன்.- எறும்புக் கடி அதிகமாக இருக்கும்.

நண்பன்-1:- ஏண்டா சுற்றுலாவுக்கு வரவில்லை..
நண்பன்-2:- போய் வந்த பின் ஆசிரியர் கட்டுரை எழுதச் சொல்லுவார்..

கமல்:- நேற்று உன் மனைவிக்கும் அம்மாவிற்கும் இடையில் நடைபெற்ற சண்டையில் நீ யார் பக்கம் நின்றாய்?..
விமல்:- போடா..நான் அலுமாரிப் பின்பக்கம் பத்திரமாக நின்றேன்.

ஆசிரியர்:- தென்னை மரத்திலுள்ள ஆறு ஓலைகளையும் பனை மரத்திலிருந்து ஆறு ஓலைகளையும் கூட்டினால் என்ன வரும்?..
மாணவன்:- குப்பைதான் வரும் சேர்?..

ரவி:- பஸ்ஸின் சீற்றில் இடமிருந்தும் அந்தப் பெண் உட்காராமல் நிற்கிறாளே ஏன்?
ராஜன்:- அந்தப் பெண் அமராவதி?..

ஒருவர்:- மரத்துக்குப் பின் ஒளித்துக்கொண்டிருந்தது மன்னர்தான் என்பதை எதிரி எப்படிக் கண்டுபிடித்தான்?..
மற்றவன்.- உடலை மறைத்த மன்னர் தனது தொந்தியை மறைக்கத் தவறிவிட்டார்.

தந்தை:- என்னடா மகனே எல்லாப் பாடங்களும் "எவ்" (F) என்று காட்டுது?..
மகன்:- எல்லாம் (நல்லது) "Fantastic"என்று மகன் சொன்னான்.

மாணவன்:- சேர் பரீட்சைப் பேப்பரில் முட்டை போடாதீங்க..
ஆசிரியர்:- ஏனடா?..
மாணவன்.- புரட்டாதி மாதம் சனி விரதம்...

மனைவி:- இன்று கந்தசட்டி எல்லாருக்கும் சைவம்தான்..
கணவன்:- எடி கந்தசட்டியை வைத்துவிட்டு மச்சச்சட்டியை எடுத்துவாடி?..

குமார்:- டேய் நாதன் இவ்வளவு காலமும் என்ன வேலை செய்கிறாய்?..
நாதன்:- வேலை தேடுவதே எனக்கு வேலையாகப் போட்டுது!..

**-ஜெயா நடேசன்-**

# ஜேர்மனிய பாராளுமன்ற பொதுத்தேர்தல் - 2021
## Bundestag Wahl (German Federal Election)



Olaf Scholz - SPD
ஒல்வ் சொல்ஸ்

### எதிர்பார்க்கப்படும் புதிய கான்சிலர் ( 9வது கான்சிலர்)

யேர்மனிய பாராளுமன்றத்தை Bundestag என்று அழைப்பார்கள். நான்கு வருடங்களுக்கு ஒரு தடவை பாராளுமன்றத் தேர்தல் நடைபெறுவது இந்த நாட்டின் அரசியல் யாப்பில் வரையறுக்கப்பட்டுள்ளது. அதன்படி பாராளுமன்றத் தேர்தல் எதிர்வரும் 26.09.2021ம் திகதி யேர்மனியிலுள்ள 16 மாநிலங்களிலும் நடைபெற்றது.

இத்தேர்தலானது 20 வது பாராளுமன்றப் பொதுத்தேர்தலாகும். யேர்மனிய நாட்டுத் தேர்தல் முறையில் அரசியல் கட்சிக்கும் கான்சிலராகத் தெரிவுசெய்யப்படுபவருக்கும் மக்கள் வாக்களிப்பார்கள். இறுதியில் எந்தக் கட்சி கூடுதலான வாக்குகள் பெற்றுக்கொள்கிறதோ, அந்தக் கட்சியின் முதன்மை வேட்பாளர் நாட்டின் Bundeskanzler கான்சிலராகத் (Chancellor) தெரிவு செய்யப்படுவார்.

இவர்தான் நாட்டின் அதிகாரம் மிக்க பதவியில் இருப்பார். யேர்மனியைப் பொறுத்தளவில் கடந்த 15 ஆண்டுகளாக அங்கலா மேக்கல் (Angela Merkel) என்ற பெண்மணியே ஆட்சியைத் திறப்பட நடாத்திவந்தார். இவர் CDU கட்சியின் தலைவராகவும் கான்சிலராகவும் (Bundeskanzler) இருந்து ஓய்வு பெறுவதால் இத்தேர்தலில் போட்டியிடாமல் இன்னொருவர் போட்டியிட விட்டுக் கொடுத்துள்ளார்.

யேர்மனிய அரசியல் வரலாற்றில் CDU கட்சி அல்லது SPD கட்சி தான் கூடுதலாக ஆட்சியில் இருந்துள்ளன. பின்னர் இரண்டு கட்சிகளும் கூட்டணி அமைத்து ஆட்சியை பிடித்தன. ஆனால் கடந்த இரண்டு தேர்தல்களிலும் பிரதான கட்சிகளான CDU ஆளும்கட்சியும் எதிர்கட்சியும் SPD ஒன்று சேர்ந்து ஆட்சி அதிகாரத்தைப் பிடித்தன.

நாட்டில் 26.09.2021 அன்று நடைபெற்ற தேர்தல்களின் முடிவுகளின் படி எந்தக்கட்சியும் அறுதிப்பெரும்பான்மை பெறாத காரணத்தால் தற்போது மூன்று கட்சிகள் கூட்டுச்சேர்ந்து புதிய அரசு அமைக்க முயற்சி எடுத்து வருகின்றன. இந்தச் குறிப்பு 31.10.2021 எழுதும்வரை புதிய அரசு அமையவில்லை. யேர்மனியின் அரசியல் வரலாற்றில் முதன்முறையாக மூன்று கட்சிகள் ஒன்று சேர்ந்து அரசமைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.



SPD Green Party FDP

| Political party | Seats | Diff. on 2017 |
|---|---|---|
| CDU | 152 | -48 |
| SPD | 206 | +53 |
| AfD | 83 | -11 |
| FDP | 92 | +12 |
| DIE LINKE | 39 | -30 |
| GRÜNE | 118 | +51 |
| CSU | 45 | -1 |
| SSW | 1 | +1 |

-மேலேயுள்ள தரவுகளின் படி 2021 தேர்தலில்ஒவ்வொரு கட்சியும் பெற்ற ஆசனங்கள் (MP) அடுத்தது 2017 நடைபெற்ற தேர்தலில் பெற்ற உறுப்பினர்களுக்கும் இந்த ஆண்டு தெரிவான உறுப்பினர்களின் வித்தியாசம்.

-மொத்தம் 736 பாராளுமன்ற உறுப்பினர்கள் (MP) தெரிவுக்கான தேர்தலில் முடிவுகளை மேலே காணலாம். இதன்படி எந்தக்கட்சியும் அறுதிப் பெரும்பான்மை பெறாத காரணத்தால் SPD> Green> FDP ஆகிய மூன்று கட்சிகள் ஒன்று சேர்ந்து முதன் முதலாக கூட்டரசாங்கம் அமைய இருக்கின்றது. கீழே தேர்தல் முடிவுகள்...

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Persons entitled to vote | | | 61,181,072 | - | |
| Voters | 46,854,508 | 76.6 | +0.4 | 46,854,508 | 76.6 |
| Invalid | 492,495 | 1.1 | -0.2 | 412,485 | 0.9 |
| Valid | 46,362,013 | 98.9 | +0.2 | 46,442,023 | 99.1 |
| CDU | 10,451,524 | 22.5 | -7.7 | 8,775,471 | 18.9 |
| SPD | 12,234,690 | 26.4 | +1.8 | 11,955,434 | 25.7 |
| AfD | 4,695,611 | 10.1 | -1.3 | 4,803,902 | 10.3 |
| FDP | 4,042,951 | 8.7 | +1.7 | 5,319,952 | 11.5 |
| DIE LINKE | 2,307,536 | 5.0 | -3.6 | 2,270,906 | 4.9 |
| GRÜNE | 6,469,081 | 14.0 | +5.9 | 6,852,206 | 14.8 |
| CSU | 2,788,048 | 6.0 | -1.0 | 2,402,827 | 5.2 |
| FREIE WÄHLER | 1,334,739 | 2.9 | +1.6 | 1,127,784 | 2.4 |



யேர்மனிய அரசியல் வரலாற்றில் இதுவரை எட்டு (8) கான்சிலர்கள் பதவி வகித்திருக்கிறார்கள். ஆனால் ஒரே ஒரு பெண்மணிதான் அஞ்சலா மேர்கல் மட்டும் பெண் கான்சிலராவர். (Angela Merkel)

யேர்மனியில் முன்னாள் கான்சிலர்களின் விபரம்...

1. Konrad Adenauer (1949–1963)
2. Ludwig Erhard (1963–1966)
3. Kurt Georg Kiesinger (1966–1969)
4. Willy Brandt (1969–1974)
5. Helmut Schmidt (1974–1982)
6. Helmut Kohl (1982–1998)
7. Gerhard Schröder (1998–2005)
8. Angela Merkel (2005 - 2021)
9. Olaf Scholz - 2021 - .............

## 2021 தேர்தலில் வெற்றி பெற்றவர்கள் விபரம்:-

| Party | Leader | % | Seats | கூடியது / குறைந்தது |
|---|---|---|---|---|
| SPD | Olaf Scholz | 25.7% | 206 | +53 |
| CDU/CSU | Armin Laschet | 24.1% | 197 | -49 |
| Green | Annalena Baerbock | 14.8% | 118 | +51 |
| FDP | Lindner | 11.5% | 92 | +12 |
| AfD | A. Weidel/T. Chrupalla | 10.3% | 83 | -11 |
| Left | J. Wissler/D. Bartsch | 4.9% | 39 | -30 |
| SSW | Stefan Seidler | 0.1% | 1 | +1 |

**53ம் பக்கத் தொடர்ச்சி...** பச்சிளம் பருவத்திலே பாலுறவுச் செயல்களில் வலுக்கட்டாயமாக ஈடுபடுத்தப்பட்டு உருக்குலைந்து நலிந்துகொண்டிருக்கிறார்கள். இன்று சமுதாயம் கண்மூடிக்கொண்டுதான் இருக்கின்றது. கிறிஸ்துமஸ் தினத்தில் பிறந்த யேசு காணமல் ஆக்கப்பட்ட அனைத்து மக்களையும் தேடி வருகின்றார். கிறிஸ்த்து பிறப்பு விழாவைக் கொண்டாடும் நாம் என்ன செய்யப் போகின்றோம்.

கிறிஸ்த்துவின் பிறப்பு நமக்கு விடுதலையின் மீட்பைத் தந்தது.இருளில் நடந்த மக்களுக்கு ஒளியைப் பெற்றுத் தந்தது. எனவே இவ்வருடம் யேசுவின் பிறப்புநாளை பக்தியுடன் வரவேற்போம். எமது குழந்தைகளுக்காகவும் கொடிய தொற்று நோய்கள் எம்மைவிட்டு அகல வேண்டும் என்னும் நம்பிக்கையுடன் வேண்டுவோம். யேசு பாலன் பிறப்பை ஓர் அர்த்தமுள்ள விழாவாகக் கொண்டாடுவோம்!...

- - - - - - - - - - - - - - - - - - - - - - -

# பொன் மொழிகள்

1-பசித்தோருக்கு உணவு இடுவதே என் மதம். வறியவரிடமும் பாமரரிடமும் அன்புடன் பழகுபவரே என் கடவுள். - சுவாமி விவேகானந்தர்

2-உண்மை ஒன்றுதான் என்றும் நிலைத்து நிற்கும் தகுதியைப் பெற்றிருக்கிறது. -புத்தபிரான்

3-ஆசை புத்தியை மறைக்கும்போது அறிவு வேலை செய்யாமல் போய்விடுகிறது. -கவியரசர் கண்ணதாசன்

4-நல்ல எண்ணத்தோடு இரு..அது உன் நடத்தையைப் பாதுகாக்கும். -வள்ளலார்

5-வெற்றி என்பது முழுத்தியாகமும் செய்த பின்னரே கிடைக்கக்கூடிய ஒன்றாகும். -ஜவஹர்லால் நேரு

6-கடின உழைப்பு தெய்வ வழிபாட்டுக்குச் சமமாகும். -லால்பகதூர் சாஸ்திரி

7-நம்பிக்கை உண்டானால் வெற்றியும் உண்டு. -மகாகவி பாரதியார்

8-ஆற்றலைவிட ஆர்வமே வெற்றிக்கு அடிப்படைக் காரணம். -ஆ லங்கேஸ்

9-எத்தனை படிகள் என்று மலைக்காதீர்கள்..எல்லாப் படிகளும் கடக்கக் கூடியவையே -இராமலிங்க வள்ளலார்

10-ஜாதகத்தையும் ஜோதிடத்தையும் நம்புவதைவிட கடும் உழைப்பில்தான் நல்ல வாழ்வு உண்டு. -நேரு

# தாயகச் செய்திகள் சில...

-இலங்கை மக்களில் 12 பேருக்கு ஒருவர் என்ற கணக்கில் நீரழிவு நோய் காணப்படுவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

-இலங்கைப் பொலிஸ் 155 வருட நிறைவைக் கொண்டாடியது.

-இலங்கை வங்கி 82 வருட நிறைவைக் கொண்டாடியது.

-அநுராதபுரம் சிறையில் தமிழ் அரசியல் கைதிகளைத் துப்பாக்கி முனையில் பயமுறுத்தினார் என்ற குற்றச்சாட்டில் இராஜாங்க அமைச்சர் தனது பதவியை இழந்தார்.

-க.பொ.த. சாதாரண பரீட்சை முடிவுகளின்படி இந்தவருடம் 2.36.053 மாணவர்கள் உயர்தரம் கற்கத் தகுதி பெற்றுள்ளனர் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

-2021 ஜனவரி தொடக்கம் செப்டெம்பர் மாதம் வரை டெங்கு நோயினால் 10 பேர் பலி. 18.900 பேர் பாதிப்பு.

-மனிதர்கள் - யானைகள் மோதலில் இந்த வருடம் செப்டெம்பர் மாதம்வரை 285 யானைகளும் 72 மனிதர்களும் பலியாகியிருக்கிறார்கள்.

-நாட்டில் வருடாவருடம் 3.50.000 பேர் நாய் கடியால் பாதிப்பு. இதனால் சுகாதாரத்துறைக்கு 600 மில்லியன் ரூபா அளவில் செலவாகின்றது.

-2016 - 2020 ஆண்டுகளில் 44.610 சிறுவர் துஸ்பிரயோக முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக சிறுவர் பாதுகாப்புச் சபை அறிவித்துள்ளது.

-கடந்த வருடத்தில் தவறான செய்திகள், தவறான பதிவுகள், ஊடக மோசடி நடவடிக்கைகள் என சுமார் 14.284 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக அரச தகவல் தொழில்நுட்பப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

-இலங்கையில் 40 வீதமான உயிரிழப்புகள் இருதய நோய்களினால் ஏற்படுகின்றன. அதில் 10 வீதமானோர் நீழிவு நோயாளிகள் என ஆய்வு தெரிவித்துள்ளது.

-இலங்கையில் சுமார் 5.000 மெட்ரிக் தொன் சமைத்த-சமைக்கப்படாத உணவு வகைகள் தினமும் வெளியே கொட்டி வீண் விரயம் செய்யப்படுவதாக இலங்கை சுற்றுச்சூழல் அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

-யாழ் பல்கலைக்கழகம் அன்றைய பிரதமர் சிறீமா பண்டாரநாயக்கா அம்மையாரால் திறக்கப்பட்டு 47 ஆண்டுகள் நிறைவு. (1974.10.06) இது இலங்கையின் 6வது பல்கலைக்கழகம் ஆகும்.

-இலங்கையில் தற்போது சுமார் 60 லட்சம் குடும்பங்கள் வாழ்கிறார்கள். இவர்களில் 8 லட்சம் குடும்பங்களுக்குக் குடியிருப்பு வசதிகள் இல்லை. இவர்கள் மிகவும் வறுமையான நிலையில் வாழ்கிறார்களாம்.

-மலையகத்தின் குடியிருப்பு ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் 2 குழந்தைகள் உட்பட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 5 பேர் தீயில் கருகி இறந்துள்ளனர்.

-இலங்கை இராணுவம் 72வது ஆண்டு நிறைவைக் கொண்டாடியது. இத்தினத்தையொட்டி 8 பிரிகேடியர் உட்பட 10.936 பேருக்கு ஜனாதிபதியால் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.
-11.10.2021 தொடக்கம் வடமாகாணத்தின் புதிய ஆளுநராக தேர்தல் குழு உறுப்பினரான ஜீவன் தியாகராசாவை ஜனாதிபதி நியமித்துள்ளார். பதவியில் இருந்த திருமதி சார்ள்ஸ் தேர்தல்குழு உறுப்பினராகப் பதவி மாற்றப்பட்டுள்ளார்.
-இலங்கையில் வாழும் 8 பெண்களில் ஒருவருக்கு மார்பகப் புற்றுநோய் காணப்படுவதாக வைத்திய நிபுணர் குழு தெரிவித்துள்ளது.
-இலங்கையில் கடந்த 10 ஆண்டுகளில் சுமார் 27.000 பேர் வீதி விபத்துக்களால் உயிரிழந்திருக்கிறார்கள் என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.
-இலங்கையில் நாள் ஒன்றிற்கு சுமார் 25 சிறுவர்கள் பல்வேறு துஷ்பிரயோகங்களுக்கு ஆளாகின்றார்கள் என பொலிஸ் தரப்பினர் அறிவித்துள்ளனர்.

**கொரோனா - கோவிட்-19 இலங்கையில்..**

-கொரோ முடக்கத்தால் சராசரியாக 10 நாட்களுக்கு 15.000 கோடி ரூபா அரசுக்கு நட்டம் ஏற்படுகின்றதாம்.
-31.08.2021 வரை கொரோனாவால் இலங்கையில் 55 கர்ப்பவதிகள் இறப்பு. 900 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்றனர். 7.000 கர்ப்பவதிகள் பாதிப்பு. 90 வீதமான கர்ப்பிணிகள் தடுப்பூசி போட்டுள்ளனர்.
-கொரோனா காரணமாக 500 க்கும் மேற்பட்ட கிராமசேவை உத்தியோகத்தர்கள் பாதிப்பு.11.700 பொலிசார் பாதிப்பு. 28 பொலிசார் 31.08.21 வரை பலி.
-இலங்கையில் கொரோனாத் தொற்றால் இதுவரை 67 சிறுவர்கள் இறந்துள்ளனர். 59.000 சிறுவர்கள் பாதிப்பு.
-12.10.2021 வரை நாட்டில் 18 வயதிற்குட்ட இளையோர் 69.130 பேர் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தோர் விபரம்..

| | | |
|---|---|---|
| -1 மாதத்திற்குட்பட்டோர் | | - 17 பேர் |
| -1 மாதம் | - 1வருட வயதினர் | - 17 பேர் |
| -1 வருடம் | - 5 வருட வயதினர் | - 13 பேர் |
| -6 வருடம் | - 12 வருட வயதினர் | - 12 பேர் |
| -12 வருடம் | - 15 வருட வயதினர் | - 05 பேர் |
| -15 வருடம் | - 18 வருட வயதினர் | - 03 பேர் |
| | **மொத்தம்** | **- 67 பேர்** |

**-17.11.2021 வரை நாடு முழுவதுமாக இந்த நோயினால் 14.034 பேர் இறந்திருக்கிறார்கள். பாதிப்பு 5.53.000 பேர். குணமடைந்தவர்கள் 5.22.740 பேர்.**

# உலகச் செய்திகள் சில..

-உலகின் பருவநிலை மாற்றத்தால் சுமார் 100 கோடி சிறுவர்களின் கல்வி, சுகாதாரம், பாதுகாப்பு போன்றவைக்குப் பேராபத்து ஏற்படும் என ஐ.நா.சபையின் சிறுவர் பாதுகாப்பு அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

-14.08.2021 அன்று காபுல் நகரை தலிபான்கள் கைப்பற்றியதன் பின்பு சுமார் ஒரு லட்சம் ஆப்கானிஸ்தான் மக்கள் நாட்டைவிட்டு வெளியேறியுள்ளனர். இந்த வருட முடிவுக்குள் ஆப்கானைவிட்டுச் சமார் 5 லட்சம்பேர் வெளியேறுவார்கள் என ஒரு ஆய்வு குறிப்பிட்டுள்ளது.

-கடந்த ஒருவருடத்தில் தலிபான்களின் கெடுபிடிகளால் 550 சிறுவர்கள் பலி. 1.400 சிறுவர்கள் அங்கவீனர்களாகினர். ஒரு கோடி சிறுவர்களுக்கு மனிதநேய உதவிகள் தேவைப்படுவதாக ஐ.நா. அகதிகள் பிரிவு அறிவித்துள்ளது.

-ஆப்கானில் சுமார் 22 லட்சம் சிறுமிகள் உட்பட 42 லட்சம் சிறார்கள் பாடசாலை செல்லும் வாய்ப்பை இழந்துள்ளனர். மேலும் 10 லட்சம் சிறுவர்களுக்கு ஊட்டச்சத்து குறைபாடல் பாதிப்பு என ஐ.நா.சபையின் சிறுவர் அமைப்பு தெரிவித்துள்ளது.

-ஆப்கான் - பஞ்ஷீர் மாகாணத்தில் 6.9.21 ஒருவாரம் இடம்பெற்ற மோதல்களில் 600 தலிபான்கள் பலி. கடந்த 6 மாதங்களில் சுமார் 50 லட்சம் மக்கள் இடம்பெயர்வு.

-ஆப்கானில் தலிபான்களால் பெண்ணுரிமை மறுக்கப்படுவதைக் கண்டித்து பெண்களால் மாபெரும் ஆர்பாட்டப் பேரணி நடத்தப்பட்டது.

-ஆப்கான் பள்ளிவாசல் ஒன்றில் தற்கொலைக் குண்டுத்தாக்குதல் 50 பேர்வரை பலி.

-இந்தியாவில் கடுமையான சுற்றுச்சூழல் பாதிப்பால் இந்தியர்களின் ஆயுட்காலம் 9 ஆண்டுகள் குறைவடையும் என்று அமெரிக்க ஆய்வு ஒன்று குறிப்பிட்டுள்ளது.

-இந்தியாவில் கடந்த ஆண்டு மட்டும் 33.977 பாலியல் வழக்குகள் பதிவு. 15 நிமிடங்களுக்கு ஒரு வன்புணர்வுக் குற்றம் பதிவாகின்றதாம்.

-2020ம் ஆண்டில் இந்தியாவில் 28.046 பாலியல் சம்பவங்கள், 29.193 கொலைகள்,84.805 ஆட்கடத்தல்கள் என நிகழ்ந்துள்ளதாக மத்திய பாதுகாப்புத்துறை அறிவித்தது.

-எந்தியோப்பியாவில் இனரீதியான வன்முறைகளில் 31.8.21 ஒரு வாரத்தில்210 பேர்பலி

-உலக காலநிலை மாற்றம், வாழ்விட இழப்புக்கள் காரணமாக 30 வீதமான உயிரினங்கள் அழிவடையும் ஆபத்து. பல்லி, யானை, மீன், காட்டுமரங்கள் போன்ற உயிரினங்கள் அழியும் என ஐ.நா. சூழல்பாதுகாப்பு அமைப்பு தெரிவித்துள்ளது.

-கடந்த 50 ஆண்டுகள் வரலாற்றின் உலகில் இயற்கைப் பேரிடர்களால் சுமார் 20 லட்சம் பேர் இறந்திருப்பதாக ஐ.நா. தாபனம் அறிவித்துள்ளது. இதனால் எதிர்வரும் காலத்தில் சமார் 22 கோடி மக்கள் வாழ்விடங்களை இழப்பார்கள் என உலக வங்கி எச்சரித்துள்ளது.

-ஆபிரிக்க நாடுகளுக்கு 20 கோடி கொரோனா தடுப்பூசிகளை வழங்க ஐரோப்பிய யூனியன் முடிவு செய்துள்ளது.
ஆபிரிக்க நாடான கொங்கோ நாட்டில் ஆற்றில் படகு கவிழ்ந்த விபத்தில் 160 பேர் பலியாகினர்.
-வேலைச்சூழல், வேலைத்தள விபத்துக்களில் வருடாந்தம் 20 லட்சம்பேர் இறக்கிறார்கள் என உலக தொழிலாளர் தாபனம் தெரிவித்துள்ளது.
-உலகின் காற்று மாசுபடுவதால் தொடர்புடைய நோய்களின் தாக்கத்தால் வருடா வருடம் 70 லட்சம் மக்கள் இறக்கிறார்கள் என உலக சுகாதார தாபனம் தெரிவித்துள்ளது.
-தாய்லாந்தில் 30 மாகாணங்களில் கடும் மழை வெள்ளம் 70.000 வீடுகள் அழிவு.
-ஈக்குவடோர் நாட்டில் சிறைக் கைதிகள் கலவரத்தில் 116 பேர் பலி.
-ருமேனியாவின் முதலாவது பெண் பிரதமராக நஜீலா பவுடன் தெரிவானார்.
-பிரான்ஸ் திருச்சபையின் பாதிரிமார்களின் பாலியல் துஸ்பிரயோகங்களால் கடந்த 50 ஆண்டுகளில் 2.16.000 சிறுவர்கள் பாதிக்கப்பட்டனர் என சுயாதீன விசாரணையில் கண்டறியப்பட்டுள்ளது.
-2050ம் ஆண்டளவில் உலகில் சுமார் 500 கோடி மக்கள் தண்ணீர் இன்றிப் பாதிக்கப்படுவார்கள் என ஐ.நா.சபையின் ஆய்வு அறிக்கை குறிப்பிட்டுள்ளது.
-அமெரிக்காவின் கொரோனா பாதிப்பால் 1.2 லட்சம் சிறுவர்கள் தமது பெற்றோரை இழந்து ஆதரவற்றோராய் மாறியுள்ளனர்.
-உலகின் கொரோனா தொற்றால் மனிதரின் சராசரி உயர அளவில் 2 செ.மீ உயரம் குறைவடையும் என உலக சுகாதார தாபன ஆய்வு ஒன்று குறிப்பிட்டுள்ளது. தற்போது உலகில் உயரம் கூடிய மனிதர்கள் நெதர்லாந்து நாட்டவர்தான் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.
--இந்தோனிஷியா தீவு ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் 41 கைதிகள் பலி.
-சீனாவில் கடும் மழை வெள்ளம் 18 லட்சம் மக்கள் பாதிப்பு. 60 நிலக்கரிச்சுரங்கங்கள் மூடு. மின்சாரம் பாதிப்பு. கடந்த 9 மாதங்களில் சீனாவில் இடம்பெற்ற இயற்கை அழிவுகளால் 792 பேர் பலி. 17.50.000 வீடுகள் சேதம். 10.000 கெட்டயர் பயிர்ச்செய்கை பாதிப்பு, 8.87.400 கோடி பொருளாதாரம் இழப்பு.
-மத்திய கிழக்கு நாடான யெமன் நாட்டில் கடந்த 5 வருடங்களாகத் தொடரும் உள்நாட்டுப் போரால் பல்வேறு காரணங்களால் 10.000 சிறுவர்கள் இறந்துள்ளனர்.
-இந்தியா, நேபாளம் நாடுகளில் வெள்ளப்பெருக்கு நிலச்சரிவு 200 பேர்வரை பலி.
-கொரோனா தொற்றால் தெற்காசியாவில் சுமார் 40 கோடி சிறுவர்களின் எதிர்காலம் அபாயத்தில் உள்ளதாக ஐ.நா. சிறுவர் பாதுகாப்புச் சபை அறிவித்துள்ளது.
-கொரோனா பெருந்தொற்றால் உலகில் 10 கோடி மக்கள் வறுமைக்குத் தள்ளப்பட்டிருப்பதாக ஐ.நா.சபையின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

# வட மாகாணத்தின் புதிய ஆளுநர்..



**திரு ஜீவன் தியாகராஜா**

வட மாகாண ஆளுநர் (Governor of Northern Province) என்பவர் இலங்கையின் வட மாகாண சபையின் நிருவாகத்தைக் கவனிக்கவென இலங்கை அரசுத்தலைவரால் நியமிக்கப்படுபவரைக் குறிக்கும். 1987 ஆம் ஆண்டின் மாகாண சபைச் சட்டம் மற்றும் 13வது திருத்தச் சட்டம் ஆகியன ஆளுனரின் அதிகாரங்களை எடுத்துரைக்கின்றன.

ஜீவன் தியாகராஜா (Jeevan Thiagarajah) இலங்கைத் குடியுரிமைப் பணியாளரும், மனித உரிமை, சமூகச் செயற்பாட்டாளரும், வழக்கறிஞரும் தற்போதைய வட மாகாண ஆளுநரும் ஆவார். ஜீவன் தியாகராஜா இவர் இலங்கையில் அரசு சார்பற்ற நிறுவனங்களில் 1984 முதல் செயற்பட்டு வந்தார்.

இலங்கையின் அரசு சார்பற்ற அமைப்பான மனித உரிமைகள் நிறுவனத்தின் தலைவராகவும், மனிதநேய நிறுவனங்களின் கூட்டமைப்பின் நிர்வாக இயக்குநராகவும் பணியாற்றினார். 2020 டிசம்பரில் இலங்கை தேர்தல்கள் ஆணையத்தில் உறுப்பினராக நியமிக்கப்பட்டார். 2021 அக்டோபர் 11 இல் அரசுத்தலைவர் கோட்டாபய ராஜபக்ச இவரை 8-வது வட மாகாண ஆளுநராக நியமித்தார்.

## Sri lanka northern province governors..

| | | |
|---|---|---|
| Mohan Wijewickrama (acting) | January 2007 | 3 July 2008 |
| 1. Victor Perera | 3 July 2008 | 10 October 2008 |
| 2. Dickson Sarathchandra | 10 October 2008 | 12 July 2009 |
| 3. G. A. Chandrasiri | 12 July 2009 | January 2015 |
| 4. H. M. G. S. Palihakkara | 27 January 2015 | 16 February 2016 |
| 5. Reginald Cooray | 16 February 2016 | 31 December 2018 |
| 6. Suren Raghavan | 7 January 2019 | 20 November 2019 |
| 7- P. S. M. Charles | 30 December 2019 | 10 October 2021 |
| 8. Jeevan Thiyagarajah | 11 October 2021 | ----------------------- |

# மனிதநேயப்பணியில் இணைந்துகொண்டவர்கள்!..

தாயகத்தில் ஆதரவற்ற சிறார்களின் வாழ்நாள் மற்றும்கல்விச்செலவுகளைப் பொறுப்பேற்றுஉதவும் மனிதநேயப்பணிகளில் மண் சஞ்சிகையோடு இணைந்து கரம்கொடுத்துவரும் அன்பு உள்ளங்களை நேசத்துடன் வாழ்த்துகின்றோம்.எனவே நீங்களும் இந்தப்பணியுடன் இணைந்து உதவலாம். இதுவரை இத்திட்டத்தில் இணைந்து உதவிவரும் நல்லுள்ளங்களின் விபரம்....

01. திருமதி.சிவதர்சினி.பிராங்ளின் - ஜேர்மனி
ஒரு பிள்ளையின் வருடாந்த முழுச்செலவு- வவுனியா) - 480-00

02. செல்வன்.நகுல்.துரையரங்கன் - ஜேர்மனி
ஒரு பிள்ளையின் வருடாந்த முழுச்செலவுதிருகோணமலை - 480-00

03. செல்வி.அஜந்தி.அழகராசா - பிரித்தானியா
ஒரு பிள்ளையின் வருடாந்த முழுச்செலவு- மன்னார் - 480-00

04. திருமதி.பிரிந்தாவனி.ஏகானந்தராசா - ஜேர்மனி
ஒரு பிள்ளையின் வருடாந்த முழுச்செலவு - வவுனியா - 480-00

06. செல்வி அனிதா றஞ்சன் - ஜேர்மனி
ஒரு பிள்ளையின் வருடாந்த முழுச்செலவு - மட்டக்களப்பு - 480-00

07. திருமதி ஸ்ரெவ்வானி இம்மானுவல் - ஜேர்மனி - 480-00
ஒரு பிள்ளையின் வருடாந்த முழுச்செலவு - வவுனியா

08. திரு. Johannas Gruendler - ஜேர்மனி - 480-00
ஒரு பிள்ளையின் வருடாந்த முழுச்செலவு - வவுனியா

09. செல்வி.சுகிர்தா தவராஜ் - ஜேர்மனி
ஒரு பிள்ளையின் வருடாந்த கல்விச்செலவு- கிளிநொச்சி - 200-00

10. செல்வன். சியாந்த் எமில் சர்வானந்தன் - ஜேர்மனி
ஒரு பிள்ளையின் வருடாந்த கல்விச்செலவு- வவுனியா - 200-00

11. செல்வன் பிரணவன் யோகராசா - ஜேர்மனி
ஒரு பிள்ளையின் வருடாந்த கல்விச்செலவு- வவுனியா - 240-00

# ஆதரவற்றோர் நிதி உதவிக் கணக்கு..

ஆரம்ப இருப்பு 01-09-2021 (மேலதிகச் செலவு) - 494-97

அன்பளிப்புகள்:-

01. திருமதி. சிவதர்சினி பிராங்ளின் - Duisburg + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
02. செல்வி. அனித்தா ரஞ்சன் - Duisburg + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
03. திருமதி.ஸ்ரெவ்வானி.இம்மானுவல் - Essen + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்தஅன்பளிப்பு)
04.திருமதி அஜந்தி பத்மநாதன் - London + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்தஅன்பளிப்பு)
05. திருமதி பிரிந்தாவனி ஏகானந்தராசா - Weeze + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
06. திரு. Johannas Gruendler - Köln + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)------------------------------

480-00 + 480-00

-------------

\- 14-97

07.திருமதி மீரா நித்தியானந்தன் - Mülheim-Ruhr
(தாயாரின் ஓராண்டு நினைவு அன்பளிப்பு) (50.000-00 ரூபா) + 222-00
08.திரு சு.பிரபாகரன் - Oberhausen
(தந்தையாரின் ஓராண்டு நினைவு அன்பளிப்பு)(33.422-51 ரூபா) + 150-00
09.திருமதி சுசிகலா கிருஸ்ணகுமார் - Duisburg
(கணவனின் இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி அன்பளிப்பு
(20.000-00 ரூபா) + 92-94
10. செல்வி லாவண்யா அற்புதராசா -Soest
(பிறந்தநாள் அன்பளிப்பு) + 50-00

11.செல்வி காலா றியா சிவாஸ்கர் -Duisburg
(பிறந்தநாள்அன்பளிப்பு) + 125 -00

12 . திருமதி பிங்கலை செந்திலன் -Kitzingen + 100-00

-------------------

\+ 724-97

-மீதி + 724-97

அனுப்பியது..

(1) "ஒளிரும்" இல்லம் 17.9.21 (50.000-00 ரூபா) - 221-94

31.10.21 (33.422-51 ரூபா) - 150-00

துணுக்காய் - மல்லாவி -முல்லைத்தீவு

(2) "செபமாலை" இரக்கத்தின் இல்லம் சிறுவர்காப்பகம் - 92-94

(20.000-00 ரூபா)பேசாலை - தலைமன்னார்

(3) "திருஞான சம்பந்தர்" குருகுலம் சிறுவர் காப்பகம்

- மட்டக்களப்பு - 480-00

(4) இந்து அன்பகம் சிறுவர் நலன்புரி நிலையம்

"அன்பகம்" சிறுவர் காப்பகம்(43,947-75ரூபா)-வவுனியா - 200-00

(5) "கந்தையா-கனகம்மா" நிதியம்(50.000-00ரூபா)-தென்மராட்சி

(கல்வி, சமூக மேம்பாட்டு நிறுவனம்) - 225-00

----------

- 1369-88

9.9.2021ல் அருளகம்-வவுனியா, மரியன்னை இல்லம்- மன்னார் இரு இல்லத்திற்கும் 480-00+480-00அனுப்பிய பணத்திற்கு வங்கியால் கழிக்கப்பட்ட வங்கிக்கூலி 20.00 + 20.00 - 40-00

"மண்" சஞ்சிகை கணக்கு வங்கிவரி:--

01.09.2021 - 30.09.2021 - 13.93

01.10.2021 - 31.10.2021 - 11.76 - 25-69

---------------------------------------

- 1435-57 -1435-57

--------------

மிகுதி கையிருப்பு 31-10-2021 (மேலதிகச் செலவு) -- **710-60**

---------------

## அன்பான வாசகர்களே!..

நமது தாய்நாட்டில் கொரோனா கோரப்பிடியுடன், மழைவெள்ளம் ஏற்பட்டுப் பெருந்தொகை வறிய மக்கள் பெரும் துன்பத்தை எதிர்கொண்டிருக்கிறார்கள். பாதிக்கப்பட்ட மக்களுக்கு கிறிஸ்மஸ் மற்றும் தைப்பொங்கலுக்கு சிறிது உதவி செய்யவேண்டியது புலம்பெய்ந்துவாழும் மக்களின் மனிதநேயக்கடமையாகும். நத்தார்-புதுவருட கொண்டாட்டங்களுக்காக நீங்கள் செலவு செய்யவிருக்கும் தொகையில் சிறு தொகையை இந்த மக்களுக்கு உதவ எம்மோடு சேர்ந்து உதவும்படி அன்பாகக் கேட்டுக் கொள்கிறோம்!.. -ஆசிரியர்-

சிவமயம்



# ஸ்ரீ அகிலாண்டேச்வரி அருளகம்
# SRI AGILANDESHWARY ARULAHAM

அருள்மிகு அகிலாண்டேச்வரி சமேத அகிலாண்டேசுவரர் திருக்கோவில்
ARULMIHU AGILANDESHWARY SAMETHA AGILANDESUVARAR THIRUKOVIL

Reg No. NEP/PCC/CH/125
Kovilkulam,
Vavuniya. Sri Lanka
T.P : 0094 24 - 2221685
077 2382051

"May we protect tender hearted children with compassion"

கோவில்குளம், வவுனியா,
இலங்கை.

Bank Details: Bank of Ceylon - Vavuniya. A/C No. 0002364895

Secretary T.P : : 0776567827

Patrons
Mr.K.A.Thiyagarasa, President,
(Hereditary Trustee),
(Nainai Nagapoosani Amman Kovil)

Hony.President
Kailai.Mr.K.A. Umathevan
(Hereditary Trustee)

Hony.Vice President
Mr.S. Sripathinathan

Hony.Secretary
Mr.K.A.Navaratnarajah
(Hereditary Trustee)

Hony. Asst.Secretary
Mr. S. Sureshkumar
(Hereditary Trustee)

Hony. Treasurer
Mr.S.Annalingam

Commitee Members
Mr.P.Murugaraj
Mrs.T.Ramanathan
Mr.A.Sooriyakumar
Mr.N.Sureshinthiran
Mr.T.Achchuthan
Mr.S.Srirangasnathan
Mr.S.Kajenthiran
Mr. P. Sivakengatharan
Mr. V. Aadhavan

Administrator
Mr.R.Loganathan

September 20,2020

Mr.V.சிவராஜா அவர்கட்கு,

மண் சஞ்சிகை,

ஜேர்மனி.

அன்பான வணக்கம்,

**அபிராமியின் பராமரிப்பு நிதி உதவி – 480 யூரோ**

மேற்படி இல்லத்திலுள்ள செல்வி அபிராமியின் பராமரிப்பிற்கு தங்கள் சஞ்சிகையின் வாசகர் தொடர்ந்து அன்பளிப்பு செய்துவருவதை மனதாரபோற்றுகின்றோம். அபிராமி தற்போது க.பொ.த.உயர்தரம் கற்றுவருகின்றா.

இல்லத்தில் பராமரிக்கப்பெற்றுவரும் பிள்ளைகள் அனைவரும் நலமாகவுள்ளனர்.

இம்முறையும் வாசகரின் உதவியுடன் தாங்கள் எமது வங்கி கணக்கிற்கு அனுப்பி வைத்த பணம் ரூபா **480 யூரோ** நன்றியுடன் பெற்றுக்கொண்டோம்.

மேற்படி பணத்திற்கான பற்றுச்சீட்டு அனுப்பி வைக்கின்றோம்.

தங்களின் தொடர் உதவிக்கு எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்வதோடு, தாங்களும், பணம் அன்பளிப்பு செய்துவரும் அன்பர்களும் நலமாகவாழ அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேஸ்வரப்பெருமான் அருள்புரிவாராக.

நன்றி

இங்ஙனம்

(ஆ.நவரெத்தினராசா)

குறிப்பு :- தாங்கள் ஜூலை மாதம் அனுப்பி வைத்த பணம் 480 யூரோவுக்கான பற்றுச்சீட்டும், நன்றிக்கடிதமும் பிள்ளைகளின் கடிதமும் ஆகஸ்ட் மாதத்தில் அனுப்பி வைத்துள்ளோம்.

www.akilaandeswaram.com arulaham@gmail.com Sivankovilkovilkulam

ஒளிரும்வாழ்வு அமைப்பு - துணுக்காய்
ඔළිරුම්වාළ්වු සංවිධානය - තුණුක්කායි
Olirumvaalvu Organization - Thunukkai

Re.No:- MU/DS/TNK/RVSS/22/2015
T.P:- [illegible]
Mobile:- [illegible]
Fax No:- [illegible]
Viber:- [illegible]


திகதி [illegible]

"மண்" கல்வி கலை இலக்கிய சமூக சஞ்சிகை

ஜேர்மனி


நன்றி நவில்கிறோம்

எமது ஒளிரும் வாழ்வு அமைப்பு மாற்றுத்திறனாளிகள், பெற்றோரை இழந்த பிள்ளைகள், பெண்தலைமைத்துவ குடும்பங்கள், நலிவுற்ற குடும்பங்கள் ஆகிய இலக்கு குழுவினர் மத்தியில் பணியாற்றி வருகிறது. அந்த வகையில் தங்களது ஏற்பாட்டில் அன்பளிப்பு நிதியாக வழங்கிய ரூபா 50,000.00ஐ பயன்படுத்தி உலருணவு உள்ளடங்கிய நிவாரணப்பொதிகளை தற்கால சூழலில் ஒருவேளை உணவிற்கே இயலாமல் வாழ்ந்துகொண்டிருக்கும் நலிவுற்ற குடும்பங்களிற்கு வழங்கப்பட்டதுடன் பெண்கள் விடுதியில் தங்கியுள்ள ஆதரவற்ற பிள்ளைகளிற்கும் மதிய உணவு வழங்கப்பட்டது என்பதை பெருமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம். தொடர்ந்தும் தங்களின் ஆதரவை எதிர்பார்ப்போடு என்றும் நன்றியுடையவர்களாக இருப்போம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம். அத்துடன் அமரர் கோபாலசாமி விஜயலட்சுமி அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கிறோம்

நன்றி

தலைவர்
ஒளிரும் வாழ்வு அமைப்பு
துணுக்காய்


Web:- www.olirumvaalvu.com Facebook:- olirumvaalvu thunukkai
E.Mail:- olirumvaalvuthunukkai2012@gmail.com



உ சிவமயம் Aum Sivamayam

அருள்மிகு அகிலாண்டேச்வரி சமேத அகிலாண்டேசுவரர் திருக்கோவில்
ARULMIHU AGILANDESHWARY SAMETHA AGILANDESUWARAR THIRUKOVIL

ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி அருளகம் - சிறுவர் இல்லம்
SRI AGILANDESWARY ARULAHAM - CHILDREN HOME

தொ.பே.இல/ T.P.Number 0094 24 2221685
E-mail: arulaham@gmail.com

கோவில்குளம், வவுனியா, இலங்கை.
Kovilkulam, Vavuniya, Sri Lanka.

**RECEIPT பற்றுச்சீட்டு**

திகதி / Date : 20/09/2021

Received with thanks from

திரு/திருமதி/செல்வி Mr.Mrs.Miss : MR. V. SIVARATHA of

விலாசம் Address : "MANN" (Erde) Magazine GERMANY

அவர்களிடமிருந்து ரூபாய் Rupees : Four Hundred Eighty Euro.

சதம் Cts :

on account of [illegible] 2021 ஆண்டு. கணக்கால் நன்றியுடன்பெற்றுக்கொண்டேன்.

வங்கி Bank : ......... காசோலை இல Cheque No : ......... திகதி Date : .........

உறொக்கம் / காசோலை 480 Euro.

ரூபா Rs. 112,322.38

21786 Bank of Ceylon

S. Akila
முகாமையாளர் Manager



ஒளிரும் வாழ்வு அமைப்பு - துணுக்காய்
Olirumvaalvu Organizaions - Thunukkai
Gmail:-olirumvaalvu.Thunukkai@gmail.com

T.P:021 206 0620
Reg No: MU/DS/TNK/RVSS/22/2015

பற்றுச் சீட்டை

திகதி: 21/09/2021

பெயர்:- அமரர் கோபாலசாமி [illegible] தொ.இல.

முகவரி:- ஜேர்மனி [மண் சஞ்சிகை]

விபரம்:- முதலாம் ஆண்டு நினைவு நாளிற்கான உணவுக்கான அன்பளிப்பு.

தொகை எழுத்தில்:- ஐம்பதாயிரம் ரூபா மட்டும். மட்டும்
பெற்றுக்கொண்டேன்.

ரூபா 50,000/=

பணம் வழங்கியவர் ஒப்பம்

1575 [illegible]
பொருளாளர் ஒப்பம்
ஒளிரும் வாழ்வு அமைப்பு
துணுக்காய்



## அவுஸ்த்திரேலியா சம்பியன் கிண்ணத்தை வென்றது!..

Cricket-T-2o World Cup-2021 United Arab Emirates - Dubai / Sharjah

**கிரிக்கட் T-2o உலக கிண்ணப் போட்டி - 2021..**

கிரிக்கட் அல்லது துடுப்பாட்டம் என்று அழைக்கப்படும் இப்போட்டியானது இவ்வருடம் மத்திய கிழக்கு நாடான ஐக்கிய அரபுக்குடியரசின் (United Arab Emirates ) இரண்டு நகரங்களான டுபாய், சார்ஜா (Dubai / Sharjah) நகரங்களில் 17.10.2021 திகதியில் ஆரம்பித்து 14.11.2021 ஞாயிற்றுக் கிழமை முடிவடைந்தது. இப்போட்டியில் அவுஸ்திரேலியா நாட்டு கிரிக்கட்அணி வெற்றிவாகை சூடியது.

16 நாடுகள் கலந்து கொண்ட இறுதிப்போட்டியில் நியூசிலாந்து அணியுடன் அவுஸ்த்திரேலியா அணி மோதியதில் நியூசிலாந்து அணி 20 ஓவர்களில் 172 ஓட்டங்கள்பெற, அவுஸ்த்திரேலிய அணி 18.2 ஓவர்களில் 173 ஓட்டங்களைப் பெற்று வெற்றிபெற்றது. இந்த T.20 உலககிண்ணத்தை அவுஸ்த்திரேலியா முதன்முறையாகப் பெற்றுக்கொண்டது என்பதும் குறிப்பிடத்தக்கவிடையமாகும்.

2007ம் ஆண்டு முதன் முறையாக இந்த T-20 கிரிக்கட் போட்டியானது தென்னாபிக்காவில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இறுதியாக 2016 இந்தியாவில் நடைபெற்ற போது இங்கிலாந்து அணியை வீழ்த்தி மேற்கிந்தியதீவுகள் அணி வெற்றிவாகை சூடியிருந்தது.

2020ம் ஆண்டில் நடக்க இருந்த போட்டி உலகை அச்சுறுத்திய கொரோனா-கோவிட்-19ன் தாக்கத்தால் நடைபெறாமல் பின்போடப்பட்டு, இந்த வருடம் 17.10.2021 தொடக்கம் 14.11.2021 வரை டுபாய் மற்றும் சார்ஜா நகரிலும் சிறப்பாக நடைபெற்று முடிவடைந்துள்ளது.

# தமிழ்ப்பெண் எழுத்தளர்கள் விபரத்திரட்டு!...
# யேர்மனிய தமிழ்ப்பெண்களுக்கு அரிய வாய்ப்பு!..




யேர்மனியில் வாழ்ந்துகொண்டிருக்கும் பெண் எழுத்தாளர்களின் விபரப்பட்டியல்இதுவரை காலமும் எவராலும் தயாரிக்கப்பட்டு, ஆவணப்படுத்தப்படவில்லைஎன்பது துர்அதிஸ்டவசமே. பெண்களில் திறமைகள், ஆளுமைகள்,கல்விப்பணிகள், இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழ்ப் பணிகள்,சமூகப்பணிகள் எனப்பல்வேறு பொதுப்பணிபணிகளைச் செய்துவரும் தமிழ்ப்பெண்களை உலகம்வாழ் நம்மக்களுக்கு அறியப்படுத்த வேண்டியது காலத்தின்கட்டாயாகும்.

யேர்மனியில் வாழ்ந்துவரும் தமிழ்ப்பெண்களில் பல பெண்கள் கவிஞர்கள், எழுத்தாளர்கள், கல்வியாளர்கள், இலக்கியவாதிகள்,பேச்சாளர்கள், பொதுப்பணியாளர்கள், ஆன்மீகவாதிகள், ஊடகவியலாளர்கள் எனப் பல்வகை ஆளுமை மிக்கவர்களாகக் காணப்படுவது சிறப்பான அம்சமாகும்.எனவே இப்பணிகளில் ஈடுபட்டுவரும் தமிழ்ப்பெண்களின் விபரத்திரட்டு ஒன்றைவெளிக் கொண்டுவரும் முயற்சியில்,ஆவணப்பதிவு ஒன்றைத்தயாரித்து நூலாக உருவாக்கும் பணியில் ஈடுபட்வருகிறோம்.

நீங்களும் உங்கள் தகவல்கள், தரவுகளைத் தந்து உதவினால் இப்பதிவில் சேர்த்துக் கொள்ளப்படும் என்பதை மகிழ்வுடன் அறியத்தருகிறோம்.காலம் தாழ்த்தாது விரைவாகத் தங்கள் தகவல்களை அனுப்பி உதவலாம்... நன்றி!..

**திருமதி சாந்தினி துரையரங்கன்.** Essen - Germany.

மின்னஞ்சல் niruthiyam@hotmail.de ”மண்”சஞ்சிகை” v.sivarajah@arcor.de

(இதுவரை (6) ஆறு தமிழ்ப் பெண்களின் விபரங்கள் வெளிவந்துவிட்டன)




”மண்” சஞ்சிகையின் வாசகரும் யேர்மனி-முல்கைம் நகரில் வசிப்பவருமான திருமதி மீரா நித்தியானந்தனின் நிதிப்பங்களிப்பில் முல்லைத்தீவு மாவட்டம் துணுக்காயில் அமைந்துள்ள ஒளிரும் இல்லத்தில் வசிக்கும் மாற்றுத்திறனாளிகள், முதியோருக்கான உணவளித்தல் நிகழ்வு 26.09.2021.





Wissen, Kultur & Literatur • கல்வி, கலை, இலக்கிய சமூக இருமாத இதழ்

# ERDE

MANN
Germany / Ausgabe 210

## Merry Christmas and a Happy New Year

## கிறுஸ்துமஸ் மற்றும் புதுவருட வாழ்த்துக்கள்

| | | |
|---|---|---|
| வருட சந்தா | ஜேர்மனி | 20€ |
| | ஏனைய நாடுகள் | 25€ |